உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் : ௫. | பிரபவ – புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை. | மலர் : ௬, ௭, ௮. |
| --- | --- | --- |

## சுந்தரமூர்த்திகளது காலம்.

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

சைவ சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகள் அறுபான்மும்மை நாயன்மார்களுள் இறுதியில் வாழ்ந்தவரென்பது அவர் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையால் நன்கு விளங்குகின்றது. அப்பெரியார் இந்நிலவுலகில் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதி என்று தஞ்சை ராவ்பகதூர் K. S. சீநிவாசபிள்ளை அவர்கள் தமது 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் கூறியுள்ளார். திருவாங்கூரில் கல்வெட்டிலாகாவிற்றுத் தலைவராயிருந்து காலஞ்சென்ற T. A. கோபிநாதராயர் அவர்கள் அவ்வடிகளது காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகுமென்று 'செந்தமிழ்' மூன்றாந்தொகுதியில் வரைந்துள்ளார். ஆகவே, இவ்விரு ஆராய்ச்சியாளரும் சற்றேறக்குறைய ஒத்த கொள்கையினர் ஆவர் என்பது வெளிப்படை.

இனி, அடிகள் காலத்தை ஆராய்ந்து காண்டற்கு இன்னோர் எடுத்துக்கொண்ட கருவிகளை நிரலே ஆராய்ந்து அவற்றின் வன்மை மென்மைகளைக் காண்பாம். சேரமான் பெருமாள் நாயனார் என்று வழங்கும் கழறிற்றறிவார் காலத்தில் பாண்டிநாட்டில் அரசுபுரிந்தவன் வரகுணபாண்டியன் என்பதும், கழறிற்றறிவார்க்குப் பெருநட்பினராகிய சுந்தரமூர்த்திகளும் அப்பாண்டியன் காலத்தவரேயாதல் வேண்டும் என்பதும் அவர்கள் கூறும் கருவிகளுள் முதன்மையானவைகளாம். கழறிற்றறிவார் சுந்தரமூர்த்திகளுக்கு நட்பினராகவிருந்து அவருடன் திருக்கைலை சென்றவர் என்பது பெரியபுராணத்தால் அறியக்கிடக்கும் உண்மையாதலின், அதிற்சிறிதும் ஐயமில்லை. ஆனால், கழறிற்றறிவார் காலத்தில் மதுரைமாநகரில் வாழ்ந்த பாண்டிமன்னன் வரகுணன் ஆவன் என்று அன்னோர் கூறுவது தக்க வலியுடைத்தன்று. பெரியபுராணத்தின் ஆசிரியாகிய சேக்கிழார், சுந்தரமூர்த்திகளும் கழறிற்றறிவாரும் பாண்டிநாட்டில் உள்ள திருக்கோயில்களை வணங்குதற்கு மதுரைக்குச் சென்றிருந்தபோது பாண்டிய அரசனும், அவனது மகளை மணந்து அங்குத்தங்கியிருந்த சோழமன்னன் ஒருவனும் அவ்விரு பெரியாரையும் வரவேற்றுத் திருக்கோயிலுக்கு அழைத்துப்போயினர் என்று கூறியுள்ளார். ஆனால், அந்நாளில் ஆட்சிபுரிந்துவந்த பாண்டிமன்னன் இன்னவன் என்றாதல், அங்கிருந்த சோழன் இன்னவன் என்றாதல் அவ்வடிகள் வெளிப்படையாகக் கூறிச்சென்றாரில்லை*. எனவே, புலவர் பெருமானாகிய சேக்கிழாருக்கு அன்னோர் யாவர் என்றுரைத்தற்குரிய கருவிகள் அப்போழ்தே கிடைக்கவில்லை என்பது நன்கு புலப்படுகின்றது.

---

* தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்
அன்னவர்க ளுடன்கூட வணையவவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தடைந்தார்.

பெரியபுராணம், கழறிற்றறிவார், 92.

இனி, அந்நாளில் பாண்டியநாட்டில் அரசுசெலுத்தியவன் வரகுணபாண்டியன் என்று தெரிவித்தவர், திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியராகிய பரஞ்சோதிமுனிவர் ஆவர். அவர் கூறுவது—

மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவலானிற் பொலியுநா ளேம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதினோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

என்பது. திருவிளை, விறகுவிற்ற, 2.

பரஞ்சோதிமுனிவர் சேக்கிழாரடிகட்குப் பலநூற்றாண்டுகட்குப் பின்னவர் இருந்தவர். கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நம் சேக்கிழார் பெருமான் அறிந்துகொள்ள முடியாமலிருந்த செய்திகளை மிக அண்மைக் காலத்தில் நிலவிய பரஞ்சோதிமுனிவர் எங்ஙனம் கூறவல்லாராயினரோ அறியேம். இங்ஙனம் இம்முனிவர் கூறும் செய்திகள் பலவும், வரலாற்றுண்மைக்கு முரண்பட்டிருத்தலை ஆராய்ச்சியாளர் பலரும் நன்குணர்வர்.

இனி, திருஞானசம்பந்தரால் வெப்புநோயினின்று காப்பாற்றப்பட்டவன், கூன்பாண்டியன் என வழங்கும் சுந்தரபாண்டியன் ஆவன் என்று பரஞ்சோதிமுனிவர் கூறியுள்ளார். இம்முனிவரே, அரிமர்த்தனபாண்டியனிடத்தில் திருவாதவூரர் அமைச்சராயிருந்தனர் என்றுணர்த்தியுள்ளார். சுந்தர பாண்டியற்குப் பத்துத் தலைமுறைகட்கு முந்தியவன் அரிமர்த்தனபாண்டியன் என்பது அத்திருவிளையாடற் புராணத்தால் அறியக்கிடக்கின்றது. இவ்வரிமர்த்தனபாண்டியற்கு நாற்பத்துமூன்று தலைமுறைகட்கு முன்னர் வாழ்ந்தவன் வரகுண பாண்டியன் என்றும், கழறிற்றறிவாரும் அவரது நண்பராய சுந்தரமூர்த்திகளும் இவ்வரகுணன் காலத்தினராவர் என்றும் அப்புராணம் கூறுகின்றது. ஆகவே, திருஞானசம்பந்தர் காலத்தினனாகிய சுந்தரபாண்டியற்கு ஐம்பத்துமூன்று தலைமுறைகட்கு முன்னர் வாழ்ந்தவன் சுந்தரமூர்த்திகள் காலத்தினனாகச் சொல்லப்படும் வரகுண பாண்டியன் என்பது, திருவிளையாடற் புராணமுடையாரது முடிபாகும். தலைமுறை

ஒன்றிற்கு முப்பது ஆண்டுகளாகக்கொண்டு காலத்தைக்கணக்கிடுவதுதான் பொருத்தமுடைத்து என்று வரலாற்றுநூல் வல்லார் கூறுகின்றனர். எனவே, சுந்தரமூர்த்திகள் திருஞானசம்பந்தருக்கு 1590 ஆண்டுகட்கு முன்னர் இந்நிலவுலகில் வாழ்ந்தவர் என்பது திருவிளையாடற் புராணத்தால் அறியக்கிடக்கும் செய்தியாகும்.

திருஞான சம்பந்தர் திருக்கோலக்காவிற் பொற்றாளம் பெற்றதையும்*, திருவீழி மிழலையில் படிக்காசு பெற்றதையும்† சுந்தரமூர்த்திகள் தாம் பாடியுள்ள தேவாரப் பதிகங்களில் குறித்திருத்தலோடு திருத்தொண்டத் தொகையில் அவ்வடிகட்கு வணக்கமுங் கூறியுள்ளனர். எனவே சுந்தரமூர்த்திகள், திருஞான சம்பந்தருக்குப் பல ஆண்டுகட்குப் பின்னர் வாழ்ந்தவராதல் வேண்டுமென்பது, அகச்சான்று கொண்டு நன்கு துணியப்படும். இத்துணைச் சிறந்த ஆதாரங்கட்கு முரணாகத் திருவிளையாடற் புராணமுடையார் கூறுவது சிறிதும் உண்மை யுடைத்தன்று. ஆகவே, சுந்தரமூர்த்திகள் வரகுணபாண்டியன் காலத்தினர் அல்லர் என்பது வெளியாதல் காண்க. அன்றியும் திருவிளையாடற் புராணம் செந்தமிழ் வளஞ்செறிந்த சிறந்த நூலாதலின் தமிழ்மொழிப் பயிற்சிக்குப் பயன்படுமேயன்றி, வரலாற்று ஆராய்ச்சிக்குச் சிறிதும் பயன்படாதென்றுணர்க. இவ்வுண்மையைத் 'தமிழ் வரலாற்'றின் ஆசிரியரும் நன்குணர்ந்துரைத்திருப்பது பெரிதும் பாராட்டற்பாலதாகும்.

---

* நாளுமின்னிசை யாற்றமிழ்பரப்பு ஞானசம்பந்தனுக்குலகவர்முன்
தாளமீந்தவன் பாடலுக்கிரங்குந் தன்மையாளனை யென்மனக்கருத்தை
யாளும் பூதங்கள் பாடநின்றாடும் அங்கணன்றனை யெண்கணமிறைஞ்சும்
கோளிலிப்பெருங் கோயிலுள்ளானைக் கோலக்காவினிற் கண்டு
கொண்டேனே.
திருக்கோலக்கா, 8.

† பரந்தபாரிட மூரிடைப்பலிபற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்தநான்மறையோர்க் கிடமாய திருமிழலை
இருந்துநீர் தமிழோடிசை கேட்குமிச்சையாற் காசுநித்தனல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே.
திருவீழிமிழலை, 8.

இனி, சுந்தரமூர்த்திகள் பாடியுள்ள—

கருமையார் தருமனார் தமர்நம்மை கட்டியகட் டறுப்பிப் பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல் பூண்ட
உரிமையார் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.

என்னும் திருப்பாட்டால் அடிகள் காலத்தில் பல்லவரது ஆட்சி தளர்ச்சியுறத் தொடங்கிற்றென்றும், அதனால் அன்னோர்க்குக் குறுநில மன்னர்கள் திறைசெலுத்த மறுத்தனர் என்றும், பல்லவர்களுள் நந்திவர்மன் (780—830) ஆட்சிக்காலத்தில்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் ஆகவே அடிகள் நந்திவர்மனது ஆட்சியின் இறுதிக்காலமாகிய கி. பி. 825-ல் வாழ்ந்தவராதல் வேண்டுமென்றும் அன்னோர் கூறுகின்றனர்.

அடிகள் தம்காலத்துப்பல்லவ மன்னன் போர்வலிமையற்றவன் என்றாதல் அவனுக்குக் குறுநில மன்னர்கள் திறைகொடுக்க மறுத்தனர் என்றாதல் அப்பாடலில் கூறினாரில்லை; ஆனால் தம் காலத்துப் பல்லவ அரசனைச் சார்ந்தோர்க்குத் திருச்சிற்றம்பலத்தெம்பெருமான் அருள்புரிபவராகவும் அவனோடு முரணிப்பகைஞாயினர்க்கு அருள்புரியாது தண்டனைவிதிப்பவராகவும் இருந்துள்ளமையை நன்கு விளக்கி அம்மன்னனது ஒப்புயர்வற்ற சிவபக்தியின் மாட்சியைத் தெரிவித்துள்ளார். ஆகவே அடிகளது திருப்பாடலுக்கு அன்னோர் கொண்டபொருள் சிறிதும் பொருந்தாமையின் அப்பெரியார் நந்திவர்மப் பல்லவன் காலத்தினர் அல்லர் என்பது தெளிவாதல் காண்க.

இனி, சுந்தரமூர்த்திகள் வாழ்ந்தகாலம் யாதென ஆராய்வாம். அடிகள் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையில், 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்குமடியேன்' என்று கூறியிருக்கின்றனர்; இவ்வடியில் வந்துள்ள 'காக்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்சம், காடவர்கோனாகிய கழற்சிங்கன் அடிகள் காலத்து மன்னன் என்பதை இனிது உணர்த்துகின்றது.

காடவர் என்பது பல்லவர்களுக்குரிய பெயர்களுள் ஒன்றாகும். ஆகவே, இக்கழற்சிங்கன் பல்லவ அரசனாயிருத்தல் வேண்டும். அன்றியும் இவ்வேந்தன் அறுபத்துமூன்று அடியார்களுள் வைத்துச் சுந்தரமூர்த்திகளால் போற்றப்பட்டிருத்தலின் சிறந்த சிவபத்தனாகவும் இருத்தல் வேண்டும். இனி, நம் தமிழகத்தில் அரசாண்ட பல்லவ மன்னர்களுள் கழற்சிங்கன் என்ற பெயருடையவன் ஒருவனுமில்லை. ஆனால் நரசிங்கவர்மன் இராசசிங்கவர்மன் என்ற பல்லவ வேந்தர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் முதல் நரசிங்கவர்மன் திருஞானசம்பந்தர் காலத்தினனாதலின் சுந்தரமூர்த்திகள் அவ்வரசன் காலத்தினரல்லர் என்பது திண்ணம். ஆகவே, அடிகள் இராசசிங்கன் காலத்தினராதல் வேண்டும். இவ்வேந்தனை இரண்டாம் நரசிங்கவர்மன் என்றும் முதல் இராசசிங்கவர்மன் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இவனே காஞ்சியிலுள்ள கைலாய நாதர் கோயிலை எடுப்பித்தவன். இஃது அக்காலத்தில் இராசசிம்ம பல்லவேச்சுரம் என்னும் பெயருடையதாயிருந்தது. இக்கோயிலில் இவனது கல்வெட்டொன்று வடமொழியில் வரையப்பட்டுளது. அஃது இவ்வேந்தனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்கின்றது. [South Indian Inscriptions Volume I No. 24]. இங்ஙனமே மகாபலிபுரம் என வழங்கும் மாமல்லபுரத்தில் இவனெடுப்பித்த இராசசிம்ம பல்லவேச்சுரம் என்ற திருக்கோயிலிலுள்ள கல்வெட்டும் பனைமலைக் கோயிலிலுள்ள கல்வெட்டும் இவனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்தல் ஈண்டு அறியத்தக்கது. காசாக்குடிச் செப்பேடுகள் பரமேச்சுரனை இராசசிங்கப்பல்லவனாக அவதரித்துள்ளானென்று சிறப்பித்துக் கூறுகின்றன. [S. I. I. Volume II No. 73]. உதயேந்திரஞ் செப்பேடுகள் இவனைப் 'பரமமாகேச்சுர' னென்று புகழ்ந்துரைக்கின்றன. [S. I. I. Volume II No. 74]. வேலூர்ப் பாளையம் செப்பேடுகள் இவன் சிவபெருமானுக்குக் காஞ்சி மாநகரில் கைலாயத்தை யொத்த திருக்கோயிலொன்றை எடுப்பித்த பெருமையுடையவன் என்றுணர்த்துகின்றன. [S. I. I. Volume II No. 98]. இக்கைலாயநாதர் திருக்கோயிலில் நரசிங்கவர்மனுக்கு அந்நாளில் வழங்கிய இருநூற்றைம்பது பட்டங்கள்

பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம். அவற்றுள், 'சங்கரபக்தன்', 'ஈசுவாபக்தன்', ஆகிய பட்டங்கள் இவ்வேந்தன் சிறந்த சிவபத்தியுடையவனாய்த் திகழ்ந்தனன் என்பதை நன்கு விளங்குகின்றன. [S. I. I. Volume I No. 25 Verse 55].

பல்லவர் சரித்திரம் எழுதிய அறிஞராகிய துப்ரே துரை மகனார் இவ்வரசனைப்பற்றிக் கூறுவது—"நெடுங்காலம் குடிகளை எவ்வகை இன்னல்களுமின்றிக் காத்துவந்த பல்லவ அரசன் இவன் ஒருவனேயாவன். இவன் தன் ஆட்சிக்காலத்தில் காஞ்சியில் கைலாயநாதர் கோயிலையும் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலையும் விழுப்புரம் தாலூகாவிலுள்ள பனைமலையில் ஒரு கோயிலையும் எடுப்பித்துச் சிவனடியார்களைப் போற்றி அன்னோர்க்குப் பலநலங்கள் புரிந்தனனேயன்றி வேறு ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை" என்பது. இதனாலும் இவன் சிறந்த சிவபக்தன் என்பது இனிது புலப்படுதல் காண்க.

இவ்வேந்தன் தன்மனைவியோடு திருவாரூருக்குச் சென்று புற்றிடங்கொண்ட முக்கட்பெருமானை வணங்கித் திருக்கோயிலில் வலம் வருங்கால் இவனது மனையாள் பூக்கள் தொடுக்கப்படும் இடத்திற்குச் சென்று ஒரு மலரை எடுத்து மோந்து பார்க்க, அங்கிருந்த சிவனடியாராகிய செருத்துணையா ரென்பார் அதனைப் பொறாது அவளது மூக்கை வாள்கொண்டு அறுத்தலும், பின்னர் அங்கு வந்த அரசன் தன் மனைவி செய்த குற்றம் மிகப்பெரிது என்று அவ்வடியாரிடம் கூறியதோடு அவள் அம்மலரை எடுத்தமைக்குக் காரணமாயிருந்த கையினையும் வெட்டி வீழ்த்தினான் என்று பெரிய புராணம் கூறுகின்றது. இவ்வாற்றால் இவனது சிவபக்தி எத்தகைய சிறப்புடையதென்பது ஒருவாறு நன்கு புலப்படும். இவன் காஞ்சியில் கைலாயநாதர் கோயில் எடுப்பித்த நாளில்தான் திருநின்றவூரில் வாழ்ந்த பூசலார் நாயனார் சிவபெருமானுக்கு மனக்கோயில் கட்டினாரென்பது ஆராய்ச்சியாளரது கொள்கையாகும். சிவபெருமான், தாம் பூசலாரது மனக்கோயிலுக்கு முதலில் எழுந்தருள வேண்டியிருத்தலையின், அரசன்

எடுப்பித்த கற்கோயிலுக்குக் கடவுண்மங்கலஞ் செய்யக்குறிப்பிட்டிருந்த நாளைமாற்றி அதனை வேறொருநாளில் செய்யுமாறு அவன் கனவில் கூறியருளினரென்பதும் பிறவும் பெரியபுராணத்தில் காணப்படுஞ் செய்திகளாம். ஆகவே, இவ்வேந்தன் எடுப்பும் இணையுமற்ற சீரிய சிவபத்தனாய் அந்நாளில் நிலவினனென்பது திண்ணம். 'இத்துணைச் சிறந்த சிவபத்தியுடைய பல்லவ வேந்தன் வேறு ஒருவனும் இலனாதலின், சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையிற் கூறியுள்ள 'காடவர்கோன் கழற்சிங்கன்' இவனேயாதல் வேண்டும். இனி, அடிகள் இவனை இராசசிங்கன் என்றாதல் நரசிங்கன் என்றாதல் வழங்காமல் கழற்சிங்கன் என வழங்கியுள்ளாரேயெனின், சிங்கன் என்பது அவ்விரு பெயர்கட்கும் பொதுவாயிருத்தலின் அரசர்க்குரிய பெருமையையும் வீரத்தையும் உணர்த்தும் கழல் என்னும் மொழியை அதற்கு முன்பெய்து கழற்சிங்கன் என்று சிறப்பித்துக் கூறிப் பாராட்டியுள்ளாரென்று உணர்க.

இனி, அடிகள் காலத்துப் பேரரசன் நரசிங்கவர்மனே என்பது வேறொரு சிறந்த சான்று கொண்டும் உறுதியெய்துகின்றது. அடிகளை இளமையில் வளர்த்தவன் திருநாவலூரில் வாழ்ந்த நரசிங்க முனையரையன் என்ற சிற்றரசன் என்பது பெரிய புராணத்தால் அறியப்படுகின்றது. முற்காலத்தில் பேரரசர்கள் தமக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் பட்டங்கள் வழங்குங்கால் தம் பெயர்களோடு இணைக்கப்பெற்ற பட்டங்களையே கொடுப்பது பெரு வழக்காயுள்ளது. இவ்வுண்மை கல்வெட்டுக்களை ஆராய்ந்து பார்த்தால் இனிது புலப்படும். உதாரணமாக, இராசராச மூவேந்தவேளான், உத்தமசோழப் பல்லவராயன், முடிகொண்ட சோழமூவேந்தவேளான், சயங்கொண்ட சோழ விழுப்பரையன் என்னும் பட்டங்கள் நெடுமுடிவேந்தர்களுடைய பெயர்களோடு இணைக்கப்பட்டிருத்தல் காண்க. முனையரையன் என்ற பட்டத்திற்கு முன் பேரரசனது நரசிங்கன் என்னும் பெயர் இணைக்கப்பட்டு நரசிங்க முனையரையன் என்று சுந்தரமூர்த்திகளது வளர்ப்புத் தந்தை

யாகிய குறுநில மன்னன், வழங்கப்பட்டுள்ளான். ஆகவே, சுந்தரமூர்த்திகளை வளர்த்த நரசிங்க முனையரையன் என்பான் பல்லவ அரசனாகிய இரண்டாம் நரசிங்கவர்மனுக்குத் திறை செலுத்திய ஒரு சிற்றரசனாதலின், இவ்வடிகள் இப்பல்லவ அரசன் காலத்தினரென்பது உறுதியாதல் உணர்க.

இனி, இவ்வேந்தன் பேரரசனென்பது, 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்—கழற்சிங்கனடியார்க்கு மடியேன்' என்னும் அடிகளது திருவாக்கினால் நன்கு துணியப்படும். இதற்கேற்பச் சேக்கிழாரும் இவனைக் 'கோக்கழற்சிங்கர்' என்று கூறுகின்றார். 'கோ' என்னும் ஒரெழுத்தொருமொழி பேரரசனையே உணர்த்துமென்பது 'கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர்' என்ற அடியாலும், 'கோஇராசகேசரிவர்மன்', 'கோப்பரகேசரிவர்மன்' 'கோச்சடையவர்மன்', 'கோமாறவர்மன்' என்னும் கல்வெட்டுத் தொடர்மொழிகளாலும் பெறப்படுகின்றது. ஆகவே, நம் இரண்டாம் நரசிங்கவர்மன் பேரரசனாதல் காண்க. உமாபதி சிவாசாரியார் இதனைநோக்காது இவ்வேந்தனைக்குறுநில மன்னர்களுட் சேர்த்திருப்பது பொருந்தாதென்க.

இனி, இரண்டாம் நரசிங்கவர்மனது ஆட்சிக்காலம் கி. பி. 690-க்கும் 710-க்கும் இடைப்பட்டதாதலின் சுந்தரமூர்த்திகளும் அக்காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். எனவே, நம் சுந்தரமூர்த்திகள் கி. பி. எழாம் நூற்றாண்டின் இறுதியிலும், எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் தமிழகத்தில் வாழ்ந்தருளிய பெரியாரென்பது வெளியாதல் காண்க. இவ்வடிகள் காலத்தினர்களான சோமாசிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், ஏயர்கோன் கலிக்காமர், பெருமிழலைக்குறும்பர், கோட்புலியார், பூசலார், செருத்துணையார் என்னுஞ் சிவனடியார்கள் வாழ்ந்த காலமும் இதுவேயாகும்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# புத்த நிர்வாண காலம்.*

---

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், போர்டு உயர்தரப் பள்ளிக்கூடம், கோவிற்பட்டி.

---

வரலாற்று ஆராய்ச்சிக்காரர்களால் புத்த நிர்வாண காலத்தைப்பற்றிப் பல ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் சிறந்த ஆராய்ச்சியாளர் குறித்தன கி. மு. 483, 486 முதலியன. மேலும் இவ்வாராய்ச்சிக்காரர்களெல்லாம் தாங்கள் குறிப்பிடும் காலம் முடிவானதுதான் என்கிறார்களில்லை. ஏனென்றால் புத்தர் நிர்வாணமடைந்த காலத்தை ஆய்ந்து முடிவு கட்டுவதற்குத் தகுந்த கருவிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மேல் நாட்டு ஆராய்ச்சியாளரில் ஒருவராகிய வில்லியம் கெய்கர் (Wileim Geijer) என்பார் இத்துறையில் முயன்று புத்த நிர்வாண காலம் கி. மு. 483 என்று முடிக்கின்றனர். அவர் கூறுவதாவது, "இந்தக் கணக்கும் உத்தேசமானது தான் என்று நாம் நன்கெடுத்து இயம்புவோம். நமக்குச் சுமாராகவே சொல்ல இயலுமே ஒழிய மிகவும் உறுதியான முடிவெனச் சொல்ல இயலாது". (1912-ல் பதிப்பித்த மகாவம்சத்திற்குக் கெய்கர் என்பவர் எழுதிய முகவுரையின் 24-ம் பக்கம் பார்க்க.) கௌதம புத்தருடைய வரலாற்றைக் கூறும் பழைய சரித்திரங்களில் சில கணிதக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவை புத்த நிர்வாண

---

* இது 1924-ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகமன்றத்தில் அலகபாத்துப் பல்கலைக் கழக உதவித்தலைவர் (வைஸ் சான்சலர்) ஆகிய மகாமகோபாத்யாய டாக்டர் கங்காநாத்ஜா அவர்கள் தலைமையில் நடந்த மூன்றாவது அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டில் 24—12—24ல் ஆங்கிலத்திற் படித்த கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

காலத்தை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்குத் தகுந்த கருவிகளாக இருக்கின்றன. அக்கணிதக் குறிப்புகள் பின் வருவன :—ஈசான சகம் 68 வைகாசித் திங்கள் வெள்ளிவாரத்து வந்த நிறைமதியில் கௌதமபுத்தர் பிறந்தார். அவருடைய 29-வது வயதில் அதாவது ஈசான சகம் 96 வைகாசி வெள்ளியன்று நிறைமதியில் அவர் வீடு துறந்து காடு சென்றார். ஈசான சகம் 103 வைகாசி புதனன்று நிறைமதியில் அவர் ஞானமடைந்தார். ஈசான சகம் 107 ஆடித்திங்கள் சனிக்கிழமை நிறைமதி அதிகாலையில் அவர் தந்தை இறந்தார். ஈசான சகம் 148 வைகாசி செவ்வாய்க்கிழமை நிறைமதியில் அவர் நிர்வாணமடைந்தார். இக்குறிப்புக்களில் பல, மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதய்யர் அவர்களால் புத்த சரித்திரம் 1908-ம் ஆண்டினதாம் 3-ம் பதிப்பில் 4, 12, 21, 50-ம் பக்கங்களிலுள்ள அடிக்குறிப்புக்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஈசான சகம் என்பது அக்காலத்து வழங்கி வந்தது போலும். இதற்கு நேரான கிருஸ்து ஆண்டு இன்னதென்பது எளிதில் ஆராய்ந்தறியப்படும்.

எந்தஆண்டைப் புத்த நிர்வாணகாலமாகக் கொண்டால் மேலேகண்ட காலக்குறிப்புக்களெல்லாம் பொருந்துமோ அந்த ஆண்டே நேரானதாகக் கொள்ளப்படும். கி. மு. 483ல் வைகாசி 27-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 40-நாழிகைக்கு மேல் வந்தது. கி. மு. 486 வைகாசி 31-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 45-நாழிகைக்கு மேல் வந்தது. இவைகள் ஒருவாறு புத்த நிர்வாணத்திற்குப் பொருந்தினும் மற்றைய குறிப்புக்களோடு பொருந்தவில்லை. ஏனைய ஆண்டுகளோ ஒன்றுக்கும் பொருந்தவில்லை. கி. மு. 600 முதல் கி. மு. 100 வரை, கருத்துடன் கணித்துப்பார்க்குமிடத்து கி. மு. 493 மட்டுமே எல்லாக்கணிதக் குறிப்புக்களுக்கும் பொருந்தியதாகக் காணப்படுகிறது.

கி. மு. 573 ஈசானசகம் 68 வைகாசித்திங்கள் 3-ம் நாள் வெள்ளியன்று நிறைமதியாம். அன்றே பெரியார் கௌதமபுத்தர் பிறந்தார். கி. மு. 545 ஈசானசகம் 96 வைகாசி 24-ம் நாள் வெள்ளியன்று நிறைமதியாம். அன்றிரவே அவர் அரண்மனையை

விட்டுக் காடு சென்றவராவர். கி. மு. 538 ஈசானசகம் 103 வைகாசி 6-ம் நாள் புதனன்று நிறைமதியாம். அன்றிரவே புத்தர் ஞானமடைந்தார். கி. மு. 534 ஈசான சகம் 107 ஆடித் திங்கள் 18-ம் நாள் சனியன்று நிறைமதியாம். அன்று வைகறையில் அவர் தந்தையார் இறந்தனர். கி. மு. 493 கலி 2609 ஈசான சகம் 148 வைகாசி 19-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 2 நாழிகை 11 விநாடிகைக்குத் தொடங்கிற்று. அன்றே புத்தர் நிர்வாண மடைந்தார். இவ்வுண்மைகளால் ஈசான சகம் கி. மு. 641-ல் தொடங்கி நிகழ்ந்ததென நிலை நாட்டலாம்.

இனி, மேலே குறித்த முடிபிற்கு வரலாற்று நூல் எவ்வாறு இணங்கி நிற்கின்றதெனலைக் காட்டுவாம். தீபவம்சம், மகாவம்சம், புராணங்கள் ஆகிய இலங்கைச் சரித்திரங்கள் நமக்குத் தருந்த கருவிகளாக இருக்கின்றன. ஆசிரியர் வின்ஸன்ட் ஸ்மித் (Vincent Smith) போன்ற ஆராய்ச்சிக்காரர்களால் புராணங்கள் சிறந்த ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. (வின்சன்ட் ஸ்மித் எழுதிய ஆக்ஸ்போர்டு இந்து தேச சரித்திரம் இரண்டாம் பதிப்பு 1923, பக்கம் 57 பார்க்க) இவைகளிலுள்ள சில குறிப்புகளை எடுத்துக்கொண்டு நாம் மேலே கணிதக் குறிப்புக்கொண்டு முடிந்துள்ள ஆண்டோடு இவை இயைகின்றனவா என ஆராய்வோம். அசோகர் அபிடேகம் புத்த நிர்வாணத்தின் பின் 218 ஆண்டுகள் கழிந்தபின்னும். (ஒல்டன்பர்க்துரை 1889-ல் பதித்த தீபவம்சம், 5-ம் அத்தியாயம் 45-ம் பிரிவு; பக்கம் 141; 55-ம் பிரிவு பக்கம் 142, அத்தியாயம் 6, 1-ம் பிரிவு, பக்கம் 146: இவைகளைப் பார்க்க.) அதாவது கி. மு. 275 (493–218) ஆகும். மகாவம்சமும் இவ்வாறே கூறுகின்றது. (கெய்கர் மகாவம்சம் அத்தியாயம் 5, பிரிவு 21, பக்கம் 27.) அசோகர் கி. மு. 278-லேயே பட்டத்திற்கு வந்து விட்டார். இதிலிருந்து நான்காவது ஆண்டிலேயே கி. மு. 275 அவருடைய அபிடேகம் நிகழ்ந்தது. (தீபவம்சம் அத்தியாயம் 6, பிரிவுகள் 21, 22, பக்கம் 148, மகாவம்சம் அத்தியாயம் 5, பிரிவு 22, பக்கம் 28.) அவருக்கு முன்னல் பிந்துசாரன் கி. மு. 302 முதல் 278 வரை இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்டனன். மகாவம்சத்திற்கு

முன்னுலெழுதப்பட்ட தீபவம்சத்தில் பிந்துசாரனுண்ட காலம் இவ்வளவெனக் குறிக்கப்படாததால் நாம் புராணங்களின் குறிப்பை இங்குத் துணையாகக் கொண்டுள்ளோம். அவனுடைய ஆட்சிக் காலத்தை புராணங்கள் 25 ஆண்டுகள் என்றும், பர்மியர் வரலாறுகள் இருபத்தேழு ஆண்டுகள் என்றும், மகாவம்சம் 28 ஆண்டுகள் என்றும் குறிக்கின்றன.

பிந்துசாரனுக்கு முன்னுல் சந்திரகுப்தன் கி. மு. 325 முதல் 302 வரை இருபத்து நான்கு ஆண்டுகள் ஆண்டனன். (தீபவம்சம் 5-ம் அத்தியாயம், 73-ம் பிரிவு, பக்கம் 144; 100-ம் பிரிவு, பக்கம் 146 மகாவம்சம் 5-ம் அத்தியாயம் 18-ம் பிரிவு, பக்கம் 27.) இதிலிருந்து சந்திரகுப்தன் புத்த நிர்வாணத்தின் பின் 168 ஆண்டுகள் கழிந்தவுடன் [218—50 (325—275)=168] பட்டத்திற்கு வந்தானென்பதை அறியலாம். ஆசிரியர் கெய்கர், மகாவம்சம் முகவுரை 24-ம் பக்கத்தில் சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்தது கி. மு. 321-ல் ஆவது, தவறினுல் இதற்கு முன் பின் இரண்டு ஆண்டுகளிலாவது இருக்க வேண்டுமென்று எழுதுகிறுர். அவர் 25-ம் பக்கத்தில் பின் வருமாறும் குறிக்கின்றுர் :—'நாம் மூலாதாரமாகக் கொண்டு குறிக்கின்ற சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்த ஆண்டாகிய கி. மு. 321 உத்தேசமாகவே சரியானது என்பதை நாம் மறத்தல் கூடாது. ஆதலினுலே சில ஆண்டுகள் முன்னுகவோ பின்னுகவோ இருந்தாலும் கூடும்' ஆசிரியர் வின்ஸெண்ட் சிமித்தும் இதே எண்ணத்தை உடையவராக இருக்கின்றுர். (J. R. A. S., 1901, பக்கங்கள் 831—834; Early History of India, pp. 38—39). ஆக்ஸ்போர்டு இந்து தேச சரித்திரம் 1923 இரண்டாம் பதிப்பு 73-ம் பக்கத்தில் இவர் கூறும் பின்வரும் சொற்றொடர்களும் நாம் ஈண்டு நன்கு நோக்க வேண்டியவை. அவை பின் வருமாறு:—"சந்திரன் அல்லது சந்திரகுப்தன் என்பவன் தன் இளமைப் பருவத்தில் அலெக்ஸாண்டரை கி. மு. 326 அல்லது 325-ல் எதிர்த்தான் என்பதும், அவனே நந்தர்களுக்கு ஓர் கூற்றுனுன் என்பதும் உறுதியான செய்திகளாகக் காணப்படுகின்றன............அலெக்ஸாண்டர் கி. மு. 323 ஜூன்

மாதம் பாபிலோனில் இறந்தான். அதிலிருந்து இரண்டொரு திங்களில் அச்செய்தி பஞ்சாபுக்கு எட்டியிருக்க வேண்டும். பிறநாட்டார்மேல் தொடர்ந்த போர் கி. மு. 323 குளிர்காலமுதல் கி. மு. 322 வரை நடந்ததென்று எளிதில் உணரலாம். சந்திர குப்தன் கி. மு. 322-ல் பட்டத்திற்கு வந்தான் என்பதும் மிகப் பிழையாக இராது. மகதப்போர்க்கிளர்ச்சி தொடக்க முதல் முடிவுவரை ஓராண்டு இருக்கலாமெனத் தெரிகிறது. அஃது அலெக்ஸாண்டர் இறப்பிற்கு முன் முடித்திருந்தலும் கூடுமாதலால் நந்தர்குலம் அழிந்ததும் மௌரியனுகிய சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்ததும் கி. மு. 325-ல் என ஆண்டைப்பின் தள்ளியே கொள்ளவேண்டும். ஆகலின் 325 முதல் 320 வரை இரண்டாண்டு முட்பட ஏதாவது ஓராண்டுதான் உண்மையான காலமென்பது உறுதியாகின்றது." இதனுல் சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்தது கி. மு. 325-ல் என நாம் கொண்டது தவருகாது. இதிலிருந்தும் புத்த நிர்வாணகாலம் கி. மு. 493 தான் (325 + 168) என்பது நிலை பெறுவது காண்க.

இலங்கைச் சரிதங்களிலே கயவாகு என்ற அரசனைப் பற்றி அறிகின்ரேம். அவன் புத்த நிர்வாணத்திலிருந்து 642-வது ஆண்டு முதல் 664-ம் ஆண்டு வரை ஆண்டவன் என்று தீபவம்சம் கூறுகின்றது. மகாவம்சமோ 653-வது ஆண்டு முதல் 675 வரை அவன் ஆண்டவன் என்கிறது. (ஓல்டன் பர்க் துரை தீபவம்சத்தையும், கெய்கர் துரை மகாவம்ச முகவுரையில் குறித்துள்ள பழைய இலங்கை மன்னரின் அட்டவணையையும் பார்க்க) இக்கூற்றுக்கள் தம்முள் மாறுபடுகின்றமையால் அவன் காலத்தை வேறு சான்றுகள் கொண்டே முடிக்கவேண்டியதாகின்றது. தமிழ் நூல்களில் மிகப் பழமையானவைகளில் ஒன்ருகிய சிலப்பதிகாரம் 30-வது வாந்தருகாதை 157-163 அடிகளில் கயவாகு சோர் தலை நகராம் வஞ்சியில் கண்ணகி கோயில் கொண்டதைக் கண்டு வணங்கினனென்ற செய்தி காணப்படுகிறது. கயவாகு மன்னனின் பாட்டன் வசவன் கைத்தொழிலைப் பரப்பி வளர்த்துப் பல கால்வாய்களை வெட்டி நிலத்தை வளம்பெறச் செய்தான். (தீபவம்சம் அத்தியாயம் 22, மகா வம்சம் அத்தியாயம் 35.)

அவன் காலத்திய மன்னனாகிய கரிகாற் சோழன் தன் நாட்டையும் இவ்விதமாகவே வளம் பெறச் செய்தான். கால்வாய்களில் வேலை செய்வதற்குக் கூலிக்காரர்கள் வேண்டியிருந்ததால் அவன் இலங்கைமேற் படை யெடுத்து அங்கிருந்து பலரைச் சிறைகொண்டு வந்தானெனத் தெரிகிறது. கயவாகுவினுடைய தந்தை வங்கநஸிகதிசன் என்பான் மூன்றாண்டுகளே ஆண்டான் (தீபவம்சம் அத்தியாயம் 22, பிரிவுகள் 12, 27; மகாவம்சம் அத்தியாயம் 35, பிரிவு 112.) கயவாகு தான் பட்டத்திற்கு வந்தவுடனே கரிகாற் சோழன் கொடுமையை மறவாதிருந்தவன் ஆதலால் சோழநாட்டின்மேல் படைகொண்டு சென்றான். அக்காலத்தில் தான் அவன் வஞ்சிக்கு வந்து கண்ணகியை வழிபட்டதும். இச்செய்திகள் சென்னை ராஜதானி அரசாட்சி வரலாற்றில் (Manual of the Administration of the Madras Presidency) 117-ம் பக்கக் கீழ்க்குறிப்பால் வலியுறுகின்றன. அதில் நாம் காணும் செய்திகள பின்வருவன:—("கி. பி. 110-ல் சோழர்கள் மீட்டும் இலங்கை மேல் படை சென்று 22000 சிங்களவர்களைச் சிறைகொண்டு வந்தார்கள். கி. மு. 113-ல் இலங்கை மன்னன் கயவாகு சோழ நாட்டின் மேல் படை யெடுத்துப் போய்ச் சிங்களவர்களை மீட்டதோடு மேலும் பலரைச் சிறைகொண்டு தன் மனத்திலிருந்த சினத்தை ஆற்றிக் கொண்டான்."

ஆடித்திங்கள் வெள்ளிக்கிழமை இருட்பக்கம் 8-ம் திதி இரவு ஐந்து நாழிகைக்கு, பரணிக்குமேல் வந்த கார்த்திகையில் மதுரை மாநகரில் கண்ணகியாள் எரியூட்டினாள் எனச் சிலப்பதிகாரம் கூறும். (ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, வஞ்சின மாலை, கட்டுரைக் காதையில் 133—135 அடிகள் பார்க்க.) ஆதிலிருந்தும் நான்காண்டுகள் கழிந்தபின் எட்டாவது மாதத்தில் கண்ணகி பிரதிட்டை நடந்தது. *

கி. மு. 100 முதல் கி. பி. 400 வரைகணித்துப் பார்த்ததில் கி. பி. 144 மட்டுமே, நூலில் மதுரை எரியுண்டதுபற்றிக் கூறும்

* இதன் விவரமெல்லாம் இக்கட்டுரைக்கு அடுத்துள்ள 'சிலப்பதிகார காலம்' என்ற ஆராய்ச்சியுரையில் பரக்கக்காண்க.

குறிப்புகளுக்குப் பொருந்தியதாக இருக்கின்றது. கி. பி. 144-ல் ஆடித்திங்கள் 15-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இருட்பக்கம் 8-ஆம் திதி அன்றிரவு ஐந்து நாழிகைக்குப் பரணிக்கு மேல் கார்த்திகை வருகின்றது. இதனுல் 144-இல் மதுரை மாநகர் எரிவாய்ப் பட்டதென்பதும் கி. பி. 149-ல் கண்ணகி பிரதிட்டை நடந்த தென்பதும், அந் காணக் கயவாகு வஞ்சிக்கு வந்தானென்பதும் நிலைபெறும். இலங்கை மன்னன் இதற்கு ஓராண்டுக்கு முன்னரே அதாவது கி. பி. 148-ல் பட்டத்திற்கு வந்தவனுதல் வேண்டும். தீபவம்சத்தின்படி அவன் புத்த நிர்வாணத்தின் பின் 642-ம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தவனுவான். இதனுலும் புத்தநிர்வாண காலம் கி. மு. 493 (641—148) தான் என்பது நிலைபெறுவது காண்க.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# சிலப்பதிகார காலம்.

---

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், போர்டு உயர்தரப் பள்ளிக்கூடம், கோவிற்பட்டி. *

---

சேரன் செங்குட்டுவனுக்கு உடன்பிறந்தவராகிய இளங்கோவடிகளாலே இயற்றப்பெற்ற பழந்தமிழிலக்கியம் சிலப்பதிகாரம். ஆசிரியர் இந்நூலை மூன்று காண்டங்களாகப் பிரித்திருக்

* இதுவும் 1924-ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகமன்றத்தில் அலகபாத்துப் பல்கலைக் கழக உதவித்தலைவர் (வைஸ் சான்சலர்) ஆகிய மகாமகோபாத்யாய டாக்டர் கங்காநாத்ஜா அவர்கள் தலைமையில் நடந்த மூன்றாவது அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டில் 23—12—24ல் ஆங்கிலத்திற் படித்த கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

கிறார். அவை சோழர் தலைநகராம் புகாரை யொட்டி நடந்த செய்திகளைக்கூறும் புகார்க் காண்டமும், பாண்டியர் தலைநகராம் மதுரையை யொட்டி நடந்த செய்திகளைக் கூறும் மதுரைக் காண்டமும், சேரர் தலைநகராம் வஞ்சியை யொட்டி நடந்த செய்திகளைக் கூறும் வஞ்சிக்காண்டமுமாம். இந்நூலிலுள்ள வரலாறு முழுவதும் இயற்கைக்குக் கொஞ்சமும் மாறுமல் உள்ளது உள்ளவாறு அமைந்துள்ளது. ஏனென்றால் இதன் ஆசிரியர் ஓர் உண்மைத் துறவி. வஞ்சிக்காண்ட நிகழ்ச்சி முழுதும் அவர் நேரிலறிந்ததே. ஏனைய காண்டங்களிலுள்ள நிகழ்ச்சிகளையும் நேரிலறிந்தோராகிய மாபெரும்புலவர் சாத்தனுர், மாடல மறையோன் முதலிய பெரியோர்வாய்க் கேட்டறிந்தே அவர் எழுதியிருக்கிறார். நூலிற் கூறப்பட்டுள்ள செய்திகள் முழுவதும் மிகவும் தெளிவாகவிருக்கின்றன. ஆதலின் அவைகள் நடந்த காலத்தை நிலை நாட்டுவது எளிதாகின்றது.

காவிரிப்பூம் பட்டினத்திலே சித்திரைத்திங்கள் சித்திரை நாளிலே இந்திர விழாவிற்குக் கொடியேறிற்று. "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" சிலப் V-64] அவ்விழா இருபத்தெட்டு நாள் நடந்தது. ("நாலேழ் நாளினும்" மணிமேகலை—1, 3 சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையும் பார்க்க.) இருபத்தொன்பதாவது நாள் கொடியிறங்க, முப்பதாவது நாள் கடல் விளையாட்டு நிகழ்ந்தது. இவ்வரலாற்றுத் தலைவனும் கோவலன் நாடகக்கணிகை மாதவி யோடும் கடற்கரை சென்றனன். அன்று மாலை அவன் மாதவியோடு மாறுபட்டு அவளை விட்டுப் பிரிந்து அன்றிரவிலே தன் வீடு புகுந்தான். அங்கே அவன் மனைவியாம் இவ்வாலாற்றுத்தலைவி கண்ணகி அவனை மனமகிழ்வோடும் நல்வரவேற்றாள். கோவலன் தன் கூடாவொழுக்கத்தையும், மாதவிபால் தன் பெரும் பொருள் முழுதும் இழந்தமையால் தன்னை வந்தடைந்த வறுமையையும் நினைந்து நினைந்து வருந்தினுன். அவன் அன்றிரவே தன்னுடைய மனைவியையும் உடனழைத்துக்கொண்டு அன்று நிறைமதிப்பக்கம் பதினுன்காம் நாளாதலால் விடியச்சற்றுமுன் திங்கள் மறைந்ததாக சூலகைச் சூழ்ந்த இருளிலே தம்மை ஒருவருமறியாமல் அந்நகரின் நீங்கினுன். ("வான்

கண்விழியா வைகறையாமத்து, மீன்றிகழ்விசும்பின் வெண்மதி நீங்கக், காரிருளின்ற கடைநாட் கங்குல்" சிலப்—X. 1—3.) கோவலன் மதுரையடைந்து இடையர் சேரியிலே மாதரி என்பாள் வீட்டிலே தன் மனைவியை விட்டு அவளுடைய காற்சிலம் பொன்றை விற்பதற்காகக் காலையில் ஊரினுட் சென்றான். அந்நாட்டிறைவன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவனுடைய மனையாள் சிலம்பொன்றை ஓர் பொற்கொல்லன் திருடிக்கொண்டு அக்குற்றம் வெளிப்படாமுன்னம் என் செய்வதென வருந்தியிருந்தவன் கோவலனைக்கண்டு ஓர் தந்திரமுன்னி மகிழ்ந்து அரசனையடைந்து அக்கோவலனே சிலம்பு திருடிய கள்வனெனப் பொய் புகன்றனன். அரசனும் ஊழ்வினை வலியால் மயங்கிக் குற்றமற்ற கோவலனைக் கொல்வித்தனன்.

கணவன் மடிந்த வெவ்வுரை கேட்ட கண்ணகியாள் மற்றச் சிலம்பைக் கையிலேந்தி விரைந்து சென்று மாலையிலே அவனைக் கண்டனள்.

"வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்"

சிலப். XIX. 35—38.

அப்போது ஞாயிறு மேற்கடலிற் பாய்ந்தது. இருள் சூழத் தொடங்கிற்று. ['மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற், செவ்வென் கதிர்சுருக்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப' சிலப். XIX. 31—32.] ('யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்' சிலப். XIX. 43.)

உடனே அவள் மிக விரைவாக அரண்மனையடைந்து அரசனைக்கண்டு அவனுக்கு அவன் செய்த பெருங்குற்றத்தை விளக்கிக் காட்டினாள். தான் கோவலனைக் கொன்றது பெருந்தவறென உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் "நானே

கள்வன், கெடுக என் வாழ் நாள்" என்று கீழ் வீழ்ந்து அப்பொழுதே உயிர் துறந்தான். பின் கண்ணகியாள் அந்நகரை மும்முறை வலம் வந்து அதனை எரியூட்டினாள். அப்போது இரவு ஐந்து நாழிகையிருக்கும். அன்று ஆடித்திங்கள் வெள்ளிக் கிழமை, இருட்பக்கத்து அட்டமி பரணிக்கு மேல் வந்த கார்த் திகை. ["ஆடித்திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளிவாரத் தொள்ளெரி யுண்ண, வுரை சான் மதுரையோ டரசுகேடுறும்" சிலப். XXIII. 133—136.]

மதுரை எரியுண்ட காலத்தை ஆய்ந்துமுடிப்பதற்கு இது மிக வும் உதவியாம். இதில் கார்த்திகை யென்பது அழல் சேர் குட்டம் என்பதால் விளங்கும். இவ்விடத்துப் பழைய உரையாசிரியர் கார்த்திகை பரணி யென்று பொருள் குறித்திருக்கிறார். இதுவும் அன்று கார்த்திகை பரணிக்குமேல் வந்ததாமெனவும் அதனால் மதுரையிற்றீப்பற்றியது அப்பொழுதேயாயிருக்கலா மெனவும் உணரலாகும். கி. மு. 100 முதல் கி. பி. 400 வரை கணக்கிட்டுப் பார்த்ததில் கி. பி. 144-ல் மட்டுமே இவ்விதமான கணிதக்குறிப்புக் காணப்படுகின்றது. வேறு ஆண்டுகளொன்றும் பொருந்தவில்லை. இதிலிருந்து மற்றைச் செய்திகள் நடந்த நாட்களும் இவையெனக் காணலாகும்.

கி. பி. 144 சித்திரைத் திங்கள் இருபத்தோராம் நாள் வெள்ளிக்கிழமை சித்திரை நாள் ஒளிப்பக்கப் பதினான்காம் திதி யன்று இந்திரவிழாவிற்குக் கொடியேறிற்று. வைகாசிப் பதி னேழாம் நாள் வியாழனன்று வரை விழா நடந்தது. பதினெட் டாம் நாள் வெள்ளியன்று கொடி யிறங்கிற்று. பத்தொன்பதாம் நாள் சனியன்று கடலாட்டு. அன்றுமாலையிலேயே கோவலன் மாதவியைப்பிரிந்து தன் வீடடைந்தான். அன்றிரவிலேயே அவன் தன் மனைவியுடன் மதுரைக்குப் புறப்பட்டான். அன்று ஒளிப்பக்கம் பதினான்காம் நாள். அவ்வாண்டில் ஆடித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை இருட்பக்க அட்டமி; அன்று பரணியும் கார்த்திகையும் இரவு ஐந்து நாழிகைக்குச் சேர்ந்தன. அப்பொழுதே கண்ணகி மதுரையில் எரியூட்டினாள்.

மதுரை யெரிந்த பதினான்காம் நாள் அதாவது ஆவணித்திங்கள் நான்காம் நாள் வியாழனன்று ("எழுநாளிரட்டியெல்லை சென்ற பின்" சிலப். XXIII. 193) கண்ணகி நெடுவேள் குன்றத்தடிவைத் தேறித்தன் கணவனுடன் பூத்தேரூர்ந்து இந்திரனுலகமெய்தினாள். இவ்விந்தையனைத்தும் நேரிற் கண்டிருந்த வேட்டுவர் சொல்லக் கேட்ட சேரன் செங்குட்டுவன் தன் தலைநகராம் வஞ்சியிலே கோவிலெடுத்து அதில் இமயமலையிலிருந்து கொண்டுவந்த கல்லிலே கண்ணகியாளுருவத்தை யமைத்து நிலைபெறுத்தி வணங்கினான். சேரன் செங்குட்டுவன் இமயமலை சென்று திரும்பிய செய்திகள் மிகவும் சிறப்புடையவையாதலால் இங்கே அவைகளை நன்கு ஆராய்வோம்.

கண்ணகியாளைத் தெய்வமாக எண்ணிய சேரன் செங்குட்டுவன் ஓர் பெருஞ் சேனையோடு புறப்பட்டுக் கங்கையின் வட கரையை யடைந்து ஆரிய மன்னர் கனகவிசயரை வென்று தன் சேனைத்தலைவனைக் கல் கொண்டுவர இமயமலைக்கனுப்பிக் கங்கையைக் கடந்து அதன் தென்கரையிலே யிருந்தான். கல் வந்தவுடன் அதற்கு நீர்ப்படை செய்யப் பெற்றது. அன்று மாலை மன்னவன் மூன்றாம்பிறைச் சந்திரனைப் பார்த்தனாக, கணி அரசனை வாழ்த்தி, இன்று நாம் வஞ்சி நீங்கி முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன என்றான். ("எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியதும்." சிலப் XXVII. 149.) இதனால் அவன் வளர்பிறை மூன்றாம் நாளிலேயே வஞ்சியை விட்டுப் புறப்பட்டவனாதல் வேண்டும். இங்கே இந்த முப்பத்திரண்டு திங்களும் எவ்வாறு கழிந்தன என்பதை நன்கு ஆராய வேண்டுவது இன்றியமையாததாகின்றது.

சேரன் சிறிதும் தாழ்க்காது வஞ்சியை விட்டுப் புறப்பட்டானெனத் தெரிவதால் அவன் கண்ணகி விமான மூர்ந்து சென்றதிலிருந்து இருபத்தாறாம் நாள் திங்களன்று வளர்பிறைத்திருதியையில் புறப்பட்டவனாவன். அதாவது கி. பி. 144 ஆவணித்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் அவன் நீலகிரியடைந்து அங்கே அரசர்கள் அனுப்பிய திறைவாங்கியிருந்தான்.

கொங்கணரும் கருநாடரும் வேனிற்காலத்தே வந்தனர். குடகர் மாரியில் வந்தனர். (சிலப். கால்கோட்காதை. 85—175.) மாரிக்காலத் தொடக்கத்தில் அதாவது ஆவணியில் மன்னவன் நீலகிரியின் நீங்கினன். அப்போது அவன் வஞ்சி நீங்கி ஓராண்டு கழிந்தது.

செங்குட்டுவன் நட்பாசராய நூற்றுவர் கன்னருதவியால் கங்கையைக் கடந்து கனகவிசயரைப் பதினெட்டு நாழிகையில் வென்றான். ஆனால் அவன் பகைவர்களுடைய வரவை எதிர் பார்த்துப் பாசறையிலிருந்தான் எனத் தெரியவருகிறது. "பகைப்புலம்புக்குப் பாசறையிருந்த" (சிலப். XXVI. 180.) இதனால் இவன் பகைப்புலம்புக்கிருந்தது ஓர் மாதமிருக்கலாம். பின் அவனுடைய சேனைத்தலைவன் இமையஞ் சென்று கற் கொண்டு கங்கைவர இரண்டு திங்களாயிருக்கும். இதிலிருந்து அவன் நீலகிரியிலிருந்து கங்கைக் கரைவாச் சென்றது பதினேழு திங்களாம். (32—12+1+2) வஞ்சியிலிருந்து நீலகிரிவரை யுள்ளவழி நீலகிரியிலிருந்து கங்கைக்கரைவரையுள்ள வழியில் ஐந்தி லொன்று. ஆகையால் வஞ்சியிலிருந்து கங்கைக்கரை சேரச் சென்றன இருபதரை மாதங்கள் ($17+3\frac{1}{2}$) என அறியலாம். ஆதலால் கங்கையிலிருந்து வஞ்சி மீளவும் இருபதரை மாதங்களே யாயிருக்கும். சேரன் நீலகிரியில் எட்டரை மாதங்கள் ($12-3\frac{1}{2}$) தங்கியவனாவன்.

சேரன் செங்குட்டுவன் ஐம்பத்து மூன்றாவது திங்களில் வஞ்சி மீண்டனன். ($32+20\frac{1}{2}$) விரைவில் கண்ணகி கோவிலில் நிலைபெறுத்தப்பட்டாள்; அதற்கு இரண்டொரு மாதங்களே சென்றனவாம். அதாவது மதுரை யெரிந்து நான்காண்டுகள் கழிந்து எட்டாவது மாதத்திலே கண்ணகி பிரதிட்டை நிகழ்ந்தது. அது கி. பி. 149 பங்குனியிலாம்.

அப்போது இலங்கைவேந்தன் கயவாகு என்பான் வஞ்சியிற் கண்ணகியை வணங்கினன். ("கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்" சிலப். XXX. 160.)

இலங்கைச் சரிதங்களிற் பழமையானதாகிய தீபவம்சத்தில் கயவாகு மன்னன் புத்த நிர்வாணத்திலிருந்து 642-வது ஆண்டு முதல் 664-வது ஆண்டு வரை ஆண்டனனெனத் தெரிகிறது. புத்த நிர்வாணம் கி. மு. 493-லாம்*. இதனால் கயவாகு கி. பி. 148 முதல் கி. பி. 170 வரை [(641—663)—493] இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டவனென அறியலாம். அவன் கி. பி. 148-ல் பட்டத்திற்கு வந்து கி. பி. 149-ல் வஞ்சி வந்தவனாவன்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் மதுரை யெரியுண்டது கி. பி. 144-ல் என்பதும், கண்ணகிக்குக் கோவிலெடுத்தது கி. பி. 149-ல் என்பதும் நிலைபெறுகின்றன.

---

ஓம் சிவம்.

## திருவருள் இயல்பு கூறி நெஞ்சறிவுறுத்தல்.

---

திருவாளர் மு. வே. மா. உலக ஊழியர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், பூளைமேடு.

(மறைமலையடிகள் திருப்பாட்டுக்கிணங்க எழுதியது.)

விண்ணின்கண் எளிதாகச் சுழல்கின்ற உருண்ட விளாம் பழத்தை நிகர்த்த காற்றுளரும் பல்வளம் கெழுமிய இப்பெரிய நிலவுலகத்து, மடிந்திராது சுறுசுறுப்புடன் அரிநில் முயன்று ஊக்கித் தொழிலைப்புரிகின்ற வேறு வேறு பிரிவினவாய், ஒவ்வொரு பிரிவிலும் பலப்பல குழுமிய வேறு வேறு தொகுதியினவாய் உள்ள எறும்புகள் போலப் பலவேறுபட்ட நாட்டினரும், பலவேறுபட்ட மொழியினரும் பலவேறுபட்ட கோட்பாட்டினரும், பலவேறுபட்ட வடிவினரும் ஆவர் மக்கள். அம்மக்கட் பகுதியில் சிலர், தெய்வத்தன்மை மிக்க இந்திய நாட்டில் சித்திக்கொருவிதையாகிய தமிழ் நிலைஇய தென்னாட்டில், பலரும் இறும்பூதுறுமாறு பலகழங்கினையும் ஒருகையாலோ அல்லது இருகையா

---

* 'புத்த நிர்வாண காலம்' என்ற ஆராய்ச்சியுரையில் இதன் விவரம் கூறப்பெற்றது.

லோ விண்ணின்கட் சென்று பின்னர்க் கையின் கட்டங்கிப் பின்னும் விண்ணின்கட் சென்று வருமாறு விழியிமைக்கும் அளவில் பலமுறை உருட்டும் பயிற்சிமிக்க விச்சைவல்ல கைவல்லொருவனைப் போல எல்லா உலகங்களும் அவற்றின்கண் உள்ள உயிர்களும் இயங்குமாறு இயக்குவித்துத் தான் மாத்திரம் இயல்பிற் புடை பெயராது தன்வரம்பில் ஆற்றலுடன் எழுந்தருளி இருக்கும் செம்பொருளின் திருவருள் ஒன்றையே நாடித் தருக்கு நீங்கி இவ்வுலகத்துறைபவராவர். பலர் எம்முடைய அறிவினாலே நேர்மை பெரிதுறுகின்றேம், எம்முடைய வறிவினாலே நலம்பல உறுகின்றேம். எம்முடைய அறிவினும் சிறப்புற்ற அறிவு இவ்வுலகத்து உண்டு கொல்லோ? எம் அறிவுக்கு அறிவாக இருக்கும் பொருளும் உளதோ? யாம் எல்லார்க்கும் எல்லாவுயிர்க்கும் உறுதுணையாக உள்ளேம். எமக்கும் யாமே துணை: எமக்குத் துணையாகப் பிறிதொரு பொருளும் உண்டோ? என்று இறுமாந்து பொருளில் புன்மொழிகளும் எண்ணங்களும் கூறியும் நினைத்தும் வறிதே பயமின்றி இறந்து கழியும் மாக்களாவர்.

இத்தகைய மாக்களுள் ஒருவனாகாது அறிவு நிரம்பப்பெற்ற இளைஞன், கோழிமுட்டை உருவினை ஒத்த உருண்ட அழகிய முகத்தினன்; கரிய மாட்சிமிக்க குஞ்சியன்; அருளும், கண்டார் விரும்பும் அழகும் உடைய கண்களுடையான்; அருமை மிக்க நற்குணம் பலவுஞ்சேர உடையான்; புகழெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டதோர் ஒழுக்கமிக்க குடியிற் றோன்றியவன்; அன்னான் பெயர் சிவங்கண்டான் என்பதாம். திருவருளின் துணைவழிநின்று இயங்குவிக்க இயங்கும் பெற்றியனாய்ப் பிறிதோர் துணையும் பெறுனாய் இடம்பரந்த பெரிய நில உலகத்து யாரும் வழங்காத ஓரிடத்து நினைந்தாங்குத் திரிந்திருந்தான். அவ்வாறு திரியும் வேலை, வனப்புமிக்க சிறப்பினையும், அறிவான் நிறைந்து அமைந்த கேள்வியினையும், பலபுகழினையும் நிலைநிறுத்திய கெடாத நோன்பினையும், என்பெழுந்தியங்கும் யாக்கையினையும், இகலும் செற்றமும் நீங்கிய உளத்தினையும் உடைய தவத்தினன் ஒருவன் வெளித்தோன்றி, திருவருள் நெறிச்செலவினை மயக்க

மறத் தெரிய விரும்பும் வருந்தாத உள்ளமுடைய மிக்க இளமை யுடையாய்! நீ இந்நெறியிற் சேறலைப் பிழையாது பேணின், இந்திரன் முதலிய இறைபவர் பதமும் பொருளன்றாக அந்தமில் இன்பம் மன்னிய செல்வத்து வதிதலைப் பெறுவாய் என்று நன் மொழிகள் பல கூறி அருள்செய்து சென்றானாக, இளைஞன் அவ்வயின் நீங்கி வேறொன்றும் நினையானாய் ஒருங்கிய அறிவுடை யானாய், கண்டார் பசுமணிக் கற்களால் இழைத்த திருநீலமோ என விழைவுறுமாறு பசும்புற்கலித்த கொழுநில வழியே செல் கின்றான். செல்லும் காலம் வேனிற்காலத்து நண்பகலாகலானும், வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச் சிறியவன் செல் வம் போல் சேர்ந்தார்க்கு நிழலளிக்காதவாய் வலைவலந்தன்ன புள்ளி நிழலுடைய மரங்களையுடைய மணற்பரந்த பக்கங்கள் தான் செல்லும் கொழுநில வழி மருங்கிருபுடையு மிருத்தலானும் உடல் கொதிப்புற மூச்சுப்பை உயிர்ப்பெழ மயிர்க்கால் வேர்வை அரும்ப இடுகுகண்ணினனாய்க் கடுகுறு பசியனாய் விரைவுறு செலவினனாய்ச் சென்றானாக; அந்நிலையை உற்று நோக்கின் மறவழிகள் புறத்துச் சூழ்ந்திருக்கச் சிறிது வருத்தமும் பெரிது மகிழ்ச்சியும் ஒருபொழுது நிகழ அறவழியிற் பிழையாதொழுகும் அறிவுடை ஒருவனை அவ்விளைஞன் ஒத்திருந்தான். கடுங்கதிர் ஞாயிறு காய்சினம் நீங்கினன். இளைஞன் ஆண்டுத் தோன்றிய பொழிலைக்கண்டு களிதுளும்புள்ளமொடு தெளிவு பெரிதுடைய னாய்ச் சிதைவில் விருப்பிற் சென்றினிதிருந்தான். அதுபொழுது கூடற்றமிழும், கொழுஞ்சந்தன விரையும் மணக்கத் தென்றல் உலாவிற்று. மாலைப்பிறைமதி அரும்பவிழுந்தது. ஒருசார் ஓடும் கரைபொரு தெளிநீர்க்கால்வாய் நறுமணமலருடன் இழு மென ஒழுகியது. ஆண்டுள்ள கிளிகள் அறிவர் ஒப்ப அழ கொழுகு திருவாசகமும் தேவாரமும் ஆர்வத்துடன் பாடின. அதனுள் ஒருகிளி அப்பர் அடிகளின்

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"

என்னும் திருக்குறுந்தொகையைச் சீர்பிழையாது பாடிற்று. அதுகேட்டு இளைஞன் இறும்பூதும் இன்பமும் எய்தி மகிழ்ச்சிக் கடலுட் குளித்துத் தட்டுத்தடுமாறிக் கரையேறினன். புது மணம் விரிக்கும் கொழுவிய பூமுகை தோறும் வரிச்சிறைத் தும்பிகள் பண்பாடின. நிறம் விளங்கிய தொடிக்கட் கருங்குயில் கள் கூவிக்களித்தன. இவையெலாம் கேட்டுத் தான் என்றும் காணாத மகிழ்ச்சியில் நிறைந்திருந்தான். பின், நெடிய இலைகளை யுடைய வாழையின் புலியடியன்ன குலையில் உள்ள தாமே கனிந்த பழங்களும் பொரிந்த அடியினையுடைய மாவின்கனிந்த பழங்களும், மணங்கெழுமிய தீஞ்சுவையுடை வேர்க்கோட் பல வின் வெடித்த பழச்சுளைகளும் தன் பசிநீங்கத் தொகுதியாக வுண்டான். கொல்லுலையிடத்து உருகி யோடுகின்ற பொன் போலத் தெளிவமர்ந்து ஓடும் பனிநீர்க்காலின் கரைமருங்கிருந்து அகங்கையால் அள்ளி வேட்கை நீங்க விழைவுறுமளவு நீர் பருகி னன். ஆறு செல்வருத்தம்பாறிட ஆண்டிருந்தான். அவ்வம யம் பொன்னிகர்த்த பூந்தாதும், மணங்கலந்த தீந்தேனும், விரைசெறிந்த நறுமுகையும் நிரை நிரையாக வீசிப் பூப்பொதிந்த மரங்கள் நிழலளித்தன. இளைஞன் மென்றூவி மயிர்நிறைந்த தளிமத்து மேவினல் ஒப்பப் புறப்டர்ந்த செழும் பசுநிலத்திருந் தான். உடனே நாற்றிசையும் நோக்கி மேற்பகுதியும் நோக்கி னன். மந்தியும் அறியா மரம் பலவடங்கிய குயில் நுழைந்துறை யும் பொழிலாயிருந்தது. வானம் கருமுகிலின்றி மறுவற விளங் கியது. நிறைகலையில்லாப் பிறைமதிப்பிள்ளை விலைவரம்பில்லா விண்மீன் நித்திலம் வெண்கதிர்க்கையால் விதிர்த்துச் சிரித்தது. ஈங்கிவை எல்லாம் இன்புறக்கண்டு மெய்யறிவு தலைக்கொள உண்மையை நினைதன்மேயினன். மக்கள் எனப்படுவார் பரந்த பல்லுயிரினும் தலைமையுடையார். அவர் அவ்வாறு தலைமை யுடையாராய் இருத்தற்கு ஏதுவாவது அறிவுடையாராய் இருத்தல் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அவ்வுரையை நோக்கின் ஒப்புக் கொள்ளுதற்குரிய சீர்மையுடைத்து. எனினும் அவ்வறி வுடைமையால் துன்புறுதற்கேதுவாகிய கவலை பல உளவாகின் றன. விலங்கினம் என்று சொல்லப்படுவன 'நன்மை விளங்கு

தற்கு எதுவாம் அறிவு அவற்றின்கட் காணப்படுதலின்மை யால்' இழிதிணையாம் என்று அத்தொல்லாசிரியர் கூறுகின்றார். உற்று நோக்கின், அவை கிழங்ககழ்ந்துண்டும், முகிழ்நறு மாந்தியும், பைங்குழைமென்றும், பால் நீர் குடித்தும், மலைகளினும், பொதும்பரினும், அழியுந்தன்மையவாய உறுதியிலவாய கூடுகளினும் வருத்தமின்றி இனிது இருந்து ஒருதுயரும் இலவாய் இன்பமும், நன்மையும் எய்துகின்றன. இவ்வாற்றான் பகுத்துணரும் சிறப்பறிவுடைய மக்கள் அடைந்த இன்பம் என்னை? ஒன்றும் இலதே! பகுத்துணரும் சிறப்பறிவிலவாகிய விலங்கினங்களும், பிறவும் தமக்குரிய வினைகளை முடித்து இன் புற்றிருத்தலும் இல்லையோ? அவ்வறிவின்மையால் அவற்றிற்குப் போந்த இழுக்கென்னை? ஒன்றும் இல்லையே! ஆதலின் அறி வுடைமையானும், அறிவின்மையானும் பெறுதற்குரிய தென்னென்று எண்ணுங்கால் ஒன்றும் இன்றே! மக்களுள் செல்வ முடையார் கவலையின்றிச் சிலர் உளராலோ எனின்? நன்று சொன்னாய்! பெரிதிலரேனும் சிறிதளவேனும் இலாரைத் தேடுதல் எளிதன்றே. அவ்வாறு கவலையிலராயும் உலகத்திருந்தார் யாரே? அகன்கண்ஞாலம் பொதுவின்றிப்புரந்து குடையும் முரசும் கொடியும் தாமே கொண்டு எமமுரசம் இழுமென முழங்க நேமியுய்த்து இகலறு வேந்தரும் இறந்தொழிந்தனரே! பொய்யுரை கூறியும், தம்முடலோம்பப் பிறிதின்னுயிர் நீக்கி அவ்வுடலுண்டும், உயர் வுடையோர் பலரைக் கொன்றும், நல்லோர் தொகுத்த பல் பொருள் வெளவியும், வஞ்சம் பகர்ந்தும், நெஞ்சறி பிழைபுரிந்தும் தூராவயிற்றைத் தூர்க்க முயன்றும், என்றும் அதற்குரிய இயல் பமர் உடம்பைப் பேணமுயன்றும் வாழ்கின்ற கையறியா மாக் களும் இறந்தொழிந்தனரே! ஆ! ஆ! என்னே உலகத் தியற்கை! என்னே உலகத்தியற்கை! உடம்பினைப் பேணற் குரிய உணுக்கள் பலவும் மலையினும், காட்டினும், மரத்தினும் இருப்பனவற்றைத் தேறாது என்றும் இடும்பைகூர் இழிவயிற் றைப் பேணற்கே நாளும் காலத்தைப் போக்குகின்றனரே! யான் செய்தேன் இதனை; என்னுடையது இது; என்னும் அறி யாமை கருவியாகப் பெரிய இடர்கள் வருமே! அறிவுடைப்

பொருளையும் அறிவில் பொருளையும் ஒப்பநாடி அவற்றிற்கேற்ப வியப்புறுதற் கேதுவாகிய திருவருட் பேற்றினை ஆயுந்தொறும் பெருக்கெடுத்தோடு மின்பந் தலைக்கூடுமன்றே. பகலும் இரவும் பொருள்களைப் பல்வகை அழகும் பெறவிளக்கி ஒருபற்றுமின்றி உருவாய் விண்ணில் விளங்கும் கெடாத அறவிளக்காகிய ஞாயிறும், திங்களும் அஞ்ஞாயிற்றால் உளவாகிய பருவகாலங்களில் அதனால் உளதாகிய வளந்தரு மழையும், அம்மழையால் நீர் இடையறாமையின் இடையறாது காணப்பட்டுவரும் உயிர்ப் பன்மையும் நிறையறிவுடைய முழுமுதற் கடவுளின் கைம்மாறு கருதா இயற்கைப் பேரிரக்க வருளான் நிலவுவனவலவோ! அருட்பெருவள்ளலாகிய அன்னானை மயக்க வுணர்வுடைய யான் கூடுநாள் என்றோ? நாத்தழும்பேற எத்துரை மொழிந்தொடு மணற் கேணியிற் சுரந்துநீர் பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்புற்று அன்பன் ஆகும் நாள் என்றோ? அந்தோ! அந்தோ! நான் இவ்விடம் வந்து மறதியுற்றிருந்து வாளாப் பொழுது கழித்தேன். இளமதி சாயுமுன் இவணீங்கி முத்து, மாமணி, மாணிக்க, வயிரத்த எய்ப்பினில் வைப்பைத் தேடியுறு வேன் என மனத்தெண்ணிக் கூறி நெடியகாட்டிடையே செல்வுழி, சான்றோர் கவி ஒத்த தெளிவும், பளிங்கன்ன நிறமும் உடைய அசையும் நீரோடையில்

“பால்புரை பிறைக்கதிர் மேன்மிளிர்ந் தாடலும்
எழுந்திரை இழியக் கொடுங்கயன் மறிதலும்
வானிடு வில்லின் வாளைமேல் உகளலும்
பாசடை நிவந்த நெறியவிழ் ஆம்பல்
இரவெனு மணங்கு திரைமடி இருவிப்
பாற்கதி ரூட்டும் பாலன் போறலும்
அன்பிடை நெகிழா அன்றிலும் அகன்றிலும்
தூதுகல் லுண்ணும் கதன்மிகு குரீஇயும்
அன்னமு மயிலும் பொன்னுரை கிள்ளையும்
ஆடுவாற் சிரலும் புறவும் பிறவும்
கூடுதொறுங் குழீஇத் துணையொடு துயிறலும்
அருப்பமாய் அயல்நின்ற பொருப்பகந் தோறும்

கழல்கட் கூகை குழறலோடு உளியம்
முரற்றலும் பிறவும் கருத்துற நோக்கி
அல்லாந் தெழுந்த உணர்வின னாகி
மல்லலங் காவிற் செல்லுங் காலை
வைகறை யாமம் சிறிதுகழிந் தன்று''

செம்பொருளின் திருவருள் விரிய விரிய வலிய ஆணவ இருள் நீங்குமாறு போல அங்கதிர் ஞாயிறு குணவயிற் றோன்றலும் நிறைந்த இருட்கூட்டம் சிறிது சிறிதாய் நீங்கியது. பறவைகள் ஒலித்தெழுந்தன. தாமரை முகைகள் முருக்குடைந்து மலர்ந் தன. இமையாத எண்ணிறந்த கண்களையும் சுமை மயிர்த் தோகையையும் உடைய மயில்கள் பீலிவிரித்து ஒருபுறத்து ஆலி ஆடின. இத்தகை நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்டு மகிழ்ந்த உள்ளத்துடன் மகிழ்ந்து சென்றான். தன்னுயிரைத் தான் கண் டாற் போலக் கொங்கிற் பொன்வேய்ந்த முகடமைந்த அம்பலத் தைக் கண்டான். இன்பக்கடலிற் குடைந்தான். அடங்கா மதர்ப்புடன் ஓடுவழி ஓடினான். விலைவரம்பில்லா வச்சிரப் பலகையை ஈர்ந்து தகைபெறும் மணிகள் பல வகைவகை ஆராய்ந்து குயிற்றவேண்டிய இடங்களில் குயிற்றிப் பூத்தொழில் கனியத் தெய்வத் தன்மையுடைய நூலுணர்வுடைய தமிழத் தச்சனாற் செய்யப்பட்ட நிலையுயர்ந்த வாயிற் புழைவழியே நுழைந்தான். அருள் நிறைந்த பார்வையும் விரிந்து பரந்த நெற்றியில் நீறும் விளங்க, ஒளிமிகுந்த கழுத்தில் விழிமணிக் கோவை அழகுடன் அசைய, பால்நுரை முகந்தன்ன மாசில் தூவுடை அரைமருங்கசைய ஒரு திருக்கையில் ஆன்மா இறைவ னுடன் கலக்கும் இரண்டற்ற கலவைக் குறியைக் காட்டி மெய் கண்டாரியற்றிய செந்தமிழ் நூலின் செம்பொருள் விளக்கிப் பதமுற்ற மாணவரை பார்வையால் ஆண்டுகொண்டு அருட்டிரு மேனியுடன் எழுந்தருளி உள்ள தமிழ்ப் பேராசிரியனைக் கண் டான். கண்டதும் கழுமிய நோக்குடன் அழுது குறை இரந் தான். பெரியோன் "அன்புடைக்குழந்தாய்! மன்னு உலகத்து மன்னுதல் இன்றி மின்னலின் மறையும் புழுக்கறைபோலும் அழுக்குடை யாக்கையிற் பொருந்து பல்லுயிரும் மெய்யை மெய்

யெனப் பொய்படுகுநவே. பொய்ப்பொருள் தம்மின் நீங்கி மெய்ப் பொருள்தேறி என்றும் முதிரா இளநலன் எய்த உறுதிகொண்டு ஈண்டு உற்றமைக்குப் பெரிது உவந்தனம். நின்பொருட்டாகக் கட்புலனுற்கதுவல் கூடாத திப்பிய நிறைந்த உண்மை அறி வானந்தங்களையே உருவாகக் கொண்டுவந்தாம். • பேரறிஞர், அறிஞர், சிற்றறிஞர் எனும் உயிர்களின் வேறுபாட்டிற்கும், அம்முத்திற உட்பகுதி வேறுபாட்டிற்கும் எற்ப யாம் தாங்கி வரும் உருவம் இதுமாத்திரம் அன்று. நிலன், நீர், தீ, வளி, வெளி எனும் ஐம்பெரும் பூதமும் திங்களும், ஞாயிறும், எங்கும் ஆம் உயிரும் ஆகிய எண் வடிவமும் யாமே. இவ்வாறுயி னும் இவற்றின் வேருய் யாம் கொள்ளும் வடிவங்களும் உள. நமது இயல்பைத் தெரிந்து நமது அருள்வழி நிற்போர் இம்மை யில் இன்பெய்துவர்: அம்மையில் நம் அடிநிழலடைவர். எம் அன்புடைத் தோன்றல்! நம்மருளொடு நம்மை நீங்கிப்பிரிதல் இன்றிக்கலந்து விரும்பி இருத்தற்குரிய நிலையை நோக்கி அழி யாததும் எல்லையில்லாததும் உவமையில்லாததும் ஆகிய பேரின் பத்து உறைவாயாக" என்று கூறிப் பின்னர்த்தனது அந்தண உருவத்தைமாற்றிப் பொருப்பரையன் மடப்பிடியோடு ஒளிப் பிழம்பாம் ஏறேறி வெளிப்பட்டு "இளையோய்! இது நமது வடிவமாகும். மெய்புணர்வுடையாய்! இவ்வுலகத்தில் நீ உள்ள அளவும் திரிபுணர்ச்சியும், மயக்கவுணர்ச்சியும், ஐயவுணர்ச்சியும் நீங்கப்பெற்று முறைமையாக வுயர்ந்து மறுமையில் எமது திரு வடி நிழல் அடைக." என்று அருள்கூறிப் பெருஞ்செல்வம் பலவும் தந்து கரந்தனன் என்று பெரியோர் கூறுப. ஆதலின் நெஞ்சே! நீ வாழிய! நெஞ்சே!! வேண்டிய வேண்டியாங்கு அன்பர்கட்கு அருளி அன்னுரை ஆண்டுகொண்டு புலி அதள் உடுத்துப் பிறைமதி தரித்து உரையின் வரையும் பொருளின் அளவும் கடந்த பெருவெளியில் ஒருகால் தூக்கித் திருநடம் குயிற்றும் தேவர்தம்தேவை வந்தவாறு வாழ்த்தி வல்லாங்குப் பாடி வணங்குவேமாக. அவ்வினையானல் இரக்கப்பட்ட அம் முதல்வன் திருவருளை முனியாது வெஃகி விருப்பி அதன்மாட்டுப்

பொருந்தி ஒழுகுவோமாயின்

'வருவன யாவும் திருவருள் குறிப்பே
வாரா தனவும் போா அருளே'

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ"

அன்புடை நெஞ்சே என்னுடன் எழுக! எழுக! எழுக!

---

உ

திருச்சிற்றம்பலம்.

# செங்கீரைப் பருவம்.

---

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

---

தமிழில் வகுக்கப்படும் நூல்வகைகளுள் ஒன்று பிள்ளைத் தமிழ் என்பது. இது கடவுளரையும், பெரியாரையும் பற்றி அவர்களது இளமைப் பருவத்தை யணிந்துரைப்பது. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய விருந்து என்னும் வனப்பில் இது அடங்கும். பிற்காலத்தார் இதனை வித்தார கவியுள் முதலாவ தெனக் கூறுவர். ஆண்பாலரைப்பற்றியது ஆண்பாற் பிள்ளைத் தமிழெனவும், பெண்பாலரைப் பற்றியது பெண்பாற் பிள்ளைத் தமிழெனவும் படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ்:— காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப்பருவம், சிறுபறைகொட்டற்பருவம், சிற்றிலழித்தற்பருவம், சிறுதேருருட்டற்பருவம் எனப்பத்தாகப் பிரித்துக் கூறப்படும்.

பெண்பாற் பிள்ளைத்தமிழ்:—முற்கூறியவற்றில் இறுதியினின்ற மூன்றற்கும் மாற்றாகக் கழங்காடற்பருவம், அம்மானையாடற்பருவம், ஊசலாடற்பருவம் என மூன்று கூட்டிக் கூறப்படும்.

இதனை— "கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே"

"பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்"—உரியர் என்னும் இலக்கண விளக்கப்பாட்டியல் (46, 47)-ஆம் சூத்திரங்களால் அறியலாம்.

இப்பருவ வைப்புமுறை சில மாறிக் கூறப்படுவதும்* பெண்பாற் பிள்ளைத்தமிழினுள் கழங்காடலுக்கு மாற்றாக நீராடற் பருவங் கூறப்படுவதும்† உண்டு.

இப்பருவம் பத்தினுள்ளும் இரண்டாவதாகிய செங்கீரைப் பருவம் இன்னதெனத் துணிவதே இக்கட்டுரையின் பொருளாம். ஏனையவற்றில்,

க. காப்புப்பருவம்:—தாய்மாரும் செவிலியரும் 'குழந்தைக்குப் பிணியொன்றும் அணுகாவண்ணம் கடவுளர்காக்க' வெனத் திருநீற்றுக் காப்பணிவதைக் கூறுவது. வாயிற்படியில் நீர் விட்டுக் குழைத்தெடுத்துப் பொட்டிடுதலும், வேறு காப்புக் கொள்ளலும் உண்டு. இது குழந்தை பிறந்த மூன்று மாதத்தில் நிகழ்வது.

---

* பெரிய புராணம், திருஞான சம்பந்த மூர்த்திகள் புராணம்.
† மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

௩. தாலப்பருவம் :—தாயரும் சிலதியரும் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவதைக் கூறுவது. இது எழு மாதத்தில் நிகழ்வது.

௪. சப்பாணி கொட்டற்பருவம் :—'இருகையையும் குவித்துக் கொட்டுக' வெனக் குழந்தையைக் கைகொட்டிப் பழக்குவதைக் கூறுவது. இது ஒன்பது மாதத்தில் நிகழ்வது. (ச-பாணி = சேர்த்திய கை.)

௫. முத்தப்பருவம்:—'முத்தந்தருக' வெனக் குழந்தையை முத்தமிடுவிப்பதைக் கூறுவது. இது பதினொருமாதத்தில் நிகழ்வது.

௬. வருகைப்பருவம் :— 'வருக வருக' வெனக் குழந்தையை நடை பழக்குவதைக் கூறுவது. இது பதின்மூன்று மாதத்தில் நிகழ்வது.

௭. அம்புலிப்பருவம் :—திங்களைக் காட்டி, அதைக்கண்ட குழந்தை தன்னுடன் விளையாட அதனை அழைப்பதைக் கூறுவது. இது பதினைந்து மாதத்தில் நிகழ்வது.

௮. சிறுபறை கொட்டற்பருவம் :—குழந்தை சிறியதொரு பறையை யடித்து விளையாடுவதைக் கூறுவது. இது பதினேழு மாதத்தில் நிகழ்வது.

௯. சிற்றிலழித்தற் பருவம் :—சின்னஞ் சிறுமியர் தெருவில் சிறு வீடுகட்டி விளையாடுவதை யழித்து விளையாடுவதைக் கூறுவது. இது பத்தொன்பது மாதத்தில் நிகழ்வது.

௧௦. சிறுதேருருட்டற் பருவம் :— தனக்கென்று செய்த சிறுதேரில் ஏறிச் செலுத்துவதைக் கூறுவது. இது இருபத்தொரு மாதத்தில் நிகழ்வது.

பெண்பாற் பிள்ளைத்தமிழில் இறுதியிற் கூறும் பருவங்கள் கழற்சிக்காய் எழு பிடித்தாடி விளையாடுவதையும், அம்மானைக் காய்கொண்டு ஆடிவிளையாடுவதையும், ஊசலாடி விளையாடுவதையும், நீராடி விளையாடுவதையும் கூறுவனவாம்.

இனி யிரண்டாவதாகிய செங்கீரைப் பருவம் :—குழந்தை பிறந்த ஐந்து மாதத்தில் நிகழ்வது. இதற்குச் செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என ஒருவர் உரையெழுதிப் போயினர். திருவாவடுதுறை யாதீன வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகருமாகிய சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களும் இதனைப் பிறர் கூற்றாக உடம்பட்டனர். அவர் கூறுவது :—“ கீர்-சொல் ;.........உண்மை நோக்குமிடத்து...... அப்பொழுது தாதியர் செவ்விய சொற்களைச் சொல்ல வேண்டுமென வேண்டிக் கோள்வதாகக் கூறவேண்டுமென்பது கருத்தாகக் கோள்க” என்பதாம். (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்) பின்வருங் காரணங்களால் அவ்வுரை பொருந்தாமையைக் காணலாம்.

(1) ஐந்து மாதக் குழந்தை பேசுவது இயல்பன்மையாகலானும், மழலைச் சொற்றானும் பேசவாரா இளம்பருவத்தே செவ்விய சொற்களைப் பேசவேண்டிக் கோடல் அறிவின்பாற் படாதாகலானும் அது பொருந்தாது.

(2) வடமொழியில் ஸ்ரீ: என்ற சொல் தமிழில் கிர் என வழங்குமென்ப. அவ்வாறே சேந்தன் திவாகரம்

‘குயில்வினை வெதிர்ப்பு கீர் நுவல்பாணி
இபம் வாக்கென்பவும் சொல்லின் பால’

எனவும், சூடாமணி நிகண்டு

‘மாற்றமே மொழியே கீரே வாணியே கதை யெதிர்ப்பு’

எனவும் கூறியாங்குக் கூறாமல், வாளா ஐகாரம் சேர்த்துக் கீரை யெனக்கூறல் வேண்டா வாகலானும் அது பொருந்தாது.

(3) ஆடல் என்பது சொல்லுதல் என்னும் பொருளில் தனித்து வழங்காமையானும், சொல்லையடுத்துக் கூறுமிடத்தே, உரையாடல் என வழக்கிலும் “சொல்லாடச் சோர்வுபடும்” எனச் செய்யுளிலும் வழங்குமாகலானும், அவ்வாறு கூறின் சேங்கீராடியருளே என வேண்டுதலான், செங்கீரையாடியருளே எனல் வேண்டாமையானும் அது பொருந்தாது.

(4) செங்கீர் (செம்மை—கீர்) என்ற சொற்களில் செம்மை யென்பது பண்புச் சொல்லாகவும், கீர் என்பது அப்பண்பைக் கொண்ட பண்பிச் சொல்லாகவும் நிற்கின்றன. இவ்வாறு பண்பும் பண்பியுமாயியைந்து வருவன கருங்குதிரை, வெண்டிங்கள் பைந்தோகை என்பன போல இரண்டும் தமிழ்ச் சொற்களாக இருக்குமேயன்றிச் செம்மையென்னும் பண்புத்தமிழ்ச் சொல், கீர் என்னும் பண்பி வடசொல்லோடு இயைந்து வருமாறில்லை யாகலானும், சந்தவிருத்தம் முதலியன யாக்கத் தொடங்கி வேறு வழி காணாது வலிநின் இயைத்துக் செருகுவார்போ லியைத்தல் ஈண்டைக்கு வேண்டாமையானும் அது பொருந்தாது.

(5) பிள்ளைத்தமிழ் கூறவந்த ஆசிரியர் எவரும் தம் நூற் களில் இப்பருவத்தில் இவ்வாறு (செவ்விய சொற்களைச் சொல் லுக எனல்) கூறாமையானும், இலக்கண நூல்களிலும் இவ்வாறு கூறப்படாமையானும் அது பொருந்தா தென்க.

இனிச் செங்கீரைப் பருவமென்பது குழந்தைதன் னிரு கையையும் நிலத்திலூன்றி, ஒருகாலைமடக்கி, யொருகாலை நிமிர்த்து, இருந்து, தலை நிமிர்த்து முகமசைந்தாடுவதைக் கூறுவதாம் என்க.

ஐந்து மாதக் குழந்தைகள் இவ்வாறு அசைந்தாடுவது இயல்பாகலானுங், இவ்வாறே யிலக்கியஞ் செய்தாரனைவருங் கூறுதலானும், இலக்கண விளக்கவுரையில், செங்கீரை—தலை யெடுத்து முகமசைதல் எனக் கூறப்படலானும், முற்குறித்த சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் தம் கூற்றாக இவ் வாறே கூறுதலானும் செங்கீரைத்தண்டுபோலசைந்தாடலாற் செங்கீரையாடலென வாயிற்று என ஒருவர் எழுதியிருப்பது பொருத்தமாகக் காணலானும் இதுவே பொருந்துமாறறிக.

இதைக் குறிக்கும் இலக்கியங்களிற் சில காட்டுதும்:—

(க) இங்கு ஆடல் என்பது ஆடுவதையே குறிக்கும் (சொல்லுவதைக் குறிக்காது) எனற்கு, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்

(1) முகமதி யூடெழு நகைநில வாட முழுச்சு ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி முரிப்பொ டசைந்தாட
விகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமுமாட
விடுநூ புரவடி பெயரக் கிண்கி ணெனுங்கிண் கிணியாட
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல் துவண்டு துவண்டாடத்
தொந்திச ரிந்திட வுந்திக ரக்தொளிர் சூலுடை யாலிடைமற்
றகிலச ராசர நிகிலமொ டாடிட வாடுக செங்கீரை
அவனித ழைந்திட மவுலிபு னைந்தவ ளாடுக செங்கீரை. (6)

(2) தஞ்சந்திடு கொங்கையி ரண்டல வௌவுரை தருதிரு முகமாடத்
தாய்வரு கென்பவர் பேதைமை கண்டுத தும்பு புனகையாடப்
பசைந்திடுஞால மலர்ந்தமை வெளிறியொர் பச்சுடல்சொல்லவுமோர்
பைங்கொடியொல்கவு மொல்கி நுடங்கிய பண்டி சரிந்தாட
விசைந்திடுதேவை நினைந்தன வென்ன விரங்கிடுமேகலையோ
டிடுகிடையாட வியற்கைமணம் பொதியிதழ் வழிதேறலினே
டசைந்தொசிகின்ற பசுங்கொடியென வினிதாடுக செங்கீரை
அவனிதழைந்திட மவுலிபுனைந்தவளாடுக செங்கீரை. (7)

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(3) செம்பொன டிச்சிறு கிண்கிணி யோடுசி லம்புக லந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரைவடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தியொ டுஞ்சிறு பண்டிய சைந்தாடப்
பட்டநு தற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பிவி தம்பொதி குண்டல முங்குழை காதும சைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவளத்திரு மேனியு மாடிட வாடுக செங்கீரை
ஆதிவ யித்திய நாதபு ரிக்குக னாடுக செங்கீரை. (6)

என்பனவும்,

(உ) முகமசைத் தாடுதலென்பதற்கு

### மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

(1) பரிமளமூறிய வுச்சியின் முச்சிபதிந்தாட......
கருவிளைகாறு குதம்பை ததும்பிய காதுத ழைந்தாடக்
கதிர்வெண் முறுவலரும்ப மலர்ந்திடு கமலத்திருமுகநின்
னருள்விழியொடும் வளர்கருணை பொழிந்திட வாடுகசெங்கீரை.

### முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(2) ...முத்தமரும்பி யெனக் குறுவேர்வு முகத்திலரும்பியிடப்
புழுதி யளைந்தப சுந்திருமேனிப் பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கங்கண்ம லர்ந்தவி ழிக்கடை பொழியருள் கரைபுரள
அழகுக னிந்தமு திர்ந்தவி ளங்கனி யாடுகசெங்கீரை— (7)

### அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

(3) கார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலைமதி கவின்றநின் கமல
[வதனங்
காண்டொறுமறுவற்ற மதியீதெனவுட்கவன்றுமுன் னிற்கவஞ்சிப்
பார்பூத்த தென்குளத்தூர்ப் பொங்கர்காவணம் பரியமதினூழையூடு
பையென நுழைந்தொளித்தோட கிற்பணிய வருபங்கயச்செல்வி
முதலோர்
ஏர்பூத்தவங்கை யரவிந்தமலர்கூம்பவ ரிணைவிழிக்குவளை யெல்லாம்
இரும்புனற்றேத்துளி பொடித்துமிழ்ந்தலர வருளொனுமமிழ்த
தாரைகான்று
சீர்பூத்த முகமதியமாட வமுதாம்பிகை செங்கீரையாடியருளே
சிற்சபையினெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரையாடி
யருளே. (3)

(4) ...திருச்சோமநாதனூர் தாமேனி குழைவித்தவை
இக்காமுமிக்காமு மித்தனமுமித்தனமு மென்றுயிர்தோழியர்க
ளாய்
எத்துமடமாதரார் தம்மைத்தெளித்திடுவ தேய்ப்பமுகமதிய
மசையத்
திக்கெட்டுமேத்துங் குளந்தையமுதாம்பிகை செங்கிரையாடி
யருளே. (5)

(5) ...வதனத்திங்கண் மிசையாடக் குளந்தையமுதாம்பிகை
செங்கீரையாடியருளே. (2)

என்பனவும்,

(ங) தலைநிமிர்த்து முகமசைந்தாடல் என்பதற்கு

பெரியபுராணம் (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்.)

வருமுறைமைப் பருவத்தின் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைகள் தலையெடுப்ப ஆண்டதிரு முடியெடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லாற் பிறிதிசையோ மென்பார்போற்
றிருமுக மண்டலமசையச் செங்கீரையாடினர். (45)

என்னும் சேக்கிழார் பெருமான் அருளிச்செயலும்,

(ச) இருகைகளையும் நிலத்திலூன்றி, ஒருகாலை மடக்கி, ஒருகால் நிமிர்த்து, இருந்து தலை நிமிர்த்து, முகமசைந்தாடல் எனற்கு

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(1) உருவமணிச் சிறுதொட்டிலுதைந்து நின் ஒண்பதம் நோவாமே
யொருதாளூந்தி யிருந்திருகையு மொருங்குபதித்து நிமிர்ந்
தருள்புரி திருமுகமசைய வசைந்தினிதாடுக செங்கீரை
ஆதிவயித்திய நாதபுரிக்குக னாடுக செங்கீரை. (8)

2. அழகாம்பிகை பிள்ளைத்தமிழ்.

பொருவரிய வண்டப்பரப்பை முழுதாளும் புராதனர்முகத்துவிழியாப்
போந்துலவு நங்கொழுநர் தம்மைத் தடுத்திடர்புரிந்தகைக்கமலநமையும்
பருவாலுறுத்து மென்றஞ்சி மென்குமுதமும் பங்கயமுமொன்றையொன்று
பாதுகாப்பத் துயிலுமென்றர மடந்தையர் பரிந்து கொண்டாடுசேர்த்தி
இருகைமலரும் புவிபதித்தொரு முழந்தாளிருத்தியொரு தாண்மேனிமிர்த்
திந்த்ரதிருவிற்கிடைதொடுத்த வெண்டாரள நிரையேய்ப்பநுதல்வேர்
பொடிப்பத்
திருமுகநிமிர்த்தொரு குளந்தையமுதாம்பிகை செங்கீரையாடியருளே
சிற்சபையில்நெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரையாடியருளே.

## 3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

ஒண்கொண்ட பொதுவகத் துலகெலாமுய்ய காறுலகெலாமென்றதீஞ்சொல்
உவந்தேடெழுத் தாணி கொண்டெழு திரண்டுகையும்புவியுறப்பதித்து
வண்கொண்ட வொருதாண்மடித் தூன்றி யொருதாள் வயங்குறவெடுத் தூன்றியொண்
வாய்கவிச்சுவையொழுக்கறிவிப்பதெனவமுதமாட்சிமை யொழுக்கெடுப்ப
வெண்கொண்டநெற்றி நீறிளநிலவு மொண்கா திருங்குழை யிளங்கதிரும்விட்
டெறிப்பவிளமுறுவலுந் தோன்றமலர் திருமுகமெடுத்து வானளவு நோக்கித்
திண்கொண்ட குன்றையம்பதி யருண்மொழித்தேவ செங்கீரையாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டுவேளாளர் குலதிலக செங்கீரையாடியருளே

என்பனவும், சான்றுகளாம்.

இனிச் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் "பொருவரிய" என்று தொடங்கும் செங்கீரைப்பருவச் செய்யுளின் "வாய்புகல்குதலை மழலையென்ன மருவுமொழி யாசையுற்றீர் பயனுருதென வள்ளான் மறுத்தால் வார்த்தைப்பயன் கொளவலோம்" என்ற தொடரை நோக்கின், இதுகாறும் மறுக்கப்பட்ட பொருளைக் கொள்ளல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கருத்தாகுமே யென்னின் :—

(1) கீர் என்பது செவ்விய சொல்லின் பரியாயமாகுமே யன்றி நிரம்பாமென் சொல்லின் பரியாயமாகாமையானும், சேக்கிழார் சுவாமிகளின் பலதிறங்களையும் பாராட்டிக் கூறும் நிலைமையில் மழலைச் சொல்லின் கண்ணும் தமக்குள்ள பெருவிருப்பைக் கூறினதேயன்றிப் பிறிதன்றாகலானும்,

(2) அங்ஙனமாகுமென்பது—"பொன்னணி பாவையொடாடியணைத்துப் பொழுதுகழித்தருளும், அல்லிமலர்க்குழல்வல்லி பாரபரையாடுக செங்கீரை" என்ற அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் (7) கொண்டு ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள் பாவை

யோடாடலையும் செங்கீரைப் பருவத்தினிலக்கணமாகக் கொண்டருளினர் என்பதுபோல் நகையாடற் பாலதொன்றுமாகலானும், ஆகாதென்க.

இதுகாறுங் கூறியவற்றால் செங்கீரைப் பருவமெனற்கு உண்மைப் பொருளிது வெனத்துணிதல் பெற்றாம்.

---

உ

கடவுள் துணை.

# பண்டைத் தமிழரின் சமயம்.

திரு. ஊ. சா வேங்கடராம ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
கும்பகோணம்.

இத்தலைத் தொடரிலே பயின்றுவரும் 'பண்டு' என்பது மதுரையம்பதியிலே நிலைபெற்றுத் தொடர்ச்சியாகத் தமிழ் ஆராய்ந்து வந்ததாகத் தண்டமிழ் நூல்களின் வாயிலாகச் செவ்விதின் அறியப்படும் செந்தமிழ்ச் சங்கத்தின் இறுதிக்காலத்துக்கு முற்பட்ட காலத்தை. அஃது இற்றைக்கு ஆயிரத்து எண்ணூற்றுச் சில்லரை யாண்டுகளுக்கு முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களது திடம்பெற்ற துணிபு.

நமது கருத்துக்குப் பொருந்த அந்தப் 'பண்டு' இன்னும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். எனெனில், தலையங்கப் பொருள் அத்துணைப் பழங்காலத்தைச் சார்ந்ததாகவே குறிக்கப் படுதலின் என்க.

தமிழர்களது நாகரிக மேம்பாட்டிற்கு வயது கூற முற்பட்டவர் பலராவர். கி. மு. பத்தாயிரத்துக்கு முற்பட்டகாலம் முதல் கி. மு. மூவாயிரம் வரையில் சாதகம் கணிப்பவராக அவர் பல்வேறு வகையினராவர்.

தமிழ் நூல்களாக எண்ணிறந்தன இருந்தன என்பது நூலுரைகளால் அறியப்படுகின்றது. அவற்றுள் ஐம்பெரும் பூதங்களாலும், அறியாமைச் சுற்றத்தாலும் இறந்தன போக எஞ்சியனவும் பல. அவற்றுள்ளும் காலத்தால் முற்பட்டதாகி இன்றளவும் நின்று நிலவிப் பயன்றந்து வருவது தொல்காப்பியம் என்னும் சிற்ப்புவாய்ந்த ஒல்காப் பெருமையினையுடைய இலக்கண நூலாகும். இதன் காலத்தை இற்றைக்கு மூவாயிரம் யாண்டுகளுக்கு முன்னே வைத்துக்கூறுவது எல்லோருடைய ஒத்த கருத்தாகவும் இருக்கின்றது. தமிழ் நாட்டாருடைய சிறந்த கொள்கைகள் பலவும் தொல்காப்பியத்தால் அறியப்படுகின்றன. அந்த முதன்மைவாய்ந்த 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பிய' த்திலேயே ஆரியக்கலப்புத் தோன்றிவிட்டது. ஆரியர்களின் கொள்கைகளும் அச்சீரிய நூலிலே இலைமறைகாய் போலச் சேர்ந்து விட்டன என்பது தவறாகாது.

தமிழர்களின் பண்டைச் சிறப்பை நோக்க ஆரியக் கலப்புக்கு முன்னரும் தமிழர்களுக்கெனத் தனித்த சிறப்பான சமயக் கொள்கை இருந்தே இருக்க வேண்டும். ஆதலின் இங்கே நாம் குறிக்கும் 'பண்டு' அந்த ஆரியக் கலப்புத்தோன்றுதற்கு முந்திய காலத்தையே. இம்முறையில் நமது 'பண்டு' தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட காலத்தை என்பது. அஃது இற்றைக்கு மூவாயிரத்துச் சில்லறை யாண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்களாற் கூறப்படும்.

'தமிழர்' என்பது தொல்காப்பியப் பாயிரத்திலே பயின்று வரும் "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" என்று ஆசிரியர் பனம்பாரனர் கூறிவைத்த நான் கெல்லைக்கு உட்பட்ட தமிழ் நிலத்திலே நிலைத்திருந்த பண்டைக் குடிமக்களை. இந்த எல்லை வேறு வகையாகவும் கூறப்படும். குமரி என்றது யாருகவும், மலையாகவும் சிற்சில கருத்து வேறுபாடுகளுடன் ஆராய்ச்சியாளர்களால் உரைக்கப்படும். 'யாறு' எனக் கொள்வதிலும் 'மலை' எனக் கொள்வது நிலநூல் வல்லார் கருத்

தோடு பெரிதும் ஒத்து நிற்கின்றது. வடக்கே இமயம், தெற்கே குமரி, இடையிலே வேங்கடம் என்ற மூன்று மலைகள் இருந்தன என்பதற்கும் பல ஆதாரவுகள் உண்டு. இம்முறையிலே தென்மலை மாத்திரம் இப்பொழுது காணப்படாமையின் 'இருந்ததே இல்லை' என்று சொல்லப்படுவது பொருந்தாததாகும் எனப்படுகிறது. அந்தக் குமரிமலை எக்காரணத்தாலோ அழிந்து போனமைபற்றிப் போலும் 'கடல் மலையாகவும், மலைகடலாகவும் கண்ட சிறப்பினை உடையது தமிழ் நாடு' என்ற புகழ் உண்டாகியதும்! இவையும் தமிழரது பழமையை உணர்த்தும்.

சமயம், மதம், கொள்கை என்பன ஒரு பொருட் சொற்கள். அது மக்களாய்ப் பிறந்தார் தமது உயிர்க்கு உறுதிபயப்பதாக அறிந்து கொண்ட கொள்கை எனப்பகுத்து ஓதப்படும். அதனை அந்தமிலின்பத்து அழிவில் வீட்டினை எய்துதற்கு உரிய வழியாகவும் கூறலாம். மறுமையைப் பற்றிய ஆராய்ச்சி என்றுங் கூறலாம். இதனை மனம், மொழிகளுக்கு எட்டாத நிலைமையைப் பற்றிய ஆராய்ச்சி என்றும் தமிழர் சிறப்பித்துக் கூறுவர்.

இனி, நமது தலையங்கத்திற்குச் சிறப்புக் கொடுக்கத் தொல்காப்பியம் முதலிய தண்டமிழ் நூல்களிலே எங்ஙனம் ஆரியக் கலப்பு அறியப்படுகின்றது என்பதும் நோக்கத்தக்கதே. அவற்றை விதந்து கூறி அவையல்ல தமிழர் சமயம்; தமிழர்களின் சமயம் வேறு என்று கூறுவது சாலச்சிறந்ததாகும். இங்கே சமயத்தோடு தொடர்புடைய கடவுள் வழிபாடு முதலியவற்றைக் கூறுவதும் பொருத்தமானது.

நம்மாலே மேலே கூறிப்பிட்ட காலத்திலே இருந்த தமிழ் நூல்களிலே தோன்றிய ஆரியக் கலப்புக்கு அறிகுறியாகப் பல புராணக் கதைகள் காணப்படுகின்றன. பல தெய்வங்களின் பெயர்களும், வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன.

சிவன், மாயோன், வருணன், இந்திரன், துர்க்கை முதலிய தமிழர்க்கல்லாத புதுக் கடவுளர் பெயர்களும் வழங்கி வரலாயின.

தெய்வங்களின் பெயராற் பரிபாடல்களும் தோன்றலாயின. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சாதிப்பாகுபாடு களும்; பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவு என்ற நிலைகளும் நிலைபெறலாயின. வேள்வி முதலிய வற்றைச்செய்தல், தெய்வங்களுக்குத் திருவுருவங்களை வைத்து வழிபாடியற்றுதல் முதலியனவும் கைகொள்ளப்பட்டன. தீ, நீர் என்ற இவற்றின் இடையே நின்று தவம் இயற்றுதல் முதலியனவும் கைக்கொள்ள பட்டன. வானுலகங்கள், நிரயங்கள் ஒத்துக் கொள்ளப்பட்டன. அவற்றிற்கு இக்காலம் நூல்களாலே அறியப்படும் மதிப்பும் அச்சமும் அக்காலத்தும் பொது மக்களால் அளிக்கப்பட்டு வந் தன. ஊன்றி நோக்க, எக்காரணங் கொண்டோ அல்லது காரண மில்லாமலோ செய்கை பற்றியோ அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாடுகளும், இல்லறம், துறவறம் என்ற நிலைகளும் தமிழ் நாட்டிலே தமிழரிடத்திலே மிகப்பழைய காலந் தொட்டே நிலைத்திருக்க வேண்டும் என்பது மாத்திரம் திண்ண மாகக் கருத இடமிருக்கின்றது. இதற்கு அப்பெயர்களெல்லாம் எளிய இனிய செந்தமிழ்ச் சொற்களாக அமைந்திருப்பதும் சான்று பகரும்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"
(தொல்—பொருள்—ரு.)

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகை"
(தொல்—பொருள்—எரு.)

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."
(தொல்—பொருள்—கசுஉ.)

"அறுநான் கிரட்டி இளமை நல்யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர்." (திருமுருகு—கஎக—கஅக.)

"வேற்றுமை தெரிந்த நாற்பால்." (புறம்—கஅஉ.)

"பருதி சூழ்ந்தஇப் பயன்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
வையமும் தவமும் தூக்கில் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றா தாகலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்.
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே."
(புறம்—௩ருஅ.)

"சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெழு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்ற நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்." (திருமுருகு—கஉசு—க௩எ.)

இவை கூறியவற்றை விளக்கிச் சான்றுபகரக் கூடியன. இத்தகைய இன்னும் பல உள. இக் கூறியன தமிழர்க்குப் புதியனவே.

நம்மால் குறிக்கப்படும் பண்டைத்தமிழர் இவற்றினும் சிறந்த முறையிலேயே தங்களது சமயக்கொள்கையை ஆராய்ந்து கண்டிருந்தனர். மிகப்பழைய காலத்திலேயே தமிழர்கள் ஐம்பெரும் பூதங்களை ஒத்துக்கொண்டார்கள்.

> "நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்." (தொல். பொருள்—கூசரு.)

> "மண்டிணிந்த நிலனும்
> நில னேந்திய விசும்பும்
> விசும்புதைவரு வளியும்
> வளித்தலைஇய தீயும்
> தீமுரணிய நீரும் என்றாங்
> கைம்பெரும் பூதம்." (புறம். 2.)

இவை முறையே தொல்காப்பியனாராலும், முரஞ்சியூர் முடிநாகராயராலும் கூறப்பட்டவையாம். இங்ஙனமே வேறு பல இடங்களிலும் தமிழர்கள் ஐம்பெரும் பூதங்களின் உண்மையை ஆராய்ந்திருந்த வரலாறு அறியப்படும். இது வேதமதத்தை ஒத்தது என்பதும் ஈண்டு அறியத்தக்கது.

பலதுறைகளிலும் சிறந்து விளங்கி நனி நாகரிகர்கள் என்று புகழ்பெற்ற காலங்கடந்த தமிழர்களின் பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும், அகம், புறம் என்ற இரண்டு சொற்களுள் அடக்கிவிடலாம். ஆனல், அவற்றின் பொருளோ எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பினை உடையதாகிப் பலவாக விரித்துக் கூறப்படுவதாகும். அவற்றுள் இக்காலத்துச் சிறப்பாகக் கூறப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும் பேறுகளும் அடங்கும். அம்முறையில் அகம் இன்பத்தினையும்; புறம் அறம், பொருள்களையும் அடக்கிக் கொண்டன என்பது தொல்லாசிரியர்

களது கருத்தாகும். வீடு 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின் துறவறமாகிய காரண வகையாலே கூறுவதன்றி இலக்கண வகையால் கூற இயலாதது' என்பது தமிழர்களின் தேர்ந்த கருத்து. புறம் என்பதிலே 'வீடு' என்பதும் அடங்கும் என்று கொள்ளலாம். "இம்மையிற் செய்தது மறுமைக்காம்" (புறம்) எனக் கொள்ளும் வேறு கூட்டத்தினரிலும் சிறந்தவர்களான பயன் கருதாது தொழிலியற்று பவராகவும் தமிழர்கள் சிறந்து விளங்கி வந்தார்கள்.

பல தெய்வ வணக்கங்களுக்கும், அவ்வாறே பல திறப்பட்ட உருவ வழிபாடுகளுக்கும் கருவியாய வட ஆரியர்களின் வருகைக்கு முன்னர்த் தமிழர்கள் கடவுள் உண்மையிலே பெரிதும் மனம் பற்றியவாயிருந்தார்கள். சூரியன், சந்திரன், தீ, மழை ஆகிய இயற்கைத் தோற்றங்களையே நன்றியறிதற்கு அறிகுறியாக உருவ வழிபாட்டிற்குக் கருவிகளாக அமைத்துக் கொண்டார்கள். இவற்றினும் மேலாகத் தமிழர்கள் "ஒருபற்றுக்கோடுமின்றி அருவாகித்தானே நிற்கும் தத்துவங் கடந்த தனிப் பொருள்" எனப்படும் அக்கடவுளை அருவ வணக்கமாகவே வணங்கி வந்தார்கள். உருவ வழிபாட்டினும் அருவ வழிபாடே நனி சிறந்தது என்பது பல சமயத்தினர்களும் ஒத்துக்கொண்ட உண்மையாகும். பின்னர்த் தகுதிக்குப் பொருந்தத் தம்மால் மிக உயர்வாகக் கருதப்பட்ட அந்தத் தனிப்பொருளைத் தமிழ்ப் பெருங் கடவுளாகிய 'முருகன்' என்றே சிறப்பாகப் போற்றி வந்தனர்.

இவை

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

(தொல். பொருள்-அஅ)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் அறியப்படும்.

இச்சூத்திரத்திலே பயின்றுவரும் 'கொடிநிலை' என்பது வெண்சுடர் மண்டிலமாகிய சூரியனைக் குறிப்பது. 'வள்ளி' என்பது தண் கதிர்மண்டிலமாகிய சந்திரனைக்குறிப்பது. 'கந்தழி' என்பது ஒருபற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருளைக் குறிப்பது. சிலர் கந்தழியை மேகம் என்றும், சிலர் கந்தழியைத் தீ என்றும் கூறுவர். அவர்களது கருத்தை ஒருபுடைதழுவியே முன்னர்க்கூறப்பட்டது. என்றாலும் நமது பண்டைத் தமிழர்களின் சிறப்பினை நோக்க அச்சிலரது கொள்கையிலும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் என்ற அந்தப் பேருதவியாளராய பெரியாரது தேர்ந்த கருத்தே பெரிதும் பொருத்தமானது. அவர்களது கருத்து, பற்றற்ற ஒரு பொருளைக் குறிப்பதே கந்தழி என்பது. இங்கே.

"சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்."

என்று கந்தழி வாழ்த்திற்கு அச்சிரிய பேருரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோட்பாவும் சோ ஆராயத்தக்கதாகும்.

இத்துணையுங் கூறியவாற்றால் மிகப்பழமையான காலத்திலே சிறந்த மதக்கொள்கையினை உடையவர்களாகத் தமிழ் மக்கள் விளங்கினார்கள் என்பதும், நன்றியறிவால் மிக்க இயற்கைவழி ஒழுகும் பகுத்தறிவிற் சிறந்த சீரியர்கள் என்பதும், 'பற்றற்ற தனிப் பொருளாக ஒன்று உண்டு' என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டார்கள் என்பதும், அதனையே முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபட்டு வீட்டு நெறியைக் கடைப்பிடித்து வந்தார்கள் என்பதும், பிறவும் ஒரு சிறிது விளக்கப்பட்டனவாம்.

உ

கடவுள் துணை,

# ஐயனுத் வி தொடர்.

திருவாளர் ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

## வற்றல் மரம்.

" அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று." (திருக்குறள்—எஅ)

இக்குறட்பாவிலே பயின்றுவரும் 'வற்றன்மரம்' என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகரால் 'வற்றலாகிய மரம்' என்று பொருள் கூறப்பட்டிருப்பதுடன் விசேட உரையில் 'பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்' என்றுங் கூறப்பட்டுள்ளது. இந்த 'வற்றல்' என்பது இக்காலத்துப் பலராலும் 'உலர்ந்த' என்ற பொருளில் வழங்கப்பட்டு வருவது சரியாகப் பொருந்தவில்லையோ என்பது அடியேனது ஐயப்பாடு. 'வற்றல்' என்பதே 'ஒரு மரத்தின் பெயராக இருக்கலாம்' என்பது அடியேனது கருத்து. 'வற்றல்' ஒரு மரமாகாதா ?

## பரசிராமர்.

சங்கத் தொகை நூல்களிலே பரசிராமர் வேள்வித்தூண் நட்ட செய்தி அறியப்படுகிறது. பரசிராமர் வேள்விக் கொடையாகக் காசிபரிடம் பூமியைத் தானம் பண்ணி மேற்குக் கடலோரம் சென்று கடற் கிறையிடம் நிலம் வேண்டிப் பெற்ற பின்னர் வேள்விகளைச் செய்தாரா? பிற எச்செயல்களையும் விட்டுத் தவமியற்றிவீடு பெற்றாரா? கடற் கிறையிடம் நிலம் பெற்ற பின்னர்ப் பரசிராமர் தமிழ் நாட்டிற்கு வந்தாரா? பரசிராமர் காலத்திய தமிழ் நாட்டின் மேற் கெல்லைக்கும் இக்காலத் தமிழ் நாட்டின் மேற் கெல்லைக்கும் மாறுபாடு உண்டா? பரசிராமர் செய்த சோழ நாட்டுச் செய்திகள் உபசார வழக்காகக் கேரள நாட்டிற்கும் ஏற்றப்பட்டிருத்தலாகாதா ?

உ

# தமிழர் வீரம்.

சாமி. சிதம்பரனார் எழுதியது.

(முன் தொடர்ச்சி.)

இனி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நாற்றிணை நிலங்களின் வீரர்களைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். தமிழ் முதனூல் ஆசிரியராகிய தொல்காப்பியர்,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

(தொல். அகத்திணை: ௫)

என்று கூறுவதனால், மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நால்வரும் அந்நிலத்திற் பண்டைநாளிற் பெரும்புகழுடனும், வீரத்துடனும் வாழ்ந்து கடவுட்டன்மைபெற்ற வீரர்களென்று ஒருவாறு நுனித்துணரக்கிடக்கின்றது. "மாயோன்" என்னுஞ் சொல் மயக்கமென்னுஞ் சொல்லிலிருந்துண்டான தூய தமிழ் மொழியாகும். 'சேயோன்' என்னுஞ் சொல்லும், இளமைத் தன்மையுடையவன் என்ற பொருளுடைய தமிழ்மொழியாகும். "வேந்தன்" என்னுஞ் சொல் தூய தமிழ்மொழி என்பதில் ஐயமுறுவார் ஒருவருமிலர். "வருணன்" என்னுஞ் சொல்லை மட்டிலும் தமிழ்ச்சொல்லெனத் துணிந்து கூறுதற்கில்லை. ஆயினும் மிகப்பழந் தொல்காப்பியத்தின்கட் காணப்படுதலானும், தொன்னிலமாகிய நெய்தல் நிலத்தமிழ் மக்களால் வழங்கப்படுதலானும், இம்மொழியிற் றமிழோசையே விளங்கி

நிற்றலானும் தமிழ்ச்சொல்லென்று துணிதலுங்கூடும். மேற் கூறிய நால்வர்க்கும் ஆண்பாலை உணர்த்தும் அன்விகுதி கொடுத் துக் கூறப்படுதலாலும், கடவுள் என்று கூறப்படாமையாலும், அவர்கள் நால்வரும் சிறந்த கடவுட்டன்மைபெற்ற வீரர்களாகிய ஆண்மக்களாதல் வேண்டும் என்றெண்ண இடமுண்டு.

உலகத்துமக்களில் உண்மைக் கடவுளை முதலிற் கண்டறிந்த வர்கள் தமிழ் மக்களே யாவர்கள். அதனைக் 'கடவுள்' என்னுந் தனித் தமிழ்ச் சொல்லே விளக்கி நிற்கும். கடவுள் என்பவர், நாம் கூறும் புனைந்துரை வரலாறுகளுக்கும், உருவ வேறுபாடு களுக்கும், பண்புகளுக்கும் அடங்காது கடந்து நிற்பவர். தமிழ் மக்கள் உண்மைக் கடவுளை யுணர்ந்து வணங்கியதோடன்றி, உலகிற்கு நன்மை பயந்து நிற்கும் இயற்கைப் பொருள்களையும், கடவுள் வடிவாகக் கண்டு தொழுதனர். இதனை ஆசிரியர் தொல் காப்பியர் கூறிய

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.
(தொல். புறத்திணை 33.)

என்ற நூற்பாவால் உணரலாம்.

(இதன் பொருள்) கதிர், தீ, மதி என்று சொல்லப்பட்ட, குற்றம் நீங்கிய சிறப்பினையுடைய, முதன்மையான மூன்றும் கடவுள் வாழ்த்தொடு சேர்த்து எண்ணப்பட்டு வரும்.

கொடிநிலை—உச்சியில் நிற்பது. உச்சியில் நிற்பது வெங்கதி ராதலின், கொடி நிலை யென்பது அதனைக் குறித்தது. கந்தழி —பற்றுக்கோட்டை அழிப்பது. தான் பிடித்த பொருளை அழிக் குந் தன்மையுடையது தீ யாதலின் கந்தழி யென்பது தீயைக் குறித்து நின்றது. வள்ளி—செழுமையைத் தருவது. வள்— செழுமை. குளிர்ச்சியாகிய செழுமையை யளித்து உலகினரை மகிழச் செய்வதால், வள்ளி, மதியைக் குறித்து நின்றது.

இயற்கை யொளியை யுடைய, கதிர், தீ, இரண்டையும், "கொடிநிலை, கந்தழி" என ஒரு சேர முன்னும், கதிரின் உதவி யால் ஒளிதரும் மதியை "வள்ளி" என இவற்றின் பின்னும் முறைப்படுத்தி வைத்துக் கூறியுள்ள அருமை மிகவும் பாராட்டத் தக்க தொன்றாகும்.

மேற் கூறிய வற்றால் தமிழர்கள், நாற்றிணை நிலத் தெய்வங் களை யன்றியும், கதிர், தீ, மதி இவைகளை யன்றியும் கடவுள் என்னும் பெயருடைய வேறொன்றை வழிபாடு செய்து வந்தனர் என்று தெரிகின்றது. அக்கடவுள் முருகு என்னும் பெயராலும் சுட்டப்படும். 'முருகு' என்பது என்றும் அழியா இளமைத் தன்மை வாய்ந்தது எனப் பொருள்படும் ஓர் தூய தனித் தமிழ்ச் சொல்லாகும். சிவம் என்பதும் அழியா மங்கள முடையது என்ற பொருள் தரும் சொல்லாகும். இவ்விரு மொழிகளில் முருகு என்னுஞ் செந்தமிழ் மொழியே கடவுளைக் குறித்து வழங் கிய மிகப்பழஞ் சொல்லாகும். சிவம் என்னுஞ் சொல் பின்னளிற் றோன்றிய மொழியாகவே யிருத்தல் வேண்டும். முழுமுதற் கடவுளைக் குறிக்கும் முருகு என்னுஞ் சொல்லையும், சிவம் என் னுஞ் சொல்லையும் பிற்காலத்தினர், முருகன், சிவன் என ஆண் பாலராக்கி, அவர்களுக்கு மனைவி மக்களையும் பிணைத்து வைத்து, இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்தி, மக்களினும் மிக்க அல்லற்படச் செய்தனர்.

இனி நானிலத்தினராய மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலியவர்கள் அந்நிலங்களிற் பண்டை நாளிலுறைந்த வீரர்கள் என்பதற்குரிய காரணங்களை முறையேகூறிச்செல்வோம்.

முல்லை நிலமக்கள் இஞ்ஞான்றும் கறுப்பண்ணன் என்ற தேவை வழிபாடு செய்கின்றனர். இக்கறுப்பண்ணனே, பண் டைத் தமிழ் முல்லை நிலமக்களால் வழிபட்டுவந்த மாயோனவான். கறுப்பண்ணனைப்பற்றி வழங்கும் வரலாறு, அவன் ஒரு தமிழ்வீர னென்பதை விளக்கி நிற்கும். கறுப்பு நிறமுடைய இவ்வீரனையே பிற் காலத்தினர் திருமாலாக்கியிருத்தல் வேண்டுமென ஊகிக்க

இடமிருக்கின்றது. திருமாலின் நிறமும் கறுப்பு. கறுப்பண்ண சாமியின் நிறமும் கறுப்பு. திருமாலுக்கும் தண்டு வாள் ஆகிய படைகளிருக்கின்றன. கறுப்பண்ணனுக்கும் தண்டு அரிவாள் முதலிய படைகளிருக்கின்றன. காட்டில் வாழ்பவருக்குத் தண்டும் அரிவாளும் இன்றியமையாத படைகளன்றோ? கறுப்பண்ண னுக்கு வழி பாடாற்றுவதும், பண்டைத் தமிழர் வழக்கத்தை யொட்டியே செய்யப்படுகின்றது. பண்டைத் தமிழர்கள் வெங் கள்ளும் ஊனும் விரும்பியுண்டவர்கள். அவர்கள், அவற்றையே தங்கள் முன்னோர்களாகிய வீரர்களுக்கும் வைத்துப் படைப்பார் கள். உயிர்களைப் பலியிட்டும், கள், ஊன் முதலியன கொண்டும் முல்லை நில மக்கள் தங்கள் நிலத்தெய்வத்திற்கு விழாச் செய்தனர். மேற் கூறிய காரணங்களால் கறுப்பண்ணனே முல்லை நிலத் திற்குரிய மாயோன் என்று ஒருவாறு துணியலாம். இக்கறுப் பண்ணன், மிகப் பழங் காலத்தில், முல்லை நிலத்தினர்க்குத் தலை வனாகவிருந்து, பெருநலம் புரிந்து, கடவுள் வழி பாட்டினால் கட வுட்டன்மை பெற்ற வீரனாதல் வேண்டும். "சித்தமலம் அறுவித் துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்று மணிவாசகர் பலமுறை கூறுவதால் மக்கள் கடவுட்டன்மை யெய்துதலை யறி யலாம். கடவுட்டன்மை யடைந்த பெரியார்களை உலக மக்கள் கடவுளாகக்கொண்டு வணங்குவதை, உலகில் எப்பாகத்திலுங் காணலாம்.

இனி, குறிஞ்சி நிலத் தேவாகிய சேயோனைப்பற்றி யாராய் வோம். சேய் என்பது இளமையைக் குறிக்கும் சொல்லாகும். மலைநிலத்து மக்களிற் பண்டைக் காலத்திற் சேயோன் என்னும் பெயருடைய கட்டிளமை வாய்ந்த வீரன் ஒருவனிருந்திருக்க வேண்டும். அவன் குறிஞ்சி நிலமக்களின் தலைவனாகவும் இருந் திருக்கலாம். அவனுடைய பெயர்தான் முருகன் என்பது. முருகு என்னும் கடவுளை வணங்கி அருள் பெற்ற வீரனாதலின் அவன் பெயர் முருகன் என வழங்குவதாயிற்று. பிற் காலத்துப் புனைந்துரையாகிய கந்தபுராணக் கதையை ஊன்றி நோக்குவாரும் முருகனை ஒரு தமிழ் வீரனென்று ஒப்புக்கொள்ள ஒருப்படலாம். குறப்பெண்ணாகிய வள்ளியம்மையை மணந்ததும், சூரன் என்ப

வனுடன் எதிர்த்துப் போர் புரிந்ததும், தனக்குப் பல வீரர்களைத் துணையாகக் கொண்டிருந்ததுமாகிய செயல்கள் முருகன் ஒரு வீரன் என்பதை யுணர்த்தும். கோழியையும், மயிலையும், முறையே கொடியாகவும், ஊர்தியாகவும் கொண்டிருப்பதும், எதிர்த்துவரும் விலங்குகளையும், பகைவர்களையும் கொல்லுதற்காக, வேற்படை, விற்படைகளை வைத்திருப்பதும் முருகன் ஒரு வீரன் என்பதை யுணர்த்தும். இந்நாளிலும் குறிஞ்சி நில மக்கள் முருகனைத் தங்கள் குலக்கடவுளாகக் கொண்டு வழி பாடாற்றுவதையும், முருகன் தங்கள் குலத்துப் பெண்ணை மணம் புரிந்தானென்று கூறுவதையும், நோக்கும்போது அவன் ஒரு வீரனென்று கொள்ள இடமுண்டு. அன்றியும் திருமுருகாற்றுப்படையிற் கூறப்படும் சிலபகுதிகளை ஆராய்ந்தால், முருகன் குறிஞ்சி நில மன்னனாகிய ஒரு வீரனென்றெண்ண இடந்தருகின்றது. அதனைக் கீழே தருகின்றோம்.

"மாலையை அணிந்த மார்பையுடையவனே! எல்லா நூல்களையுமறிந்த புலவனே! போர்புரிவதில் ஒப்பற்றவனே! போரில் வெற்றி பெறுகின்ற இளமைப்பருவத்தை யுடையவனே! எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்க்குச் செல்வமாயிருப்பவனே! அறிவுடையவர்கள் புகழ்ந்து சொல்லும் சொற்களின் கூட்டமாயுள்ளவனே! அழகிய இளம்பெண்கள் பலரை மணந்திருப்பவனே! வீரர்களுக்குள் ஏறுபோன்றவனே! வேல் பொருந்திய நீண்ட கையையுடைய பெருஞ்செல்வனே!* மலையையழித்த குறையாத வெற்றியை யுடையவனே! விண்ணையளாவிய பெரியமலைகளையுடைய குறிஞ்சிநிலத்தின் தலைவனே! பலரும் புகழ்ந்து சொல்லும் நல்ல சொற்களையுடைய புலவர்

---

* முருகன் என்னும் வீரன், காடு நிறைந்த மலையொன்றைச் சீர் செய்து வாழ்வதற்குத் தகுதியாக அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். வீரர்களின் செய்கைகளையும், அவர்கள் பெயர்களுடன் சேர்த்து வழங்குவது பண்டைக்கால வழக்கம். இதனை, சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலிய பெயர்களாற் காண்க.

களுக்குள் ஏறுபோன்றவனே! பெறுதற்கரிதான முறைமை யுடைய, பெருமை பொருந்திய பெயராகிய† முருகன் என்னும் பெயருடையவனே! வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்கும் பெரும்புகழையுடையவனே! துன்புற்றவர்கள்பால் இரக்கங்காட்டும் சேயே! பெரும்போர்களில் வெற்றிபெற்ற, நினது வீரம் விளங்கும் மார்பில் பொன்னணிகளைப் பூண்டவனே! பரிசில் கருதி வந்தவர்களைக் காப்பவனாகவும், பகைவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கின்றவனாகவுமுள்ள பெருமையையுடைய வேளே! பெரியோர்களாற் போற்றப்படும் பெருஞ் சிறப்புப்பெற்ற, கடவுட்டன்மையை யுடையவனே! சூரன் குலத்தைக் கெடுத்த, போரில் மிகுந்த வலிமையினையுடைய மதவலியே! உவமிக்கத் தகுந்த உயர்ந்தவனே!'' என்று திருமுருகாற்றுப்படையிற் கூறப்படுகின்றது. இதனை,

மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக!
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்!
மண்டமர் கடந்த வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்!......

என்னும் அடிகளாற் காணலாம்.

† முருகு என்னுங் கடவுட்பெயரை இவ்வீரன் அடைந்திருப்பதைப் பாராட்டிக் கூறுவதை இதனால் அறியலாம்.

மேற்கூறிய திருமுருகாற்றுப்படையின் அடிகளையும், பொருளையும் நோக்கும் போது, முருகன் குறிஞ்சி நிலத்திற் பெரும்புகழுடன் அரசாண்ட ஒரு வீரனென்று எண்ணக்கிடக்கின்றதன்றோ? வீரர்களுக்குச் செய்யும் விழாவைப் போலவே பண்டைநாளில் முருகனுக்கும் விழாவயர்தல் வழக்கமாகும். "வேலன் வெறியாட்டயர்தல்" என்னும் விழா குறிஞ்சி நில மக்களால் முருகனுக்கு நடத்தப்படுவதாகும். கள்ளுண்டு, வெறித்து, விளையாடுதலுக்கு வெறியாட்டயர்தலென்று பெயர். இதனைக் குறிஞ்சி நிலத்தினர் முருகனுக்குச் செய்யும் சிறப்பான கடமையாகக் கொண்டிருந்தனர்.

அன்றியும் பண்டைத் தமிழ்க்குடிகளில் வேளிர்குடியும் ஒன்றென்பது ஆராய்ச்சி வல்லுநர் கண்டறிந்த உண்மை. முருகனுக்குரிய பெயர்களில் வேள் என்பதும் ஒன்று. இதைக் கொண்டு வேளிர் என்னுந்தமிழ்க்குடியின் முதல்வனாக முருகனைக் கொள்ளலாம். *வேள் என்னும் பெயருடைய முருகன் குடியிற் பிறந்தார்க்கே வேளிர் எனப் பெயர் வழங்கியிருத்தல் கூடும். வேளிர் என்பது குறுநில மன்னரைக் குறிப்பதும் உற்றுநோக்கத்தக்கதாகும்.

ஆகவே மேற்கூறிய காரணங்களால், முருகன் குறிஞ்சி நிலத்திற் பண்டைக் காலத்தில், பெருங்கொடையாளியாகவும், ஒப்பற்ற வீரனாகவும், கட்வுட்டன்மை பெற்றவனாகவும், வாழ்ந்த ஒரு தமிழ் வீரனென்று கொள்ளலாம்.

இனி மருத நிலத்திற்குரிய வேந்தன் என்பவனைப் பற்றி யாராய்வோம். வேந்தன் என்பவனும் மருத நிலமக்களாகிய பண்டைத் தமிழ்க்குடியிற் றோன்றிய தமிழ் வீரனாகவிருத்தல்

---

* குருவென்னும் அரசன் பிறந்த குலத்தைக் குருகுலம் என்பது போலவும், யதுமன்னன் பிறந்த குலத்தை யதுகுலமென்பது போலவும், இரகுவென்னும் மன்னன் பிறந்ததனாலும், இட்சுவாகுவென்னும் மன்னன் பிறந்ததனாலும் முறையே இரகுவமிசம், இட்சுவாகு வமிசம் என்பன போலவும் வேள் பிறந்த குடியை வேளிர்குடியெனக் கூறியிருத்தல் கூடும்.

வேண்டும். பிற்காலத்தினர் வேந்தன் என்ற தமிழ்ப்பெயரை நழுவவிட்டு இந்திரன் என்ற வடமொழிப் பெயரைக்கொண்டனர். அதனால் தமிழ் நாட்டு மருதநிலத்து வீரனாகிய வேந்தனும், வட நாட்டு வீரனாகிய* இந்திரனும் ஒன்றாயினர். ஆதலால் யாமும் வேந்தனை இந்திரனென்ற பெயராலும் குறிப்பிடுகின்றோம். இந்திரனுக்குரிய படை வயிரவாள். மருதநிலம் மிகவும் செழிப்புடைய நிலமாதலின், பிறநிலத்தினர் அனைவரும், அதனைக் கைப்பற்றக் காமுறுதலியற்கை. அதனாற் பிறநிலத்தினர்க்கும் மருத நிலத்தினர்க்கும் அடிக்கடி போர் நிகழும். பண்டை நாளில், போரில் மிகவும் உதவிசெய்யக் கூடியது வாட்படை யாதலின், அதனையே மருத நில மன்னன் படைக்கலமாகக் கொண்டிருத்தல் கூடும். மற்றும் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களில் இந்திரனுக்கு விழாவாற்றுஞ் சிறப்பைப் பற்றிக் கூறப்படுகின்றது. இந்திர விழாவும் தமிழர் நாகரீகத்தை யொட்டியே நடைபெற்றதாகக் காண்கின்றோம். அன்றியும், இந்திரனை முழுமுதற் கடவுளாகத் தமிழ் நூல்களில் யாண்டும் கூறப்படவில்லை.

அன்றியும், வடமொழி நூல்களில், நூறு குதிரை வேள்வி செய்தவர் இந்திரபதவியைப் பெற்று இந்திரனாக விளங்கலா மென்று கூறப்படுகின்றது. தமிழ் நூல்களிலோ, மக்களில் அறம்புரிந்த மிக்கோர் இந்திரர் ஆகலாமெனக் கூறப்படுகின்றது. இதனை மணிமேகலையிற் போதரும் ஆ மகன் வரலாற்றாலும்,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

---

* ஆரியர்கள் தென்னாட்டிற் குடிபுகுந்த காலத்தில் அவர்களுக்கும் தமிழர்களுக்கும், நடந்த போர்களில், ஆரியர் பக்கம் நின்று அவர்களுக்கு மிகவும் உதவிபுரிந்தவன் இந்திரன். இவன் செயலை விளக்கும் வணக்கப் பாட்டுக்கள் பல இருக்குவேதத்திற் காணக்கிடக்கின்றன. தமிழர்களை இருக்குவேதத்தில் தாசர்கள் (தஸ்யூக்கள்) என்று கூறப்படுகின்றது. தாசர்கள் என்பதற்கு அடிமைகள் என்பது பொருள்.

என்ற திருக்குறளாலும், இக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய "இந்திரன் சான்றென்றது, இவ்வுலகின்கண் மிகத்தவஞ்செய்வா ருளரானல், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான்" என்ற உரையாலும் மக்களே கடவுட்டன்மைபெற்று இந்திரனுவர் என்பது தெளியக்கிடக்கின்றது.

அன்றியும் இந்திரகுலத்தினர் எனத் தம்மைக் கூறிக்கொள் ளும் பண்டைத் தமிழ்க்குடியினர் நம் நாட்டிற் பலரிருக்கின்றனர். இவர் கூறுவது உண்மையாயின், இவர்களின் குலமுதல்வன் இந்திரனாகவே யிருத்தல் வேண்டும். அவ்விந்திரன் தமிழ் மருத நில வேந்தனேயாவன். ஆகவே மருத நிலத்தினரால் போற்றப் படும் வேந்தனும், அந்நிலத்திற் பண்டைநாளிற் போராற்றலோ டுறைந்து, அரசியற்றி, அறமியற்றி இறைவன் அருள்பெற்றுக் கடவுட்டன்மையெய்திய தமிழ் வீரனாவான் என்பதை யறியலாம்.

இனி, பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலத்து வருணனைப் பற்றியாராய்வோம். இந்நாளிலும் கடற்கரைப் பட்டினங்களி லுள்ளவர்கள் வருணனுக்கு வழிபாடு செய்கின்றனர். அவர்கள் வழிபடும் முறை, பண்டைத் தமிழ் மக்கள் வீரக்கடவுளர்க்கு வழிபடும் முறையைப் போலவே காணப்படுகின்றது.

பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலையில்

வலைஉணங்கு மணல் முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூதாளத்துத் தண்பூங்கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்

எனவரும் அடிகளால், குறிஞ்சி நில மக்கள் * "மீன்வலையுலரும் வெள்ளிய மணல் பரந்த முற்றத்தின்கண் விழுதையுடைய தாழஞ்

---

* உயர்திரு. சுவாமி, வேதாசலம் என்னும் மறைமலையடிகளாலியற்றிய பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை.

செடியின் கீழ் வளர்ந்த வெண்கூதாள மலராற் செய்த மாலையை யணிந்தவராய்ச் சினைகொண்ட சுறுமீன் கொம்பைநட்டு அதனையே இருக்குமிடமாக எற்றிய, வலிய கடற் றெய்வத்தின் பொருட்டாக, மடலையுடைய தாழைமலரைச் சூடியும்,'' வருணனுக்கு வழிபாடு செய்யும் வழக்கம் அறியப்படுகின்றது.

சுறுமீன் கொம்பு இப்பொழுதும் நாட்டுப்புறங்களிலுள்ளவர்கள் போர் செய்யப் பயன்படும் வலிய படையாக விளங்குகின்றது. வாள்போன்ற கூரிய பற்களையுடைய அதனையே நெய்தனிலத்தினர் போர்ப்படையாகக் கொண்டிருந்தனர் என்பதில் வியப்பொன்றுமில்லை. அந்நிலத் தலைவனாகிய வருணனுக்கும் அதுவே படையாகும். அந்நிலத்தினர் கடலிற்சென்று மீன்பிடித்து, அதனைக்கொண்டு வாழ்க்கையை நடத்துவோராவர். அந்நிலத்தின் றலைவனாயிருந்த வருணன், நீர்மேற் செல்வதிலும், மீன் பிடிப்பதிலும் மிகத்திறமையுடையனாகவும், அந்நிலத்தினர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்த வீரனாகவும் இருந்திருத்தல் வேண்டும். மற்றும் இறைவனருளெய்திக் கடவுட்டன்மையும் பெற்றவனாவான். அதனால் நெய்தனிலமக்கள் அவனைத் தெய்வமாகக்கொண்டு வழிபாடு செய்வாராயினர். வருணனை யாரும் முழுமுதற் கடவுளாகக் கொண்டதில்லையென்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கதாகும்.

அன்றியும் வருண குலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள், தமிழ் நாட்டிலிருக்கின்றமையானும், அக்குலத்தினர் வருணன் வழியில் வந்தவர்களென்று கொள்ளப்படுதலானும், இதனால் வருணன் ஒரு தமிழ் மகன் என்று கருதவேண்டியிருத்தலானும், வருணன் நெய்தல் நிலத்திலுறைந்த ஒரு தமிழ் வீரனென்றுணரலாம்.

மேலே கூறிப்போந்த காரணங்களால், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச் சொல்லப்படும் நான்கு நிலத் தெய்வதங்களாகிய மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நால்வரும் தமிழ் வீரர்களென்று ஒருவாறு துணியலாம். 'பிற்காலப்பெரியார்கள் இந்நால்வரில் மாயோனையும், சேயோனையும்

முழுமுதற் கடவுளென்று கருதுவதற்கான நூல்கள் பலவற்றை ஆக்கியிருக்கின்றனர். அவற்றால் அவர்கள், வேந்தன், வருணன் ஆகிய இவ்விருவர்களைக் காட்டிலும் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றனர். * பண்டைக்காலத்தில், தமிழ் மக்கள், இந்நாற்றிணைக் கடவுளரையும், ஏற்றத் தாழ்வில்லாத் தெய்வங்களாகவே வைத்து வணங்கிவந்தனர். இதனை அக்கடவுளர்க்காற்றும் விழாக்களின் ஒற்றுமையால் அறியலாம். தமிழர்கள் தம்நாட்டு வீரர்களுக்கும், சான்றோர்களுக்கும் கற்புடைப் பெண்டிர்களுக்கும், கல் நாட்டும் வழக்கமுடையவர்களென்பதை முன்னரே கூறினோம். அவ்வழக்கப்படியே, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய இந்நான்கு வீரத்தமிழ் மக்களும் கடவுளராயினர் என்று கொள்ளலாம். தமிழர்கள் இவர்களை முழுமுதற் கடவுளாகக் கொண்டிலர் என்பதை, முன்னர்க் கூறிய கடவுள் என்னுந் தூய தனித் தமிழ்ச் சொல்லின் பொருளாலும், கொடிநிலை கந்தழி யென்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் உணரலாம்.

இவ்வாறு, நானிலத் தெய்வங்களையும் தமிழ் வீரர்களென்று கூறுவது பற்றிய எமது கொள்கையில், பலர் மாறுகொள்ளக் கூடுமென்பதையறிவேம். ஆயினும், "யாருக்கும் தமது எண்ணத்தை வெளியிடும் உரிமை உண்டு" என்ற துணிவைத் துணைக்கொண்டே எமது உளளக் கிடக்கையை வெளியிட்டேம். யாமும் எமது கொள்கையை முடிந்த முடிபாகக் கொள்ளவில்லை. ஐயமுடிபாகவே கொண்டிருக்கின்றோம். ஆதலால், அறிஞர்கள்,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற தமிழ் மறையை நினைவு கூர்ந்து, எமது கொள்கையின் உண்மையை யாராய்ந்து, கொள்ளத்தக்கதாயிற் கொள்ளுமாறும், தள்ளத்தக்கதாயிற் றள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

---

* நாம் குறிப்பிடும் பண்டைக்காலம், தொல்காப்பியருக்கும் முற்பட்ட காலத்தையே. அதாவது ஏறக்குறைய நாலாயிரத்தைஞ்ஞூறாண்டுகளுக்கு முற்பட்டகாலம்.

இனி, தமிழர்கள் தங்கள் வீட்டுத் தெய்வங்களென்று கொள்ளும் குலதெய்வங்களைப்பற்றிச் சிறிது கூறுகின்றோம். தமிழ்க்குடியினர் ஒவ்வொருவரும் தங்கள் குலக்கடவுளாக ஒவ்வொரு தெய்வங்களை வணங்கி வருகின்றனர். அத்தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவு மிருக்கின்றன. ஆண் தெய்வங்களாகவு மிருக்கின்றன. தமது இல்லில் மணம் முதலிய சிறப்புக்கள் நடைபெறுதற்கு முன்னர்க் குலதெய்வத்திற்குப் பூசனையாற்றும் வழக்கம், இன்றும் தமிழ்க்குடிகள் ஒவ்வொன்றிலும் நிகழ்ந்து வருகின்றது. இவ்வாறு வணங்கப்படும் கடவுளர்கள் தமிழ்க் குடிகளிற் பண்டைநாளில் வாழ்ந்த, கடவுட்டன்மைபெற்ற, சான்றோராகிய வீரர்களாகவோ, போர்புரிந்த வீரர்களாகவோ நாட்டிற்கு ஊழியம் புரிந்த வீரர்களாகவோ, மக்களுக்கு ஊழியஞ் செய்த வீரர்களாகவோ, பத்தினிப் பெண்டிராகிய வீரர்களாகவோ இருக்கக்கூடுமென்றெண்ணலாம்.

அத்தகைய வீரர்களின் வழித்தோன்றல்கள் ஒவ்வொருவரும், அவர்களைத் தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்தனர். அதனால் அவர்களைக் குலதெய்வங்களாகக் கொள்ளப்பட்டது. மேற்கூறிய காரணங்களால் தமிழரின் குலதெய்வங்கள் தமிழ் வீரர்களே யென்பதைய யறியலாம். இவையெல்லாம் சிலர்க்குப் புதுமையாகத் தோன்றக்கூடும். ஆனால் ஊன்றி நோக்குவார்க்கு உண்மையென்று விளங்காமற்போகாது.

கோத்திரங் கூறிக்கொள்ளும் வழக்கம் தமிழர்களுக்குள் இல்லையென்பதையும், அவ்வழக்கம் ஆரியர்களுக்குரிய தென்பதையும், அவர்களைப் பார்த்தே தமிழர்களும் கோத்திரம் கூறிக் கொள்ளத் தொடங்கின ரென்பதையும், ஈண்டு நினைவுகூரவேண்டும். ஆரியர்கள் தங்கள் முன்னோர்களாகிய முனிவர் பெயரைக் கோத்திரமாகக் கூறிக்கொள்வது போலவே தமிழர்களும், தங்கள் குலமுன்னோரின் பெயரையே கோத்திரமாகக் கூறிக்கொண்டனர் என்பதைச் சில தமிழ்க்குடியினரின் கோத்திரமும் குலதெய்வமும் ஒன்றாயிருப்பதைக் கொண்டறியலாம். இதனாலும் தமிழர்களின் குலதெய்வங்கள் தமிழ் வீரர்களென்பது அறியப்படும்.

இனி ஒவ்வொரு ஊரிலும் உள்ளவர்களால் ஊர்த்தெய்வங்களென்று விழாச்செய்து வணங்கும் சிறு தெய்வங்களைப்பற்றிச் சிறிது கூறுகின்றேம். வீரன் என்னும் ஒரு தமிழ்த் தெய்வத்தை எல்லாக் கோயில்களினுங் காணலாம். இவ்வீரன் யார் என்பதை யாராய்வோமாயின் இவன் பண்டைக்காலத்தில் நம் நாட்டிலுறைந்த ஒரு தமிழ் வீரனுகவே இருக்கவேண்டும். இன்னும் நொண்டி வீரன், சங்கிலிக்கறுப்பன் முதலிய சிறு தெய்வங்களும், பண்டைத் தமிழ் வீரர்களென்பதை யறியலாம். மதுரை வீரன், காத்தவராயன் முதலிய வீரர்களின் கதையைப் பலரும் அறிவார்கள். இவர்கள் தமிழ் வீரர்களென்பதை மறுப்பார்யாருளர்? இவர்கள் இந்நாளில் தமிழ் மக்களால் கொண்டாடப்பெறும் கடவுளர்களாக விளங்குகின்றனர். இன்னும், சிற்றூர்களிற் காணப்படும் சிறு தெய்வங்களைப்பற்றி அவ்வூரினர் கூறும் வரலாறுகளைக் கேட்டறிவோமாயின், சிறு தெய்வங்கள் யாவும் தமிழ் நாட்டு வீரர்களே யென்பதில் ஐயமுறமாட்டோம். இங்ஙனமே, மாரியம்மன், பிடாரியம்மன், அங்காளம்மன், பேச்சியாயி முதலியவர்களும், தமிழ்நாட்டுப் பத்தினிப்பெண்டிராவர். இத்தெய்வங்களெல்லாம் தமிழ் மக்களின் குலதெய்வங்களாகவிருத்தலும், இவர்கள் தமிழ் வீரர்களென்பதைக் காட்டும். இப்பொழுதும் ஒருவர் இறக்கும்போது அவர்க்கு விருப்பமான பொருளைக் கொடுக்கும் வழக்கமிருக்கின்றது. *இறந்த பின்னும், ஆண்டுதோறும், இறந்தவர்களுக்கு விருப்பமான பொருள்களை வைத்துப்படைப்பதும், அதனை மற்றவர்களுக்கு வழங்குவதும் பண்டைத்தமிழர் வழக்கம். அவ்வழக்கத்தை யொட்டியே சிறு தேவர்கட்கு விழாவெடுக்குங் காலத்தில் ஆடு, கோழிகள், முதலிய பொருள்களைப் படைக்கின்றனர். இவ்வழக்கம் பண்டு

---

* இதனால் இறந்தவர்களுக்காகத் திதிகொடுக்கும இக்காலத்திய வழக்கம் பண்டைக்காலத்தில் இல்லையென்பதையும், இறந்தவர்களுக்கு விருப்பமான உணவுகளை ஏனைச் சுற்றத்தோடும், ஏழையரோடும் கலந்துண்ணுதலே பண்டைத் தமிழர் இறந்தவர்கள் பொருட்டுச்செய்யும் வழக்கம் என்பதையு மறியலாம்.

முதல் இன்றுவரை நடந்து வருகிறது. பண்டைத் தமிழ் வீரர்கள் விரும்பியுண்டவை கள்ளும் ஊனும் ஆதலின் பின்னோர் அவற்றையே அவர்களுக்குப் படைப்பாராயினர்.

மற்றும் நாட்டின் மீதும், அரசன் மீதும் அன்புடைய தமிழ் வீரர்கள், தங்கள் அரசனுக்குப் போர் நேர்ந்துழி, அரசன் வெற்றிபெற வேண்டுமென நோன்பிருந்து, காளி கோயிலுக்குச் சென்று, கோயிலுக்கு எதிரிலுள்ள மரத்தில் தமது தலைமயிரை முடிந்து தொங்கிக்கொண்டு, தமது கழுத்தைத் தாமே அறுத்துக் கொள்ளும் வழக்கம் பண்டைத் தமிழர் வழக்கமாகும். இதுவும் தமிழர் வீரத்தைக் காட்டுவதாகும். தமிழ் வீரர்கள் தெய்வங்களாக விளங்கும் பெருமையைப் பெறுவாராயின் தமிழர் வீரத்தின் சிறப்பை எவ்வாறு கூறுவது? பண்டைத் தமிழ்நாட்டின் பெருமையை என்னென்று கூறுவது? வீரர்களுக்கு உருவச்சிலை செய்து கோயில்கட்டும் வழக்கம் ஒன்றே தமிழ் வீரர்களின் பெருமையையும், தமிழ் மக்களின் செய்ந்நன்றி மறவாச் சீரிய தன்மையையும் விளக்கிநிற்கின்றதன்றோ? இன்னும் தமிழர் வீரத்தைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் கூறலாம். தமிழ் மக்களின் வீரச்சிறப்பை யறிவதற்கு இவ்வளவே யமையுமெனை விரிவஞ்சி நிறுத்துகின்றோம். இனியேனும் தமிழ்மக்கள், தமிழ் நூல்களாகிய காடுகளிற் புகுந்து, அங்கே மறைந்திருக்கின்ற நமது பண்டைத் தமிழ் வீரர்களைக் கண்டு, அவர்கள் வீரத்திற் பங்கு பெறுமாறு வேண்டுகின்றோம்.

## முடிபு.

இக்கட்டுரையில், கொண்ட கொள்கையைக் குறைவின்றி முடிக்கும் வல்லன்மையுடைய, தமிழரசர்களாகிய வீரர்களைப் பற்றியும், இரத்தலையே மேற்கொண்டிருப்பினும், தன் மதிப்பிற்கு இழுக்கின்றி வாழ்ந்த புலவர்களாகிய வீரர்களைப்பற்றியும், தம் கொள்கையினின்று எட்டுணையும் மாறுபடாத மனவுறுதி கொண்ட நாயன்மார், ஆழ்வார் முதலிய அடியார்களின் வீரத்தைப் பற்றியும், தன்னைத்தான் காத்துக்கொள்ளும் ஆற்றலமைந்த

பத்தினிப் பெண்டிர்களாகிய வீரமகளிரைப்பற்றியும், வீரர்களுக்கும், சான்றோர்களுக்கும், பத்தினிப்பெண்டிர்க்கும் உருவச்சிலை செய்து நட்டுக் கடவுளாக வழிபடும் வழக்கம் பண்டை நாளிலிருந்த தென்பதைப் பற்றியும், நாற்றிணைத் தெய்வதங்களாகிய வீரர்களைப்பற்றியும், தமிழ்க்குடிகளின் குலதெய்வங்களாகிய வீரர்களைப்பற்றியும், ஊர்ச் சிறு தெய்வங்களாகிய வீரர்களைப் பற்றியும் சிற்சில கூறினேம். இவற்றால் தமிழர் வீரத்தின் உயர்வும், தமிழர்கள் முழுமுதற்கடவுளைத் தனியாக வணங்கி வந்த உயரிய கொள்கையும் ஒருவாறு விளங்கக் கூடுமென்று நம்புகின்றோம்.

வீரத்தமிழ்மக்களே! நாம் இனியேனும் நமது பண்டைப் பெருமையை நினைவுகூர்ந்து முன்னேற்றமடைய முயல்வோமாக. நம் தமிழ் மக்களனைவரும், நமது முன்னோரின் வீரத்தன்மையை யுணருமாறு, ஒவ்வொரு வீரர்களைப்பற்றியும் சிறு சிறு சுவடிகளெழுதி வெளியிடவேண்டும். காலம் வாய்க்கும்போது தமிழ் மக்கள் கூட்டங்களில் நம் முன்னோரின் பெருமையைக் கூறியும் தமிழ் மக்களைத் தன் மதிப்புடையவர்களாகச் செய்தல் வேண்டும். நமது முன்னோர்கள், தமக்கும், நாட்டிற்கும் நலம்புரிந்த வீரர்களுக்கு உருவச்சிலைகள் செய்துவைத்து வழிபாடாற்றியது போல, நாமும் நமது பண்டைத் தமிழ்ப் பெரியார்களுக்கும், நாட்டுத்தொண்டு, மக்கள் ஊழியம் புரிகின்ற தமிழ் வீரர்களுக்கும் நினைவுக் குறிகள் நாட்டி நமது நன்றியறிவைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். நாமும் நமது முன்னோர்களாகிய வீரர்களைப் போலவே, உள்ளதை உள்ளபடி கூறும் வீரர்களாகவும், கொண்ட கொள்கையை விடாது முடிக்கும் வீரர்களாகவும், தன்மதிப்புடைய வீரர்களாகவும் ஆக முற்படுமாறு வேண்டிக் கொண்டு இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

---

தமிழர் வீரம் தலைசிறந்தோங்குக.

---

உ

# பண்டைத் தமிழர் அரசியல் நிலை.

திருவாளர் K, சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், B.A.,

கும்பகோணம்.

---

திருநலங்கனிந்து தமிழ்மணங்கமழும் நம் தமிழகத்தே இறைமை யென்னும் முறைமையினை வழாது ஆவினிற்காகத் தம் திருமகனாரைக் கொன்றும், புறவினுக்காகத் துலைப்புகுந்த மன்னரே போன்று மன்னுயிரைத் தன்னுயிரெனக்காத்துக் கடற்படைக்கும் தரைப்படைக்கும் அதிபராய் அடையாரின் வலி தொலைத்தும் நலிந்தோர்க்கு அருள் சுரந்தும், மறை வளரவும், ஒழுக்கம் பெருகவும், தவம் மிகவும், கடவுளன்பு சிறக்கவும், அலர் மகளும் கலைமகளும் ஒருங்கே கூடி விளையாடவும், தமிழகத்தினை ஆறலைகள்வராலும், பகைவர்களாலும், விலங்குகளினாலும் தீங்குறுவண்ணம் உயர் மாயாப்புகழ் நிறைந்தும், சிறந்த பண்பும், அன்பும் அறிவும் செறிவும் நிரம்பியும்,

"ஞாயிற்றன்ன வெந்திறலாண்மையுந்-திங்களன்ன தண் பெருஞ்சாயலும்-வானத்தன்ன வண்மையுமூன்றும்" உடையாராகி வியாத் திருவின் விறல்கெழு தானையுடைய மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள், 'பசியும் பிணியும் பகையு நீங்கி-வசியும் வளனும் சுரக்க', 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும் – இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினுங்— காவலர்ப்பழிக்கு மிக்கண்ணகன்ஞால' மெனவோர்ந்து

'ஊற்றம் பிறரறியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற்றெல்லை யான்வினைக்குதவி
யிரவினெல்லை வருவது நாடி' யும்
'பொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந்தரு நாபாரமோம்பி' [புறம் 35.]

குடிகளுக்குப் பல்லுதவி புரிந்து வந்தனர்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தேயுள்ள சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பிரிவுகளை ஆண்டனரென்றாலும், இம்மூவகைப் பெரும் பிரிவுகளினுள்ளே நெடுமுடி வேந்தர்களது தலைமை பூண்டு அறம் வழுவாத சிற்றரசர்கள் அரசெய்திய பல் உள்நாடுகளு மிருந்தன. இக்குறுநில மன்னர்கள் வீரமும் தனக்கென வாழாப் பெரும் அருளும் பகைவர்களால் அழிக்கவொண்ணாத படைவன்மையும் வாய்ந்தமையான் நெடுமுடி மன்னர்கள் இவர்களைப் போர்த்துணையாகக் கொள்வர். முள்ளூர் மலைக்குத் தலைவனாகிய காரி, பொதிய மலைக்குத் தலைவனாகிய ஆய், குதிரை மலைக்குத் தலைவனாகிய பிட்டன், எறுமானாட்டு மாவிலங்கைத் தலைவனாகிய நல்லியக் கோடன், கோடைமலைக்குத் தலைவனாகிய கடியநெடு வேட்டுவன், கொல்லிமலைக்குத் தலைவனாகிய ஓரி, பறம்புநாட்டிற்குத் தலைவனாகிய பாரி, முதிரமலைக்குத் தலைவனாகிய குமணன், பல் குன்றக்கோட்டத் தலைவனாகிய பெண் கொலைபுரிந்த நன்னன், வேங்கட மலைக்குத் தலைவனாகிய ஆதனுங்கன், நாஞ்சில் மலைக்குத் தலைவனாகிய நாஞ்சில் வள்ளுவன், ஆகிய இவர்கள்தாம் சங்கத்துப் புலமைபெற்ற சான்றோர் பாடல்களால் புலப்படும் குறுநில மன்னர்கள். இவர்கள் நெடுமுடி வேந்தரின் கீழ், அவரது ஆணையினை மீறி நடவாது நெடுமுடி மன்னரே போன்று

'வல்லார்வல்ல கலைஞருக்கும்
மறைநூலவர்க்கும் கடவுளர்க்கும்
இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும்
இரந்தோர்தமக்கும் துறந்தவர்க்கும்

சொல்லாதவர்க்கும் சொல்பவர்க்கும்
சூழும்சமயா திபர்களுக்கும்
அல்லாதவர்க்கும்...........'

வேண்டியன வரையார்து தந்து அவர்கள் பேரின்பமுறத் தம் குறு நாட்டினை இனிதாண்டனர்.

நெடுமுடியுடை முந்நாட்டுத் தமிழ் மன்னர்கள்,

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு' முடையார்: மேலும்

'வென்றியும் விறலும் விழுத்தகு விஞ்சையும்
ஒன்றிய நண்பு மூக்கமு முயற்சியும்
ஒழுக்க நனித்த உயர்வும் இழுக்கா
அமைச்சி னமைதியு மன்பும் அறனும்
சிறப்புழிச் சிறத்தலும் சிறந்த வாற்றலும்
வெங்கோல் வெறுப்பும் செங்கோற் செல்வமும்
செருக்கிச் செல்லும்' செலவினர்:

மற்றும் அவர்களது 'அறிவுமீரமும் பெருங்கண்ணோட்டம்' முதலிய பிறவும்,

'இருமுந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றாங்
கவையளந் தறியினும்'

அளத்தற்கரியன. இன்சொல் அஞ்சாமை, ஈகையறிவூக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை பிறவும் பெற்ற இம் மன்னர்கள் ஓதல், ஈதல், காத்தல், வேட்டல், தண்டஞ்செய்தல் முதலிய ஐவகைத் தொழில்களை நடாத்தும் உரிமையினை உடைய ராயினர்.

'வென்றியெல்லாம் வென்றகத்தடக்கிய' தமிழ் மன்னர்கள், 'வினைசெய்புங்கால் அதற்கு வேண்டுங் கருவிகளும், அதற் கேற்ற காலமும், அது செய்யு மாறும் அவ்வாற்றிற் செய்யப் படும் அவ்வரிய வினைதானும் வாய்ப்ப எண்ணவல்ல' தொழிலை யுடைய அமைச்சும்; குன்றாத விளையுளைச்செய்வோரும், அற வோரும், கேடில்லாச் செல்வமுடையோரும், ஒருங்கு வாழ் கின்ற நாடும், 'எஞ்ஞான்றும் வற்றாத நீரரண், பரந்த நிலவரண், உயர்ந்த மலையரண், அடர்ந்த காட்டரண்' ஆகிய நால் வகை அரண்களும், 'நாட்டானும் ஆணையானும் ஆக்கவும் காக்கவும்' பட்ட கழிபெரும் பொருளும், 'ஊறஞ்சா வெல்படையாய யானை முன்னும் நாற்படையும்' 'இயற்கை, செயற்கை யிருவகை யானாய நட்பும்' ஆகிய அரசியலுக் கேற்ற ஆறங்கங்களையும் ஓரங்கமாகக் கொண்டு மண்ணாட்சி புரிவாராயினர்.

'படைகுடி கூழமைச்சு நட்பரணா று
முடையா னரசரு ளேறு' என்பது திருக்குறள்.

'படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய'

என்பது தொல்காப்பியம். [மரபியல் 71.]

பண்டைத் தமிழரசர் செங்கோன்மையின் பரிசினைப் பாண்டி யன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினப் பாவால் நன்கு காணலாகும்.

'........................ பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக' [புறம்]

மணிமேகலா தெய்வம் கொடுங்கோன் மன்னன் அரசு செலுத்தும் நாடு எத்தகையதாய்ப் பாழ்படு மென்பதை உதய குமாரனுக்குக் கூறுவதையும் ஈண்டறிக.

'மன்னவன் மகனே
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்'. [மணிமேகலை.]

'அனல்வுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழல்'
[கலித்தொகை.]

குடிமக்கள் தங்களைக் காத்தோம்புதல் நிமித்தம் வேற்றரசன் நாடடைந்து அவனது குடிகளாக விருப்பர்: மற்றும் தம் தம் கொடுங் கோன் மன்னனை நீக்க வேற்றரசரது துணையினை விரும்பி, அவனுககுப் படையும் சேர்ப்பர். ஆகவே செங்கோன் மன்னர், தம் குடிமக்களைக் கான்படு கன்னியின் மான் படுமாறு கலங்கத் துன்புறுத்தி வளங்கெடக் கொடுங்கோன் மன்னன் ஆளும் நாட்டைக் கவரக் கருதுவாரெனில், தமிழ்ச் செங்கோன் மன்னர்கள் போர் புரிவதெல்லாம் கொடுங்கோலரசருடனன்றிப் பிறரோடன்று. அறப்போரன்றி மறப்போரன்று. ஏனைய நாடு இன்புற வாழவேண்டுமென வன்றி அதனை அழிக்கவேண்டும் எனக் கருதியன்று. 'மாண்ட—அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது புறம். மற்றும்

'எல்லையு மிரவு மெண்ணுய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
வில்லவாகுப..............................
.........................பிறரகன்றலை நாடே [புறம்—7].

'தாயி றாவாக் குழவி போல
வோவாது கூஉநின் னுட ற்றியோர் நாடே'. [புறம்—4].

'.........................பைதன் மாக்களொடு
பெருங் கலக் குற்றன்றாற் றோனே காற்ரூ
டெரி நிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற்! சினைஇயோர் நாடே' [புறம்-41.]

என்பனவற்றை அறிக.

'மழைவளங் காப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவில்...........'

என்பதூஉம், [சிலப்பதிகாரம்.]

கால்பார் கோத்து ஞாலத்தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணி
னூறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே. [புறம்.]

என்பதூஉம்,

'ஆர்வலஞ் சூழ்ந்த வாழி யலைமணித் தேரை வல்லா
னோர் நிலத்தூரு மாயி னீடுபல் காலஞ் செல்லு
மூர்நில மறிதறேற்றா தூருமேன் முறிந்து வீழுக்
.....................வேந்தர் தன்மையு மன்ன தாமே;

ஆகிய அரசாது பழக்கம் டிற்றிய மொழிகளை நன்குணர்க.

இது பற்றி யன்றே,

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே'.

என்றார் மோசி கீரனாரும்.

'நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழ லிலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே னம்பி யென்றான்.'

என்று சிவக சிந்தாமணி யுடையாரும் கூறியிருத்தலை நோக்குக.

நெடுமுடி மூவேந்தர்கள் தப்பரந்த நாடுகள் முழுதும் செங்கோன்மையும் நீதி தவறா நெறிமுறைமையும் பரவச் செய்யத் தம் நாடுகளைக் கூற்றங்களாகப் பாகுபடுத்தியும், (மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம்) பின்னர் அக் கூற்றங்களைச் சிற்றூர்களாகவும் (ஈர்ந்தூர், ஆலத்தூர், எக்கூர், தகடூர், பாமுளூர், மூஞ்சியூர், நீடூர், குன்றூர், குறும்பூர், உறத்தூர், அழுந்தூர், இருப்பையூர்) பிரித்தனர். சேர மன்னர்கள் சேர நாட்டினிற்குத் தலைநகரமாகிய வஞ்சியினும், சோழ மன்னர்கள் சோழ நாட்டினிற்குத் தலைநகரமாகிய உறந்தையிலும், ['மறங்கெழு சோழ ருறந்தை யவையத், தறங்கெட வறியா தாங்கு'—நற்றிணை 400] காவிரிப்பூம் பட்டினத்திலும் (சோழன் கரிகாலன் காலம்) காஞ்சிபுரத்திலும், பாண்டிய மன்னர்கள் பாண்டிய நாட்டிற்குத் தலை நகரமாகிய மதுரையிலும் ஐம்பெருங் குழுவினராலாய மந்திரச் சங்கவுதவியினால் அறம் தவறாது அரசு நடத்தினார்கள். ஒவ்வோர் கூற்றங்களில் முடியுடை மன்னர்கள் தம் ஆணையின்படி அரசாட்சி முறைமை வளம் பெருக நடக்குமாறு அறங் கிடந்த நெஞ்சும் மறங் கிடந்த வலியும், தள்ளாவுள்ளமும், உவகையுடன் கலந்த ஊக்கமு முள்ள குறுநில மன்னர்களை ஏற்படுத்தினர். இக் குறுநில மன்னர்கள் சிற்றூர்களிலே நீதிநெறி பிறழாது நடைபெறு

வண்ணம், அரசோச்சும் மேனிலைப் மேற்பார்வை யாளராகவும் விளங்கினர். சிற்றூர்களில் ஐவர்குழுவெனக் கூறப்படும் வழக்கறுக்கும் பெரிய அவைகள் மலிந்திருந்தன. இவ்வறங்கூற வையங்கள் சிற்றூர்களிலேற்படும் வழக்கறிந்து, செல்வரெனவும் வறிய ரெனவும் வேற்றுமை சிறிதும் கருதாது செங்கோல் வளைதலுறாது நீதியினை ஓர்ந்துச் செவ்வனே நடத்தி வந்தன.

'இரத்தி நீடிய வகன்றலை மன்றம்' [புறம் 34.]
'பேரிசை மூதூர் மன்றங் கண்டே.' [புறம் 220.]
'பொதுவிற் றூங்கும் விசையுறு தண்ணுமை' [புறம் 89.]
'அரசு கோடினு மறங்கூ றவையத்து' [சிலம்பு]
'மன்றமும் பொதியிலும்' [திருமுருகாற்றுப்படை.]

இவ்வறங் கூறும் மன்றங்கள் அக்காலத்தே எத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்து குடியரசினைப் பாதுகாத்து வருவந்த தன்மையினைப் பெற்றதென்பதைக் கீழ்வரும் வரிகள் செவ்வனே காட்டும்.

'சான்றோ ரிருந்த வவையத் துற்றோ
னாசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி' [புறம்—266.]

இவ்வாறாகக் கூற்றங்களினும், சிற்றூர்களினும் அரசியல் வேலைக ளெல்லாம் ஒருமை பெற்று விளங்கவே எங்கும் அமைதியும் அறனும் சிறப்புற்றன. செங்கோற் செல்வமும் தண்ணளி செய்யும் வெண் கொற்றக் குடையும் பெருமை பெற்றன. தமிழ் மன்னர் களும் குடிமக்கள் கருத்தினிற்கிசைந்து அவர்களது செல்வாக்கின் நிலைமையையே உயர்வு செய்யப் பேரன்பு பூண்டவர்களாய் நடுநிலை பிழையாது தமிழர் நீர்மையை வழாதாய் வயங்குமாறு பாதுகாத்துப் பிறநாட்டு மன்னர்களைவிடத் தமிழ் மன்னர்களே பெருங் கண் ணோட்டமுள்ள மன்னர்களென என்றும் புகழப்படுதற்குரிய பெருந்தன்மை வாய்ந்தவரா யிருந்தனர்.

'யானோ வரசன்? யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுக வென்னுயிர்'

Roll-127 .271-479
1285-2385



என்றுரைத்து அரியணையிலே வீழ்ந்து புரண்டலறி உயிர்நீத்த ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய நீதி மன்னனைப்போன்ற பிறிதொரு மன்னனைப் பிறநாட்டில் நாம் காண்கிலம்.

தமிழ் நெடுமுடி மன்னர்கள் நீதிநூல் முறைமைகளை, நாடு வளம்பெற, மாற்றவும் புதிப்பிக்கவும் முழுப் பொறுப்பு வாய்க்கப் பெற்றவர்களாயிருந்தாலும், அந்நீதிமன்னர்கள் நாட்டின் பொது நன்மைக்குரிய அரசியற் செயல்களைப் பீடுறநடத்திவர ஐம்பெருங் குழுவென்ற அவையாருடன் கலந்து அவர்களது எண்ணத்தினைப் பெறுவார்கள். இவ்வைம்பெருங் குழுவினர்,

'படைவேண்டுழி வாளுதவியும்
வினைவேண்டுழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன்றேஎத்
தசைநுகம்படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை'ச் செல்வர்கள்.

'குடிப்பிறப் புக்கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங்—கெடுக்கு
மழுக்கா றவாவின்மை யிவ்விரண்டோ டெட்டு
மிழுக்கா வவைபின்க ணெட்டு'

என்றநிறால் இக்குழுவினுள்ளார் நற்குணம் பல ஒருங்கே மல்கியிருந்த ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் எனக்கோடல் பொருத்தமுடைத்தாம்.

அந்தணர், அமைச்சர், சேனாதிபதியர், தூதர், ஒற்றர் முதலோராற் கூடப்பெற்றுள ஐம்பெருங்குழுவினரது சால்புடைமையையும், சீரிய குணங்களையும், சான்றாந் தன்மையையும் ஈண்டு உய்த்துணர்வோம். மந்திரச் சங்கத்திலே உறுப்பினராக வாய்ந்த அந்தணர்கள் மறைநுவன்று, முத்தீ எற்றி வேள்விகளியற்றி மன்னர்க்கு ஆசிகூறிப் பீடு செய்யும் 'ஆன்ற கேள்வியடங்கிய கொள்கை'யினை யுடைய அறமோம்பும் செல்வர்.

'சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் [மதுரைக்காஞ்சி.]

மதிநுட்பம் அதிகம் வாய்ந்து தம் கருத்தை நிரந்தினிது கூறி அரசர்க்கறிவுறுத்தலும், ஓர் தொழிலியற்றுங்கால் அஃது இடையூறு உறுதபடி தக்கவமயமும் நாடி அதனை முடிக்கும் மனத்திண்மையும், போர் நேர்ந்துழித் தம் பகைமன்னரைச் சார்ந்துள்ள துணையினோரை விசும்பன்ன சூழ்ச்சியினாற் பிரித்து விடுதலும், தம்மைவிட்டுப் பிரிந்தாரைப் பின்னும் தம்முடன் பொருந்தும்படிக் கேற்ற உபாயமும், என்றும் தனக்கு இடுக்கண் நேரினும், சான்றோர் பழிக்கும் வினைகளை நீக்கி அரசர்க்குப் புகழையும் அறத்தையும் பெருகச் செய்யும் தூய எண்ணமுமுடையாரும் மனந்தெளிந்து செய்வதாக எண்ணித் துணிந்த செயல்களைத் தாமதமின்றித் தள்ளா முயற்சியின் பயனறிந்து நிறைவேற்றும் தூங்காமையும் முதலிய அரும் பெருங் குணங்களும், மனத்தினிழுக்கில்லாது பரந்த அறிவும் விழுக்குடிப் பிறந்த ஒழுக்கமும் வாய்ந்தவர் அமைச்சராவர்.

'அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத் தாகிச
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள்' [மதுரைக் காஞ்சி.]

இவர்கள் மனவலிமையும் கல்வியும் உபாயமும் மருளறும் உணர்வும்,

'பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறி திரியினும்'

தம் நிலையினிற்றிரியாப் பேரமைதியும் பிறவும் பெற்றூர்களானதால் அரசன் 'காவிதிப்'ப் பட்டம் இவர்களுக்குச் சூட்டலுமுண்டு.

'கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவு
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவருமென' [புறம் 55.]

நான்கு படைகளுக்கும் தனித்தனியே சேனாதிபதித் தலைவர்களுண்டு. 'வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத், தொன்னுரோட்டிய செருப்புகல்' சேனாதிபதியர், மற்போர், விற்போரில் வல்லாராய் அரசனிடம் 'ஏனாதி' யென்ற பட்டம் பெறுவார்.

இருமன்னர்கள் சந்து செய்யுங்காலத்தே, பிறநாட்டு மன்னனிடத்தேகி அவருக்கு உற்ற பண்புரைப்போர் தூதர்களாவார்.

'அன்பும் குடிமைப் பிறப்பும் அரசவாம்
பண்பும் அறிவும் பரவுநூ லுணர்வும்
தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும்
வாய்மையுஞ் சொல்லில் வழுவா வன்மையும்
துணிவும் காலமும் களமுந் துணியுங்
குணமும் மந்திரத் தலைவர் துணைமையும்
உடையனே வினையாள் தூதன்'.

ஒற்றர் அரசர்க்குக் கருவிழிபோல்வர். இவர்கள் வேண்டும் வேற்றுருவமெடுத்து வேறு தேயமடைந்து ஆங்குள்ள மறைபொருள்களைத் தெரிந்துணர்வர். தமிழ் மன்னர்கள் ஓரொற்றரது மாற்றத்தை உறுதியுடைத்தென நம்பாது தனித்தனியே மூவரை

ஒருவரை யொருவ ரறியாதபடி அனுப்பிப் பிறநாட்டகத்தே நடக்கும் மறைகளை உடனுக்குடனே அறிந்து கொள்வார்க ளென்பதைப் பின்வரும் அடிகள் வலியுறுத்துதல் காண்க.

'ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்' [திருக்குறள்.]

'ஒற்றர் தங்களை ஒற்றறி வுய்தலும்' [சீவகசிந்தாமணி.]

'ஒற்றரைத் தூண்டி யன்னோ ருறுவலி யுணர்வ ரேனு
மற்று மொரொற்றி னல்லா லன்னது............
சுற்றுறு மனிக மன்றியொருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியு முளதோ வென்னவேயொரீஇத் தேவர்பின்னும்'
[கந்தபுராணம்.]

இவ்வைம்பெருங் குழுவல்லாது தமிழ் மன்னர்கள், தம் ஆணையை நிறைவேற்றும் கருத்தமைந்த 'ஆணைக்காவற் செங் கோலோர்' என்ற கரணத்தியலவர்; அரசவையில் நடக்கும் சிற்சில சிறந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் மற்றும் அரசரது படையெழுச்சிக்காக நல்லோரையும், தண்டயாத்திரை செய்யும் காலத்தையும் நன்குணர்ந்து எடுத்துரைக்கும் கருமவிதிகள்; அரசரது வருவாயினையும், செலவாகும் துறையினையும் உணர்த்து தல் வல்ல கனகச்சுற்றம்; 'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாளராய' கடைகாப்பாளர்; நடுநிலை திறம்பாது அறம் விளைக்கும் நன்மையைக் கடைப்பிடித்து, அரசன் பிறிதொரு நாட் டில் படையெழுச்சிக்குப் போந்தபொழுது கலகமுண்டாகாது தம் நாட்டைக் காக்கும் திறமைவாய்ந்த நகரமாந்தர்; அரசருடன் அறப்போர் புரியும் நிலந்திரைக்குங் கடற்றானைத் தலைவராகிய கனிபடைத்தலைவர்; வரிவயம் பொருத வயக்களிறுடை யானை வீரர்; 'கருத்தும் விரைவு கற்குங்குரத்தாற்' பொடியெழப் புடைக்கும் புரவிகளுடை 'இவுளிமறவர்' ஆகிய இவர்கள் கூடிய 'எண்பேராயம்' என்ற மற்றோர் அவையும் ஏற்படுத்தினர். தமிழ் மன்னர்கள் அரசியல் வேலைகள் ஆகிய யாவும் இவ்விரு அவை அங்கத்தினருக்கிசைந்தபடியே நடாத்தி அச்சபைகளின்

தலைவர்கள் கூறியாங்கே தாம் அரசியலியற்ற வேண்டுமென்ற கட்டளைக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். இதனால் மக்கட்டொகுதி வேண்டுவனவற்றை நேரேகண்டுணர்ந்து, அரசியலார்க்கு உணர்தற்கேற்ற அறிவும் ஆற்றலுமடைந்தாரை அத்தொகுதியினின்று தேர்ந்து குழுவும் ஆயமுமாக்கப்போந்த குடியரசுரிமையினைக் கருவியாகக்கொண்டு பண்டுதொட்டே தமிழ் மன்னர் அரசியல்புரிந்து வந்தனரென்பது தெள்ளிதிற் பெற்றாம்.

சேரன் செங்குட்டுவ மன்னன் வடக்கே பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்வான் கல் கொண்டுவரச் சென்ற பொழுதத்து இச் சபையினது பேருதவியை நாடி,* அச்சபையினது அனுமதியின் பேரில் வாழ்த்துப்† பெற்று வடக்கு நோக்கிச் சென்றானென்பதையுமறிக. மற்றும் ஆண்டு தோறும் நடக்கும் இந்திரவிழாவினைக் குறித்து ஐம்பெருங்குழுவினராகிய 'தடுக்கு மந்திரி புரோகிதன்றெழிற்றுக ளொற்றன், எடுத்து வந்திருந்த சேனைக்கிறைவன்' முதலோராதாவின் சிழு அலைபிறங்கும் பொன்னியிலிருந்து நறும் புனலை உயர்ந்த பொன்னாலாகிய குடந்தமில் எற்று வரவிதிக்கப்பட்டிருந்தது.

'அரசொடு பட்டவைம் பெருங்குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகை கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்து முன்வைத்தாங்கு'

என்றதனாலும் முன்னர்க் கூறியுள்ள அவ்வாலோசனைச் சங்கத்தினியல்பாலும் நாமறிய வேண்டுவது யாதெனின் இவ் வைம்பெருங்குழு மன்னுயிர் மாட்டுப் பேரன்பு பூண்டு அறம் சிறிதும்

---

* 'பத்தினிக் கடவுளைப் பாவல் வேண்டுமென
மாலைவெண் குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்கி' [சிலப்பதிகாரம்].

† 'ஐம்பெருங் குழுவு மெண் பேராயமும்
வெம்பரி யானை வேந்தற் கோங்கிய
கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரு
மண்டினி ஞால மாள்வோன் வாழ்கென' [சிலப்பதிகாரம்].

வழுவாத மன்ற மென்றும், அச்சபையினராகிய பேரறிவு சான்ற பெருந்தகைமையார் அரசியல் நடாத்தும் திறமை பெற்றிருந்து அரசனுக்குப் பொன்னேபோற் போற்றப்படும் அரசியலுக்குரிய நல்லறிவு புகட்டினரென்பதும், நாடுவளம் பெறக் கல்வி நலம், செல்வ நலம் ஆகிய இவ்விரு நலங்களையுங் கருத்தனமாகக் கருதிப் பெரிதும் பாராட்டினரென்பதும் பிறவுமாகும்.

சரித காலத்தில் மேம்பட்டிருந்த தமிழ் மன்னர்கள் காலத்தில், மன்னர் குடும்ப வாழ்க்கை நலனை நலிவுறாதபடி நல்வினையிலே செலுத்துதலும், மற்றும் அதனை நல்லோராகிய ஆசான் (Priest), பெருங்கணி (The Senior Accountant) அறக்கள அந்தணர் (The Sane Trdges) காவிதி (Tax-Colector) மந்திரக் கணக்கர் (The Secretary of State) ஆகிய இவர்கள் ஓர் குழுக் கூடியிருந்தனர். இந் நன்மொழிச் செல்வர்கள் பின்னர்க் கரும வினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர் எனப் பிறிதொரு நாமம் பெற்றார்.

> ‘ஆசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
> காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு’ [சிலம்பு.]
> ‘ஆசான் பெருங்கணி யருந்தி றலமைச்சர்
> தானைத் தலைவர் தம் மொடு குழீஇ’ [சிலம்பு.]

இச் சிறுகுழு பெருங்குழுவி னங்கத்தினருடன் ஒருங்கிருந்து அரசியல் முறைமையைச் சீர்படுத்தி நாடுவளம் பெருகுதற்குரிய இன்றியமையாத வாயகருவிகளைக் கையாண்டு வரும் உரிமையினைப் பெரிது முடைத்து. மற்றம் மன்னர் குலமுறையில் ஒருற்பவம் நேரிடில் இச் சிறுகுழு நிறை மொழியாளர் மாண்ட மன்னரது வழித் தோன்றலையாவது அல்லது மன்னர் குடும்பத்தேயுள்ள பாராளும் தகைமையாரையாவது தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுத்தலில் காலக்கழிவு எற்படின் ஐம்பெருங்குழு பிறிதொரு மன்னர் அரியணையில் எறிவீற்றிருக்கும் வரை, அரசியல் வேலைகளைத் தாமே பெறும்.

நடுநிலை பிழையாது நீதி நடாத்துதலினிமித்தம், அறங்கூறும் மன்றங்கள் பல தமிழகத்திற் சிறந்து விளங்கி யிருந்தனவென

முன்னர் கூறினேம். இம்மன்றங்களில் நீதி நடாத்தும் பொழுது தத்து மும்முரசுகளில் ஒன்றாகிய நீதிமுரசம் ஆர்க்கும். மும் முரசுகள் பகைவரது காவற் கருமரத்தால் இருட்சி பொருந்திய தாய்ச் செய்யப்பட்டுள்ளன : மற்றும் 'புனைமருப் பழுக்கக் குத்திப் புலியொடு பொருதுவென்ற, கனைகுரலுருமுச் சீற்றங் கதழ்விடை யுரிவை' யால் போர்த்தப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் மற்றோர் விளைநலம் பொருட்குவையாவையும் கவர்ந்து கொண்ட தாயத் தார், ஏனைய பிறர் வல் வழக்குகளைப் போன்ற எளிதே உண்மை நியாயத்தை ஆராயப்படும் இருதிறத்தாருடைய சிறு வழக்கையும் உளையா அன்புடன் நன்கு கேட்டும், ஆராய்ந்தும் வழக்கறுத்து நீதி முறைமையினைக் கையாடி வந்தன. சொல் வன்மையினால் மாறுகொள் வழக்குகள் பல மெய்யாதலும், மெய் வழக்குகள் சொல்வன்மையும் எஞ்சாதியம்பும் தன்மையு மில்லாது பொய் படுதலாகிய உண்மை நியாயம் வெளிப்படாத வழக்குகளைத் தமிழ் மன்னர்கள் அமைச்சரோடாராய்ந்து வழக்குகளின் தகைமைக் கேற்றவாறு முறைசெய்து நியாயம் பல முயற்சியின் பயனால் கண்டு பிடித்துப் பொய்வழக்கிரிய, தமிழ்த்தனி நீதியினை நெறி பிறழா வண்ணம் செலுத்தினர்.

'இளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய' கரிகாற் சோழ மன்னர்

நீதியினைச் செம்மையாய் நடாத்தின வரலாற்றினைப் பழமொழி வெண்பாவாலறிக.

'உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்'.

இது பற்றியே

'முதியோ-ரவை புகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்'

என்று பொருநாற்றுப் படையிற் கூறியிருத்தலு முணர்க.

தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவினைக்கொல்வார், கள்வர், ஆறலைப்போர், சூறை கொள்வார், பிறனில் விழைவார் முதலோர் கொலைத் தண்டனைக் குரியராவர்.

'ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' [புறம்].

தக்கதண்டனைகளும் விதிக்கப்பட்டன. பிறருக்கின்னல் விளையாது ஏமாற்றி அவரது பொற்குவைகளைக் கவர்ந்து கொள்ளும் பதகர்களியற்றும் குற்றங்களுக்கு அபராதங்களும் விதிக்கப்பட்டன. தமிழ் மன்னர்கள் குற்றங்களுக்கேற்ற தண்டனைகள் விதித்த தகைமையினையும் அவரது அன்புடன் கலந்த அருளினையும் ஈண்டுவரும் புறப்பாட்டாலறிக.

'நீமெய் கண்ட தீமை காணி
னொப்ப நாடி யத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதி........................' [புறம் 10]

'...............................ஆங்க
முனிவின் முற்றத் தினிதுமுர சியம்பக்
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலு
மொடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீய தன்மையு
மில்லை யென்போர்க் கினனா கிலியர்' [புறம் 29]

'மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசு கெழுதாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்றலு டையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சு புலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே' [புறம் 73].

மாதண்டமில் பதிகர்களைத் துன்புறுத்திப் பதித்துண்ணும், கருவுடையுடுத்து, மென்னூலேணியும், சிறுவாளும் கொண்டு கனை இருட் கங்குற் போதில் நிலவும் கருமேனி யுடைய ஆறலை கள்வர்களை கடிதிற் பிடித்துக் கொணரும் ஆற்றலுடை 'யாமங் கொள்பவர்' [புறம் 37] களவுத் தொழில் தமிழகத்தே பெருகா வண்ணம் கள்வர்களை அரசவைக்குக் கொணர்ந்து பெருந் தண்டனைகளுக்குட் படுத்துவர். இத்தகை ஊர் காப்பாளரது சிறந்த காவற்றொழிலின் பரிசினை ஈண்டு அறிதற்பாலது.

'இரும் பிடிமே எந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா ருடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கோள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண்டேர்ச்சி
யூர் காப்பாளர்.

என வருவது காண்க.

(தொடரும்)

உ

# புகழ்.

திருவாளர் V. சண்முகம் செட்டியார் அவர்கள், தஞ்சை.

இம்மலர்தலையுலகத்து எம்மக்களும் நடத்தற்குரிய சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவ்வறந்தான் இல்லறம் துறவறம் என இருவகை நிலைகளாகப் பிரித்துக் கூறப்படும். அவற்றுள் முதலாவதாகிய இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்கு, மெய்யறிவு பெற்ற நம் தமிழ் மறையினைச் செய்தருளிய திருவள்ளுவர் முதலானோரால் கூறப்பட்ட நெறிக்கண்நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செய்யப்படுவது.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்று பெரியார்கள் கூறியிருத்தலின், வாழ்க்கைத் துணைக்குத் தக்கதோர் அணிகலம் எனப்பெறும் நன்மக்களைப் பெறுதலும் இவ்வில்லறத்திற்குச் சிறந்த ஓர் இலக்கணமேயாம். இவ்வணம் இல்லறத்தினை நடாத்துவோர்க்கு இலக்கணமாக நம் பெரியார்கள் பலர் கூறிப்போந்த குணங்களைப் பெற்று இதனை நடத்துபவன் தனக்கு இம்மைப் பயனாகி இவ்வுலகில் நிகழ்ந்து இறவாது நிற்பதாகிய நற்பெயரே புகழ் எனப்படுவது.

இப்புகழினைப் பெற வேட்கையில்லாதார் எவ்வுலகத்தும் ஒருவரும் இலரெனவே துணிந்து கூறலாகும். அறிவிற் சிறந்த சில பெரியோர் பிறரால் புகழப் படுதலை விரும்பாது, தாங்கள் நல்ல குணங்களை யுடைவராகி நல்ல செயல்களைச் செய்தல் தங்கள்

கடன் எனக்கூறி இயற்றிடினும், அவர்களுக்கு அத்தகைச் செய்கைகளுக்குரிய பயனாகிய புகழ் வந்திடும் என்பதும் பெரியார் கொண்ட கொள்கையே.

'ஒன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில்'

என்பதன் பொருளை யுணர்ந்த மக்களும் இப்பொன்றாப் புகழினை வெறுத்திடுவரோ? இப்புகழினை யுடையார் புகழ்வடிவால் இவ்வுலகத்தும், தேவவடிவால் அவ்வுலகத்தும் ஒருசேர நிற்பர் என்பதும், தெய்வ உலகத்துள்ளார் இவர்கள்மீது அன்பு நிறைந்து இவர்களைப் போற்றுவரேயன்றி ஞானிகளைப் பேணார் என்பதும் தேவர்தம் கூற்றன்றோ!

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்று நம் தமிழ்மறை கூறுதலின், யாம் மனிதராய்த் தோன்றியும், இப்புகழினைப் பெறாமாயின் விலங்கினத்தில் வைத்தெண்ணப்படுவோம். அது விருப்பத்தக்கதோ? புகழினையே என்றும் விரும்புவோம். ஆதலின் அப்புகழினை யாம் எவ்வெவ் வகையாற் பெறலாகும் என்பதும் அவைகளில் எந்நெறியாற் பெறப்படுவது உண்மையாகவே புகழாகும் என்பதும் யாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஆதலின் சிறிது ஆராய்ந்திடுவம்.

மக்கள் புகழ்பெறும் வழிகளாவன.—

1. அறிவிற் சிறந்த பெரும் மக்களால் உடன்பாடாக ஏற்றுக் கொண்ட குணங்களைக் கைக்கொண்டு, அவர்கள் மறுத்துத் தள்ளிய தீயகுணங்களைக் கைவிடுதல்.

(2) உலகத்துள்ளாரிடத்து ஒவ்வொருவரிடத்தும் நடந்து கொள்ளவேண்டிய முறையிதுவெனப் பெரியார் கூறியவழியில் நடந்து கொள்ளல்.

(3) தாங்கள் கண்ட உண்மையினை மற்றுளோரிடமும் கூறி அவர்களையும் நல்வழிக்குக் கொண்டு வருதல் முதலியனவாம்.

இவைகளிலே சான்றோரால் உடன்பாடாகக் கொண்ட குணங்கள் அன்புடைமை, இனியவை கூறல், விருந்தோம்பல், அடக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, வாய்மை முதலியனவாம்.

அன்பு:—இல்லறத்தினை இனிது நடாத்த வேட்கை கொண்டார்க்கு அன்பு ஒன்று அவர்தம் அகத்து இல்லையேல் அவ்வன்பின்பயனாய்த் தோன்றும் அருளும், இல்லறத்தை இனிது நடாத்தலும் இல்லாதாகி விடும். இவ்வன்பும் உயிரானது உடலோடு கூடியிருக்குங் காலத்தே தான் செய்யப்பெறும். எனவே அவ்வன்பு ஒன்றினையுடைமையா யிருக்கவே இவ்வுயிர் இம்மானிட உடலினைப் பெற்றிருக்கின்றது எனக்கூறிவிடலாம். இதனையேதான் நம் திருவள்ளுவரும்

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

எனக் கூறிச்சென்றார்.

எலும்பில்லாத சிறிய தசையுடல்களை மட்டும் உடைய சிறு புழுக்கள் மிகக்குளிர்ந்த நிழலிலிருந்து நீங்கி வெயிலிற் கிடந்திடின், அவைகள் பகலவனின் கொடுமை தாங்காது கரிந்து போய்விடுமன்றோ? அதேபோல் அன்பினைப் பெற்றிடா உயிர்களும் அறத்தின்முன் தம்மியல்பினாலேயே சென்று கெடும் எனக் கூறவும் வேண்டுமோ?

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

என்று நம் திருவள்ளுவர் பெருமான் கூறியிருத்தலையும் நோக்கின் உடலோடு வாழும் உயிர்க்கு உறுதியாவது அன்பே என்பது தெற்றெனப் புலனாகும்.

அன்புடைமை எனப் பொதுப்படக் கூறியதனானே தன்மாட்டு அன்புடைமையும், தன்னைச்சார்ந்த மற்றவர்களிடத்து அன்புடைமையும், தன்னைப்படைத்த கடவுளிடத்து அன்புடைமையும் பெறும். தன்மாட்டு அன்புடைமையாவது, தான் பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றது இவ்வுலகத்து அழியாப் புகழ்பெறுதற்கும் விண்ணுலகத்து நற்பயனைப் பெறுதற்கும் ஆகலின் அவை பெறுதற்குத் துணையாயுள்ள தன்னுடலினை அழியாது பாதுகாத்தற்கு விரும்புதலேயாம். இதனாலன்றோ,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை

எனக் கூறியுள்ளார் சான்றோர்.

இரண்டாவதாகத் தன்னைச் சார்ந்துள்ள மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியோரிடத்தும், இல்வாழ்பவனாற் பாதுகாக்கப் படவேண்டியவர்களாகிய துறவறத்தன்மையினையுடைய மூவர்களிடத்தும், இவர்களல்லா மற்ற மக்களிடத்தும் காட்டும் அன்பாகும். இவர்களைப் பாதுகாத்தலும் இல்லறத்திற்கு ஓர் இலக்கணமாய் அமைந்திருத்தலின் இவர்களிடத்துக் காட்டும் அன்பும் முதற்றலையாய் வேண்டற்பாலதே. மூன்றாவதாகத் தான் செய்யும் எவ்வகைச் சிறுசெயல்களுக்கும் துணையாய் உருவமற்று நின்று துணைபுரிபவன் கடவுளாதலின் அவனிடத்தும் அன்பு காட்டக் கடமைப்பட்டுளோம்.

புகழைப்பெற விரும்புவோனுக்கு முதலிலே இவ்வன்புடைமையைக் கூறுதல் எற்றுக்கோவெனின், ஐம்பொறிகளாலும் இயற்றும் செயல்கள் யாவற்றிற்கும் இவ்வன்பே தலைமையாயிருத்தலினாலும், அப்பொறிகளிற் றலைமைதாங்கி நிற்பது அன்பு பிறத்தற்கிடமாகிய மனமே யாதலாலும், அன்பு ஒவ்வொரு உயிர்க்கும் உரிய இயற்கைக் குணமே யாதலினாலும் அதனையே ஒருதலையாக வேண்டற்பாற்றெனக் கூறினோம்.

இனியவை கூறல் :—

மெய்யினை யுணர்ந்தவர்களுடைய மெய்ம்மை யுள்ளனவாயிருக்கின்றனவும் மேற்கூறிப்போந்த அன்புடைமையை வெளிப்படுத்துகின்றனவும் ஆன சொற்களே இனிய சொற்களாம். எனவே, உண்மைப் பொருள்களினுடைய இயற்கைத் தன்மைகளை உணராதோர் ஏதோ சிறிது அன்பின் காரணமாகக் கூறும் இனிமையான சொற்களும் இறுதியிற் பயனை நோக்குங்கால் வன்சொற்களாக முடிந்தாலும் முடியலாம் எனவும், மெய்ம்மை யில்லனவா யுள்ள சொற்களை எவ்வளவு இனிமையாகக் கூறினும் அவைகள் இன் சொற்கள் ஆகா எனவும், தன் மனநிடத்து அகத்துறுப்பாகிய அன்பில்லாது, வெளியிடத்து அன்புடையார்போற் காட்டி, இயற்கையாயில்லாது தன்முயற்சியினாலே இனிமையாகப் பேசிடும் சொற்கள் வன்சொற்களே எனவும் தேர்கின்றோம்.

உண்மையாகவே அன்புடையார் இயல்பாகத் தம்மிடம் தோன்றும் இனிய உண்மைகளை இனிய சொற்களாற் கூறுவரே யன்றி, இயற்கையல்லாத வன்சொற்களாற் கூறிடார். ஒரு சிறுவன் மிக இனிய பழுந்தரும் சோலையிடத்துச் சென்றிடின் அவன் மனமானது அங்குள்ள இனியபழங்களைப் பறித்துத் தின்றிட அவாவைப் பெறுமேயன்றி, இனிமையற்ற காய்களைத் தின்றிட அவாவைக் கொள்ளுமோ? அஃதே போல் பின் இனிமையைக் கொடுக்கவல்ல இனியசொற்கள் தம்மகத்திருக்க, பின் தமக்கே துன்பத்தினை விளைக்கக்கூடிய கடுஞ்சொற்களை யாவர்தாம் கூறுவார்? அவ்விதம் அவர்கள் கடுஞ்சொற்களை வழங்குவாராயின் அச்சிறுவன் இனிய பழங்களை விரும்பாது இனிமையற்ற காய்களை அருந்துதலோடு ஒக்கும் அன்றோ?

‘அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்’

என்ற மொழி பொய்யாது. ஆதலின், தன்னகத்துள்ள அன்பினைத் தன் முகத்தினிடத்தே தோற்றுவித்து அவ்வன்புடன்

கலந்த இனிய சொற்களை வழங்குதல் ஒருவருக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தலினும் சாலச்சிறந்தது என்பர் பெரியோர். அறமானது கொடுத்தலினால் மட்டும் தோன்றிவிடுவ தன்று. முகமலர்ந்து, இனிது நோக்கி, இனிய சொற்களை வழங்குமிடத்தே அறம் எனவும், இன்சொல்லை யுடையார்க்கு யாவரும் நட்பினராய் விடுவாராதலின் எல்லாச் செல்வமும் பெற்றிடுவர் எனவும் பெரியோர் கூறிச் சென்றார்கள். ஆகவே இனிய சொற்களைக் கூறுதலும் அவர்க்கு இன்பமும் புகழும் கொடுத்திடவல்லது என்பது பெற்றாம்.

விருந்தோம்பல் :—தன்னை யாதொருவகையானும் சார்ந்திடாத மக்களை ஓம்புதலாம். தன்னைச் சார்ந்திடாத மக்களை ஓம்புதல் வேண்டும் எனக்கூறவே தன்னைச் சார்ந்தோர்களை ஓம்புதல் வேண்டும் என்பதும் தானே அமையுமன்றோ? ஒருவன் தான் அன்புடையவனா யிருத்தலும், அவ்வன்புடன் கலந்த இனிய சொற்களை யுடையவனா யிருத்தலும் சாலச்சிறந்ததே யெனினும், தன் செய்கைகளிலும் காட்டுதல் வேண்டுமன்றோ? தனியனாய்க் காட்டினிடத்தே செல்லாமல் தன் மனைவி மக்களுடன் இல்லறத்தில் நின்றிருப்பது எற்றுக்கோவெனின், தன்னை நாடிவந்த விருந்தினரை ஓம்புதற்கேயாம். ஏனெனின் ஒருவன் விருந்தோம்புதலைக் கைக்கொள்ளானாயிடின், இல்லிலிருத்தலாலும், பொருள்களைக் காப்பாற்றலாலும் நேர்ந்திடும் துன்பங்களைத் துறந்து காட்டிற்குச் சென்றுவிடுதலே நலமாம்.

‘விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று’

என்ற குறளை நோக்குங்கால் அமுதமே தன்னிடம் இருந்து தான் உண்ணப்போகும் அமயத்து மிக்கப்பசியுடன் ஓர் விருந்தினன் வெளியில் தங்கியிருந்திடின் அவனுடனன்றித் தான் மட்டும் உண்ணலாகாது என்ற ஓர் பொருள் தோன்றிடினும், மற்றும் ஓர் பொருள் கொள்ளலாம் எனவே தோன்றுகின்றது. அஃதாவது, ஒருவன் பல நாட்கள் உணவின்றித் துன்புற்றிருந்து

இறந்து போகும் நிலைமையிலிருக்குங் காலத்தில் தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளற்குப் போதுமான சிறு அளவான உணவு கிடைத்து அதனை உண்ணப்போகுங் காலத்தும் விருந்து புறத்ததாகத் தானுண்ணல் வேண்டற்பாலதன்று என்பதேயாம். ஆகவே இல்லறத்தார்க்குக் கூறிய இலக்கணம் வழுவாது நின்றிட விரும்புவார்க்கு விருந்தோம்பல் ஓர் பெருங்குணமாகும்.

விருந்தோம்புவார்க்கு அச்செய்கையினால் இம்மையிற் புகழ் உண்டாதலேயன்றிப், பொருள் குறையாமல் மேன்மேலும் வளருவதோடு அவ்விருந்தோம்புவானின் விளைநிலமும் வித்தின்றித் தானே விளைந்திடும். எனெனின்

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்"

என்று பொய்யா மொழியார் புகன்றதும் பொய்யாமோ?

அடக்கமுடைமை :—

அஃதாவது மனம், வாக்கு, காயம் ஆகிய இம்மூன்றும் தீயவழியிற் செல்லாமல் அடங்குதலுடையனாயிருத்தலாம். இம்மூன்றனையும் அடக்கிவிட வேண்டுமெனவே, அம்மூன்றனையும் யாதொரு தொழிலும் செய்யாது நிறுத்தி விடுதல் என்பது பொருளன்று. மிக்க விரைவாகச் செல்கின்ற ஓர் குதிரையினை யடக்கிவிட வேண்டுமென்றிடின், அதனை ஓடாது நிறுத்திவிட்டால் அக்குதிரையால் உண்டாகும் பயனை யாம் பெறாது போய் விடுவோம் பின்யாது செய்யவேண்டுமெனின், அக்குதிரையைத் தான் எண்ணியபடி ஓடவிடாது இழுத்துப்பிடித்து நம் விருப்பப் படி ஓடச்செய்தல் வேண்டும். அவ்விதம் செய்வோமாயின் அக்குதிரையால் நமக்கு யாதொரு துன்பமும் நேராதிருப்பதோடு அக்குதிரையாலாய பயனும் நமக்கு உண்டாகும். அஃதேபோல் ஓர் கண்ணிமைப் பொழுதில் ஆயிரக்கணக்கான எண்ணங்களைத் தோற்றியழிக்கவல்ல நம் மனதை அடக்கிக் கொள்ளவேண்டும் என்றால், அம்மனது யாதொரு எண்ணத்தையும் உண்டாக்காது

அடக்கிவிட வேண்டும் என்பது பொருளன்று. பின் யாதெனின், தன்னை எக்காலும் சாருந்தன்மையற்ற பொருள்கள் மீது மிக்க ஆசை கொள்ளுதலும் அவ்விதம் தான் கொண்ட ஆசை முடிவு பெறுதாயின் சினங்கொள்ளுதலும், முதலாக ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற தீய எண்ணங்களைக் கொள்ளாது நல்ல எண்ணங்களைக் கொள்ளும் வழியிலேயே அதனைச் செலுத்தல் வேண்டும் என்பதேயாம். அவ்விதம் அதனைச் செய்யாமல் 'அம்மனமானது யாதொருவித எண்ணத்தையும் கொள்ளாமல் அதனை அடக்கி விடுதும்' என்றிடின் அது முடிவுபெறாச் செயலேயாம். அன்றியும் அதனை அடக்கிவிடவேண்டும் என்பது நம்மைப் படைத்துள்ள கடவுளுடைய எண்ணமானால், இம் மனத்தையும் அம்மனத்தினிடத்து எண்ணங்களை யுண்டாக்கும் தன்மையினையும் அவர் யாது காரணங்கொண்டு படைத்தல் வேண்டும்? நல்ல குதிரைகளை வாங்கி வீட்டினுட் கட்டியிருத்தலைவிட அக்குதிரையினை வாங்காதிருப்பதே சாலச் சிறந்ததன்றோ? ஆதலின் கடவுளானவர் இவ்வுலகத்துப் பயன்படாதனவாக யாதொன்றினையும் படைத்திலர் என்பது உறுதி. நமது மனமும் யாதொரு செயலும் இயற்றாது அடங்கிக் கிடத்தற்காகவே உண்டாக்கப்பட்டதன்று என்பது திண்ணம். ஆகவே மனத்தை யடக்குதல் என்பதற்கு மனதில் கெட்ட எண்ணங்கள் புகுந்திடாமல் நல்லெண்ணங்களைக் கொள்ளும்படி செய்தல் என்பதே தக்கபொருளாம்.

அவ்வண்ணமாயின், இம்மனத்தைக் காத்திடாவிடில் யாது நேரிடும் எனின், மனதில் தோன்றிடும் நல்ல எண்ணங்களோ கெட்ட எண்ணங்களோ நம் மனத்தைவிட்டகன்றதாயினும், அவைகள் வெளிக்காற்றிலே பரவியிருந்து, பின் நம்மையே தாக்கிடும் எனத் தற்காலத்து உலக இயற்கையின் தன்மைகளையுணர்ந்த மேல் நாட்டுப் பெரியார் சிலர் கண்டுபிடித்திருக்கின்றனர். நாம் ஏதோ சில கெட்ட எண்ணங்களைப் படைத்துப் பின் அவைகளை மறந்து விடினும் அவைகள் நமக்குத் துன்பத்தினை உண்டாக்கியே செல்லும் என்பது உறுதியே. ஆதலின் மனத்தினை ஒரு கணமும் மறவாமல் நல்லெண்ணங்களை உண்டாக்குதலிலே செலுத்த முயலுதல் வேண்டும்.

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து."

என்று நம் தேவர் கூறியவண்ணம், நமது மனநிடத்துக் குடிகொண்டுள்ள சினத்தைத் தோன்றிடாது செய்து மெய்யறிவை யுடையவனாகி அடக்கத்தினைக் கொண்டிருப்பானாயின் அறக்கடவுள் தானே சென்று அவனை அடைவனன்றோ?

நாக்கு அடக்கம்:—மனதினிடத்துத் தோன்றுகின்ற எண்ணங்கள் யாவும் உருவடைந்து வெளிவருவது நாக்கின் துணையால், ஆதலின்,

"யாகாவா ராயினு நாகாக்கக் காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

என்று நம் செந்நாப்புலவர் கூறியாங்கு எவ்விடத்தும், தன் மனதிற் றோன்றிய ஓர் பொருளைப் பிறர்க்கு எடுத்துக் கூறத் தொடங்குமுன், ஆராய்ச்சி செய்திடல் வேண்டும். அவ்விதம் செய்து தான் கூறப்போவது யாவர்க்கும் துன்பத்தினை விளைக்கக் கூடியதோ என்றும், அஃது உண்மையாக இருக்குமா என்றும் தெரிந்து கொண்டு இனிமையுடன் சுருக்கமாகக் கூறவேண்டும். அவ்விதமின்றி மிகையாகக் கூறிடின் குற்றம் விளைத்தலும் நேர்ந்திடும். ஆகவே சுருங்கச்சொல்லி விளங்க வைத்தலே அழகெனப் பெரியோர்கள் கூறிப்போயினர்.

'நாகாக்க' என்பதனால் எப்பொழுதும் நாம் யாதொன்றும் வாய்திறந்து பேசுதலே கூடாது என்றிடின் அஃது குற்றமாம். பின்யாது கொண்டு இவ்வாறு கூறினாரோவெனின், பிறர்க்குத் துன்பத்தைத் தரக் கூடியதும், உண்மையல்லாததுமான சொற்களைக் கூறாது அடக்கவேயாம். எனவே உண்மையான சொற்களைக் கூறுவதில் யாம் அஞ்சவேண்டுவதில்லை.

மெய்யடக்கம்:—மனதில் நினைக்கும் எண்ணங்களும் நாவாற் கூறியிடும் சொற்களும் குற்ற மற்றதாயிருப்பதோடு, நம் மெய்யினுடைய மற்றைய உறுப்புக்களும் குற்றமற்ற தொழில்களையே இயற்றிடுதல் வேண்டும்.

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து."

என்ற திருக்குறளே உடலினடக்கம் கூறுகின்றது. ஆமை தன்னகத்து அடக்கிக் கொள்ளும் ஐந்துறுப்புக்களைப் போல, மானிடவடிவந் தாங்கிய ஒவ்வொருவரும் அடக்கிக்கொள்ள வேண்டியன, மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பொறிகள் ஐந்துமேயாம். அவைகளை அடக்கலாவது, இப்பொறிகள் ஐந்தின் வழிகளாகவும் நுகர்ந்திடும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற இவ்வைந்தின் வகைதெரிந்து, இவைகளிலே அதிகப் பற்றினைச் செலுத்தாது, அடக்கிக் கொள்ளுதலாம். உலகத்தில் தோன்றிய பொருள்கள் யாவற்றினும் இவ்வைந்து உறுப்புக்களும் இச்சை கொள்ளக் கூடியன. அவைகள் இச்சித்த வழியே யாமும் அவைகளை விட்டிடின் இறுதியிற் றீராத் துன்பமே நேர்ந்திடும். பின்னும், தாய் தந்தையர்க்குத் தம் சிறுவயதிற் கட்டுப்பட்டிரா இளைஞ்சிறார்கள், தம் வயதுக் காலத்திலும் ஒருவருக்குங் கட்டுப்படாராய்த் தீயவழியிலேயே சென்றிடுவர் என்பது உண்மையன்றோ? அஃதே போல் இப்பொறிகளையும், சிறுபொருள்களிலெல்லாம் இச்சை கொள்ளும் காலத்திலேயே யடக்கி நம் வயப்படுத்தாவிடின், காலஞ் செல்லச் செல்லத் தீயபொருள்கள் யாவற்றினும் தம்மிச்சையைச் செலுத்தித் தீராத் துன்பத்தினை விளைவிக்கும். அப்பொழுது அவைகளை நம்மால் அடக்கச் சிறிதும் முடியாது. இவ்வைந்து பொறிகளையும் தம் வயப்படுத்தி அடக்க முடியாமல் அழியா நரகத்தினையும் இகழ்ச்சியினையும் பெற்றோர் பலராவர். ஆதலின் புகழினையும் இன்பத்தினையும் பெற விரும்புவோன் இவ்வடக்கத்தினைக் கைக்கொள்ள வேண்டும் எனக் கூறவும் வேண்டுமோ?

பொறையுடைமை— பொறையுடைமை யாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்த வழித் தாமும் அதனை அவர்கட் செய்யாது பொறுத்தலையுடையராதலாம். அஃதாவது ஒருவன் நன்னெறியினின்றும் தவறித் தீயவழியிற் செல்லுதலை நோக்கித் தன் நோயுடைக் குழவிக்குத்

தாய் மருந்தூட்டுதல் போல் அறிவுற்ற பெரியார் எவையேனும் சிறிது கடுஞ் சொற்களைக் கூறி அவனை நன்னெறிக்குத் திருப்ப முயன்ற காரணமாகவாவது, அன்றி யாதாமொரு காரணமும் இன்றியாவது அக்கீழ் மகன் அதன் பயனை யுணராது அவர்மீது சீற்றங்கொண்டு அவர்க்கு இடுக்கண் இயற்றிட முயன்றானாயினும் அப்பெரியார்,

"கூர்த்துநாய் கௌவிக் கொளக் கண்டுந் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை."

என்பதனையுணர்ந்து தாமும் அவர்க்கு இடையூறு செய்ய முயலாதிருத்தல் வேண்டும் என்பதாம். எனெனின், தன்னை யகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம் போற் றம்மைக் கொலை செய்வதை யொத்த குற்றஞ் செய்தாரையும், பொறுப்பதோடன்றி அவர்களைக் காப்பதுந் தலையாய அறமன்றோ?

அவ்விதமன்றித் தனக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்திடுபவர்க்கு அவ்வொரு பகல் மட்டும் 'நமக்கு இடையூறு இயற்றியவனுக்குத் தக்க தண்டனை கொடுத்து விட்டோம்' என்ற இன்பம் உண்டாகலாம். எனெனின் அக்கீழ் மகன் மறுநாள் முன்னிருந்ததினும் மிக்க சீற்றங்கொண்டு அவர்க்கு இடையூறு இயற்ற முற்படுவான் என்பதிலும் ஐயம் உளதோ? மற்று அதனைப் பொறுத்துக் கொண்டவர்க்கோ இவ்வுலகம் அழியுமளவும் புகழ் உண்டாகும். இதனையே தான்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

எனத் தமிழ் மறை கூறுகின்றது.

ஒருவன் தனக்கு இடையூறு இயற்றுதலோ அன்றிப் பழித்திடுதலோ செய்திடின் அதனையடைந்தவன் மற்றவனுக்கும் இடையூறு இயற்றவோ, தண்டம் கொடுத்திடவோ முயன்றிடுதல் எற்றுக்கோ வென உற்றுநோக்கின், அவன் அப்பகைவனை

வெல்லுதல் வேண்டியும், பின்னும் அவன் தனக்கு இடையூறு இயற்றாதிருக்க வேண்டியுமேயாம் என்பது தெற்றெனப்புலப் படும். ஆனால் அஃது அவர்கள் எண்ணியாங்கு முடிதலில்லாது, அப்பகைவன் தான் வலியற்றவனா யிருப்பின் மறைந்து நின்றா யினும் மிக்க இடையூறுகளைச் செய்திடமுயல்வன். இவர் களுடைய கருத்தோ அவனிடமுள்ள பகைமைத் தன்மையினை ஒழிக்க வேண்டும் என்பதே யன்றி வேறன்று. அவ்வாறாயின் அவர்களின் பகைத்தலுக்குக் காரணமாக உள்ள குணத்தினையே மாற்றியிடுதல் வேண்டும். அவன் நம்மீது சினங் கொண்டிருப் பின் நாம் அவனிடம் அன்பினைக்காட்டியும், அவன் நம்மைப் பழித்தலுக்குமாறாக அவனிடம் உள்ள எவையேனும் நற்குணங் களை எடுத்தாப் புகழ்ந்தும், அவன் இயற்றமிடையூற்றிற்கு நாம் நன்மை புரிந்தும் வந்திடின், அவன் எவ்வளவு அறிவிலியாயினும் சின்னாட்களிற் றன் குற்றத்தை யுணர்ந்து, நம்முடன் நட்புக் கொள்ளவும் முயன்றிடுவன். ஆகவே பகைவன் ஒழிந்தனன்; ஓர் நண்பனும் சார்ந்தனன் அன்றோ? இதுவே பகைவரை அழிக்கத்தக்க நெறியாம்.

உலகத்துள்ளார் யாவரும் எவரிடமும் அடிமைப் படுதலை விரும்பார். ஆனால் சினம் என்ற ஓர் குணத்திற்குமட்டும் தாங்கள் அடிமையாக இருக்க விரும்புகின்றனர் போலும்! மிக்க அறி வுள்ளவர்களே யாயிடினும், ஒருவன் தம்மை அறியாது மிகை யாகக் கூறிவிடின், அவர்களும் உடனே சீற்றத்திற்கு அடிமை யாகி, அஃது விரும்பிய வண்ணம் அவனைத் தாமும் பழிக்கவோ, அன்றித் தண்டம் இயற்றியிடவோ முயல்கின்றனர். அவ்வித மாயின் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறுபாடு யாதோ அறி கிலம். மற்று யாது செய்தல் வேண்டுமோ வெனின், சினம் என்ற குணத்திற்குத் தாம் அடிமையாகாது, சினத்தைத் தமக்கு அடிமையாக்குதல் வேண்டும். அவ்விதம் அதனைச் செய்தலோடு அதனை எப்பொழுதும் தம்மிடத்திற் றோன்றாது செய்திடல் வேண்டும். அவ்விதம் முடிந்திடின் அவர் யார்க்கும் அடிமை யாதல் இல்லை.

மேற்கூறிப் போந்ததினால் வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஓம்பாதிருத்தலேயாவது போன்று வல்லமையில் வல்லமையாவது அறிவினர் செய்திடும் குற்றங்களைப் பொறுத்தலே யாம் என்பது தெற்றெனப் புலனாகும்.

அருளுடைமை—அருளுடைமையாவது, மனைவி, மக்கள், சுற்றத்தினர், நண்பர் ஆகிய இவர்களைப் பற்றிவரும் தொடர்பு பற்றாது இயல்பாகவே எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணையாம். அருளுடைமையின் பயனையும் அதனை எவ்வாறு பெறுதல் வேண்டும் என்பதனையும் அன்புடைமையினைப்பற்றிக் கூறுங்காற் கூறியுள்ளேம்.

வாய்மை—வாய்மையாது ஒருவருக்கும் யாதொரு தீங்கினையும் தாராத நடந்ததோர் செயலினை நடந்தவாறே கூறுதலும், பல மக்களுக்கும் நன்மையைத் தருகின்ற நடவாத ஒன்றினையும் நடந்ததாகக் கூறுதலுமாம். எனவே பொய்ம்மையாவது யாதெனின் நன்மையினைத்தாராத நடவாதனவற்றைச் சொல்லுதலும் தீங்கைத்தரும் நடந்ததனைச் சொல்லுதலுமாம். ஆகவே ஒருவன் எப்பொழுதும் உண்மையினையே பேசமுன் வந்திடின் அவன் தனது நாவினை முதலில் அடக்கிக்கொண்டு தான் யாதாம் ஒன்றைக் கூற தொடங்குமுன் ஆராய்ந்து 'நாம் கூறப்போவது யாவர்க்காயினும் துன்பத்தைத் தரக்கூடியதோ' என்பதை எண்ணியே பேச முற்படல் வேண்டும்.

'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற'

என ஆன்றோர் கூறியுள்ளபடி மெய்யினை உணர்த்தும் நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட பிற அறங்கள் இல்லை யென்பதே துணிபாம்.

அன்றியும் ஒருவனுக்கு,

'பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.'

என்பதினாலேயே இம்மையிற் புகழினை விரும்பிய ஒருவன் வாய்மையினையே கடைப்பிடித்தல் வேண்டும் என்பது போதரும். அவன் பொய்யாது ஒழுகின் அவனுக்குப் புகழ் எங்ஙனம் உண்டாம் எனின், கூறுதும்.

'உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.'

என்பது நம் திருவள்ளுவர்தம் பொய்யா மொழியன்றோ? மனமறியப் பொய் பேசா தொழுகுகின்றவனை யறிவுடையோர் யாவரும் போற்றிப்புகழ்வர். உள்ளதை உள்ளபடியே கூறுதலாகிய உண்மை பேசுதலே மிக்க புகழினையுண்டாக்கும் என்பதற்குத்தக்க ஆதாரவுகள் நம் தமிழ் நூல்களில் மிகமலிந்து கிடக்கின்றன.

நாம் இதுகாறும் இவ்வுலகத்தின்கண் புகழினைப் பெற வேட்கையுற்றோர் எந்தவகைப்பட்ட குணங்களை உடையவர்களாயிருத்தல் வேண்டும் எனக்கூறிப்போந்தோம். இனி எவ்வகைப்பட்ட தீயகுணங்களை அறவே நீக்க வேண்டும் என்பதனையும் சற்று ஆய்ந்திடுவம்.

சான்றோர்களால் உலகமக்கள் நீக்கவேண்டியன எனக்கூறிய குணங்களாவன அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறல் முதலியனவாம்.

அழுக்காறு:—பிறர்தம் உடைமைப் பொருள்களாகிய மண், பெண், பொன் முதலியன ஒருவனிடம் நிறைந்திருத்தலைக் காணப்பொறாது அவைகளைப் பெற்றவனிடத்துப் பொறாமை கொள்ளுதலே அழுக்காறு எனப்பெறும். ஒருவன் யாதொரு பகைவனும் இல்லாதிருந்தும், இவ்வழுக்காற்றினைமட்டும் தன்னகத்துடையவனாக இருப்பின், அதுவே அவனுக்கு மிக்க கேட்டைத் தருதற்கும் போதுமானது.

'விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்'

எனக்கூறியாங்கு ஒருவன் அழுக்காறுடையனாதலினின்றும் நீங்கப் பெறுவானாயின் அதனினும் சிறந்த பேறு யாதொன்றும் இல்லை. அழுக்காறு எனும் இப்பாவி, தன்னை உடையானையே, இம்மையில் அவனுடைய செல்வத்தினையும் கெடுத்து, மறுமையில் நரகத்தினிடத்தும் செலுத்தி விடுவன். மற்றும்,

'அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.'

ஆகவே இத்தீங்குகளினின்றும் நீங்க விரும்பியோனும் புகழினைப் பெறவேட்கையுற்றோனும்

'ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.'

வெஃகுதல்:—அஃதாவது பிறருடைய நிறைந்த செல்வத்தைக் கண்டு அழுக்காறு கொள்ளுதலேயன்றி, அவர்தம் பொருளை வௌவுதற்கு நினைத்தலாம். ஆகவே இதுவும் தலையாய குற்றம் என்பதனை நோக்கி இதனையும் அறவே நீக்க முயலுதல் வேண்டும். பிறர்க்குரிய பொருளைக் கொள்ளுதல் நமக்கு அறமல்ல வென்னும் நடுவு நிலைமையில்லாமல், அவர்தம் பொருளை வௌவுதற்கு விரும்பின், அவ்விருப்பு நமது குடியையும் கெடுத்துப் பல குற்றங்களையும் கொடுத்திடும். அஃதன்றி, ஒருவருடைய பொருளை வௌவுதற்கு விருப்பமடையாதிருப்பின்,

'அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு'

என்றவண்ணம், திருவானவள் தான் சேர்தற்காந் திறத்தை அறிந்து, அவ்விருப்பமில்லானைச் சேர்ந்திடுவள். அதனாற் புகழும் உண்டாம்.

புறங்கூறல்:—அஃதாவது காணுதவிடத்தே பிறரை இகழ்ந்து பேசுதலாம்.

‘புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்’

என நம் மறை நூலார் கூறியிருத்தலின், ஒருவனின் எதிரே நின்று கண்ணேட்டமறச் சொல்லினும், அவன் இல்லாதவிடத்தும் பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லை மொழிந்திடலாகாது.

அன்றியும் காணுதவிடத்தே தன்னைக் குறித்துப் பிறனுலே சொல்லப்பட்ட பழியைக் கேட்டவன், அவன் மிகவும் வருந்தும்படி அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து எதிரிலேயே சொல்லுவானாதலால், பிறனது பழியைக் கூறுவோன் தனது பழிகளினுள்ளுந் தான் வருந்தத் தக்கவைகளையும் ஆராய்ந்து கூறுதல் வேண்டும். எதிலார்தம் குற்றத்தைபோலவே, புறங்கூறுதலாகிய தமது குற்றத்தினையும் காணமாட்டுவாராயின் அவர்களுக்குத் துன்பம் என்பதும் ஒன்று நேரிடுமோ?

‘அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது’

என்ற திருக்குறளை நோக்கிடின், புறங்கூறுதிருத்தலினுல் உண்டாம் புகழினையும் கூறுதல் வேண்டற் பாலதோ?

இதுகாறும் உலகத்திற் புகழினையடைய விரும்பியுள்ளார்கள் உறுதியாகக் கைக்கொள்ள வேண்டற்பாலனவும், வேண்டாதனவும் ஆனகுணங்களிற் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறினேம். இல்லறத்தில் வழுவாது நின்றும் இத்தகைக் குணங்களையெல்லாம் உடையவனுக இருத்தல் முடியாத செயலே என்பதில் யாதோர் ஐயமும் இலது. ஆயினும்,

‘இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை’

என்பதை நோக்கியேனும் இவ்வரிய குணங்கள் யாவையும் உடையவனுயிருக்கமுயலுதல் வேண்டும். இவ்வண்ணம்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.'

ஆதலின் இவ்வாற்றிற் பெறும் புகழினைவிட மிகச் சிறந்ததென எதனைக் கூறலாகும்?

புகழினைப் பெறும் வழிகளில் இரண்டாவது, உலகமக்களோடு நடந்து கொள்ளும் முறையாகும் எனக்கூறினோம்.

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்'

என்றாங்கு, ஒருவன் எவ்வளவு அறிவினை யுடையவனாக இருப்பினும் அவன் உலகத்தாருடன் முறைதெரிந்து ஒழுகானாயின், அறிவிலனாகவே கருதப்படுவன்.

மூதலாவதாகத்தன் மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்கள் நிற்க, ஆடை குலைந்தவனுக்குக் கை எப்படியோ, அப்படியே ஓர் இடையூற்றினை யடைந்தவனுக்கு நட்பாளன் மனத்தினும் முற்பட்டு உதவிசெய்து அவ்விடையூற்றினை யழிப்பானாதலின்

'செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.'

என்று நம் திருவள்ளுவரும் கூறிப்போந்தார்.

பின்னும், அறிவை வேறுபடுத்தி இருமையும் கெடுக்கும் இயல்பினராகிய, நல்லதில் நன்மையும் தீயதிற்றீமையும் இல்லையென்போரும், விடரும் முதலாயினருடைய நட்பினை அறவே நீக்குதலோடு, தீயவழியினின்றும் விலக்கி நல்வழியிலே செலுத்தும் பேரறிவுடையாரையே துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

'நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.''

ஆதலின் நற்செயல்களைப் புரிந்து புகழினையடைய விரும்பிய எவரும் சிற்றினஞ்சேரா து பெரியாரையே துணைக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனின்,

‘நல்வினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.’

அப்பெரியாரைத் துணைக்கோடலே யன்றி, ‘எவ்வகைய பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் அப் பாவத்தினின்றும் நீங்கும் வழி உண்டாகும். ஆனல் ஒருவன் இயற்றிய நன்றியினைக் கெடுத்தார்க்கு அப் பாவத்தினின்று நீங்கும் வழி இல்லையாம்” என்று பெரியார் கூறியுள்ளாராதலின்,

‘நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று’

என்பதைக் கருத்திற்கொண்டு, ஒருவன் செய்த தீயசெயல் களைச் செய்த அப்பொழுதே மறந்து நல்ல செயல்களை யெல்லாம் என்றும் மறவாது இருத்தல் வேண்டும். ஒருவன் செய்த ஒரு சிறு நன்றியினை மறவாது நம் மனத்துட் கொண்டால் அவன் நமக்கு இயற்றிய இடையூறுகள் யாவும் நம் மனத்தினை விட்டகன் றிடும். ஆகவே யாவராலும் புகழப்படுதலை விரும்பியவன் தனக்குத் துன்பம் வந்த காலத்திலே உதவியவரது நட்பினை எப்பொழுதும் விடாதிருத்தல் வேண்டும்.

இவைகளோடு கூட, உலக மக்களோடு கூடி ஒழுகுங்காலத் துத், தங்கள் தங்கள் நிலைக்குச் சொல்லப்பட்ட முறையினைக் கைவிடாது அவைகளின் முறையே ஒழுகுதல் வேண்டும். ஏனெனின் ‘ஒழுக்கமிலான்கண் உயர்வு’ இலதாகும். அன்றி யும் ஒழுக்கம் மிக்கச் சிறப்பினைக் கொடுத்தலால், அதனை உயிரினும் பன்மடங்கு காப்பாற்றுதல் வேண்டும்.

நாம் இதுவரையும் கூறிவந்த குணங்களை யெல்லாம் பெற்று ஒருவன் இவ்வுலகத்தே இல்லறத்தினை நடாத்துவானாயின் அவன் அடையும் புகழினை இவ்வளவினது என்று கூற இயலாது.

மூன்றாவதாகத் நாம் அறிந்த உண்மையினை உலகத்தார்க்கு எடுத்துக்கூறிப் புகழினைப் பெறுதல் என்ற பொருளைக் கொண் டோம்.

இவ்வுலகத்தே, அறிவுடையார் பலர் தாம் கண்டறிந்த உண்மைகளை, உலகத்துள்ளார்க்கு எடுத்துக்கூறின், உண்மையினை யறிந்துகொள்ள இயலாத கீழ்மக்கள் சிலர், அவர்கள் சொல்லியன வற்றை உண்மையெனக் கொள்ளாது அவர்களைப் பழித்திடுவர். இதன் காரணமாக அப்பெரியார்கள் பின்னும் தாங்கள் கண்ட உண்மையினைக் கூற அஞ்சுகின்றனர். ஆனாற் பண்டைக் காலத்திலோ நம் நாட்டுப் புலவர்களும், பெரியார்களும், தாம் கூறுகின்ற உண்மைகளை அக்காலத்தார் நம்பாவிடினும் தாங்கள் அதற்கு அஞ்சாது நின்று உண்மைகளை எடுத்துக் கூறிக் கொண்டே வந்தனர். இதன் காரணமாகவே 'அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வி—பூத்தலிற் பூவாமை நன்று' எனக் கூறிப் போந்தனர் போலும். அவர்கள் இவ்வாறு கூறிப்போந்த பல்லாண்டுகட்குப் பின் தோன்றிய பலரும் அவர்கள் கண்ட உண்மையினைக் கைக்கொண்டனர். ஆகவே அவ்வுண்மை பெருகலாயிற்று.

அன்றியும், இவ்வுலகத்திற் றோன்றியிருக்கும் சமயங்களை யெடுத்துக்கொண்டு அச்சமயங்களின் தலைவர்களைப்பற்றி ஆராய்ந்திடின், அவர்கள் முதலிலே தாம் கண்ட உண்மைகளை உலகத்தார்க்கு எடுத்துக் கூறுங்காலத்தில், அவர்கள் அடைந்த துன்பத்தினை எல்லாம் வல்ல இறைவனே அறிவான். அவ்வண்ணம் அவர்கள் துன்பத்தினை யடைந்தும், உலகத்தார்க்கு உண்மையினை எடுத்துக் கூறுவதினின்றும் நீங்கலர். பின் சில ஆண்டுகளில் அவர்கள் கூறிய உண்மையினைத் தெரிந்துகொண்ட மக்கள், அவர்கள்தம் கொள்கைகளைப் பின்பற்றி அவர்களையும் உச்சிமேற் கொண்டனர். அவர்களுடைய புகழும் என்றும் அழியாது நிற்கின்றது. அவர்கள் யாவரும் தாங்கள் கண்டறிந்து கூறிய உண்மைகளை உலகமக்கள் எதிர்த்து நின்றதினால், அவர்களுக்கு அஞ்சிக் கூறாது இருந்திருப்பார்களேயானால் இப்பொழுதும் அவர்களுடைய புகழ் நிற்குமோ? ஆதலின் யாம் உண்மையெனக் கண்ட பொருள்களை உலகத்தினரிடம் கூறின், சிலர் அதனை ஏற்றுக்கொள்ளுவர்; சிலர் கொள்ளாது மறுப்பர். அதற்கு அஞ்சி யாம் உண்மையினைக் கூறப் பின்வாங்கலாகாது.

இவ்வண்ணம் ஒவ்வொருவரும், பெரியார்கள் உடன்பா டாகக் கொண்ட குணங்களை உடையராகி, நீக்கப்பட்ட குணங் களைக் கைவிட்டு, உலகத்தோடு ஒட்ட ஒழுகுவாராயின், அவர்கள் இம்மையில் அழியாப் புகழினையும், மறுமையில் இன்பத்தினையும் பெறுவர் என்பது சரதம்.

இச்சிறு கட்டுரையிற் சிறியேனாகிய யான் எடுத்துக்கொண்ட கருத்துக்கள் யாவும் நமது திருவள்ளுவர் எழுதியருளிய திருக் குறளினிடத்திருந்தேயன்றி வேறு நூல்களினின்றும் அன்று. இக்கட்டுரையிற் குற்றங்களிருப்பின் பெரியார்கள் மன்னித்திடல் வேண்டுமெனக் கூறி இதனை முடித்துக் கொள்கின்றேன்.

---

மாணவர் பக்கங்கள்

உ

இறையருள் வாழ்க.

# உடல் இயலும் உடல் நல வழியும்.*

---

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T., ஆசிரியர்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், உரத்தநாடு.

---

## முன்னுரை.

செந்தமிழ் நாட்டிற்குச் சீரிய தொண்டு புரிய விரும்புவோர் யாவர்க்கும் முன்னிற்ப தொன்றுண்டு. அதுவே ஒவ்வொரு நாட்டுப் பெரியார்களும் ஒவ்வொரு நாளும் வளர்த்து வருகிற அறிபொருள்களைத் (Knowledge) தமிழர் யாவரும் நன்குணர்ந்து

---

* இவ்வரிய நூலின் உரிமையை, இதன் ஆசிரியர், மனமுவந்து நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்துள்ளார்கள். இதனை எவரும் சங்கத்தின் ஆணையின்றி அச்சிடவொண்ணாது. வே.

முன்னேற்றமடையத் தமிழில் வெளிப்படுத்துவதாம். இவ்வறிபொருள்களுள் முதன்மையுடையது உடலியல் (Physiology) என்பதை யாவரும் ஒப்புவர். இவ்வியலை, முறையாக நுண்ணிய பொருள் ஒன்றையும் விடாது, பெரிய நூலாக எழுத முன்வந்திலேன். ஆனால் அவற்றுள் நம் வாழ்க்கையை நலமுறச் செய்ய இன்றியமையாதவைகளை மட்டும் பொறுக்கித் தொகுத்துக் கற்றோரும் மற்றோரும் எளிதில் உணருமாறு விளங்கவைத்தலே கடமையாகக் கடைப்பிடித்துள்ளேன்.

இவ்வாறு விளங்க வைப்பதற்கு மிக்க தடையாவது தக்க சொற்கள் இன்மையேயாம். இத்தடையை நீக்குவதற்காக ஆங்கிலத்துள்ள சொற்களைத் தமிழ்ப் படுத்துவதில் மூன்று வழிகளுள. அவைதாம்:—(க) அப்படியே அச்சொற்களைத் தமிழெழுத்துக்களால் எழுதிவிடுவது. (உ) ஆரியம் முதலிய நம் நாட்டு மொழிகளிலுள்ள சொற்களைக் கையாளுவது. (ங) தக்க தமிழ்ச் சொற்களையே தேர்வது. இவற்றுள் முதல்வழி தமிழ் நூலியற்றுவோர்க்குச் சொற்றேடும் வருத்தத்தைச் சிறிது குறைக்கிறது; உலகியல் முறையில் பொதுமக்கள் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு கையாளும் பழக்கத்தை ஒட்டியது. எனினும் நூற்கள் யாருக்கென ஏற்பட்டனவோ அவர்க்கு எளியதன்று. அதிலும் ஆங்கில மறியாத தமிழர் இந்நூற்களைப் படிக்கும் பொழுது அவைகளிலுள்ள பொருள் புரியாத வெற்றுரைகளை விழுங்கிக்கொண்டேயிருக்கவேண்டும். இதனால் இச்சொற்களும் அறிபொருள்களும் பொதுமக்களிடத்து எளிதிற் பரவா. இனி உலகியல் முறைப்படி ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்தலாகாதோ வெனின் இம்முறைக்கு ஒத்தது நூலியற்றும் முறைக்கும் ஒத்ததாகக்கொள்ளல் பொருந்தாது; அன்றி உலகியல் முறை யாவும் ஒழுங்குடைத்தென்று கொள்ளவுங் கூடாது. உலகியலில் பிறமொழிச்சொற்கள் குறிக்கும் பொருள்களுடன் அல்லது எண்ணங்களுடன் பலர் நேரிற் பழகுவதால் நேர்முறைப்படி (Direct Method) அச் சொற்களின் பொருளை எளிதில் உணருகின்றனர். உணர்ந்ததும் அவைகளைத் தம்

மொழிச் சொற்களாற் புனைந்து கூறும் ஆற்றலும் அமைதியும் இல்லாததானும், பிறமொழிகளையும் பயிலும் வன்மையுடையே மென்னுஞ் செருக்கு யாவரு முடையாராதலானும், அச்சொற் களையே அவர்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நேரிற் பழகும் பொருள்கள், எண்ணங்களன்றி ஓரறிவியலுக்குரிய எல் லாப் பொருள்களையும் எண்ணங்களையும் பிறமொழிச் சொற் களாற் குறித்தல் ஒன்றையும் எளிதிற் புலப்படுத்தாது.

இனி இரண்டாம் வழியாகிய ஆரியம் முதலிய திசைச்சொற் களைப் பயன்படுத்தலும் முதல் வழியை ஒத்ததே. சில நூற் றாண்டுகளாக இவ்வாறு பிற சொற்கள் கலந்து வந்ததாற் பல அருந்தமிழ்ச் சொற்கள் வழக்கழிந் தொழிந்தனவே யென்று பேரறிஞர் பலரும் புலம்புவரேல் இன்னுங்கலந்து கொண்டே செல்வதின் பயன் சிறிது, கேடு பெரிதாம். என்னை? பல்லூழி காலமாகத் தன் சீரிளமைத் திறங்குன்றாத நந்தமிழ்மொழி, பன் மொழிக் கலப்பாற் ஆரியம் போல் சடுதியில் வழக்கொழிந்து சிதைந்தும் விடலாம்! இதுவன்றித் தமிழ்ச் சொற்கள் இனிய மெல்லோசையுடையனவாய், ஆழ்ந்த உட்பொருளுடையனவாய், முறைப்படி புனையப் பெற்றனவாய், தமிழரால் எளிதில் உணரக் கூடியனவாய், உணர்ந்தார்க்கு உணருந்தொறும் பெருமகிழ் வூட்டுவனவாயிருத்தலின் இவற்றிற்கிடையே தாறுமாறான, காடு முரடான* பிறமொழிச் சொற்களைக் கலத்தல் பெரும் பேதைமை யன்றோ? இப்பேதைமையினின்றும் நீங்கவே, உண்மைத் தமிழ்த் தொண்டு புரியவே இந்நூல் மூன்றும் வழியைக் கைப்பற்றித் தனித்தமிழ்ச் சொற்களாற் புனையப்பெற்றுளது. இச்சொற் களுட் பொருந்தாதன வளவேல் எடுத்துரைப்பார்க்கு என்றுான் றுங் கடமைப் பட்டவனுவேன். இவைகளைப் பயிலுதல் முதற் கண் புதிதாய்த் தோன்றினும் சிறிது பழக்கத்தாற் பெரிதும்

---

* சிறு எடுத்துக்காட்டாக இரத்தம், மாமிசம், மச்சை, தேகம், அஸ்தி பஞ்சரம், ஆகாரம் முதலிய ஆரியச் சொற்களையும் அவற்றின் நேர் தமிழ்ச் சொற்களாய குருதி, தசை, மூளை, உடல், எலும்புக்கூடு, உணவு முதலியவைகளையும் ஒப்பிட்டுப்பார்க்க. இவற்றின் ஒலி வேற்றுமையை யும் உற்று நோக்குக.

எளிதாமென்பதைப் பழக்கத்தால் அறிவேன்; முயல்வோரும் அறிவர். இன்னும் எளிதாக உணர்வதற்கு உதவியாக ஆங்காங்கு கவிப்புகளுக்குள் (Brackets) ஆங்கிலச் சொற்களுங் குறிக்கப் பட்டிருக்கின்றன.

இந்நூல், ஐந்தாந்தர (V Form) மாணவர்க்குப் பயன்படுமாறு அவர்களுக்கென ஏற்படுத்தப்பெற்ற பொருட் குறிப்புக் (Syllabus) கிணங்க எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மிகையான சில செய்திகளும் பொது மக்களுக்குப் பயன்படுமெனக் கருதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இந்நூலைச் செவ்வனே வெளியிடற்குத் தகுந்த பேருதவி புரிந்த எந்துணை யாசிரியர்களாய வி. பஞ்சநதம் பிள்ளை வித்வான் பொன்னுச்சாமி பிள்ளையவர்களிடத்து என்றும் மறவா நன்றியுடையவனாவேன்.

## தோற்றுவாய்.

"உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர் வளர்த்தேனே."

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயிற் கொண்டா னென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

என்பர் மூவாயிரம் ஆண்டிற்குமேல் வாழ்ந்த தமிழ் முனிவராகிய திருமூலர். அவர் வழிவந்த தமிழ் மக்களாய நாம் உடம்பினை இன்னும் இழுக்கென்றிருக்கிறோம்! என்னே நம் அறிவு!!

**உடலும் தமியங்கி வண்டியும்**:—மாணவர்களே! உங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தமியங்கி வண்டி (Motor Car) வைத்தாளும் வருமான முடையவர்களென்று வைத்துக்கொள்வோம்.

அவ்வண்டியை ஓட்டுதற்கு ஒரு பாகனை (Driver)த் தேடுவீர்களன்றோ? அப்பாகனும் அவ்வண்டியின் உறுப்புக்களனைத்தையும் அறிந்து வண்டி பழுதடையாமற் பாதுகாப்பதுடன், பழுதுறினும் நலப்படுத்தும் தன்மையுடையவனாயிருத்தல் நன்றோ? அன்றிச் சிற்சில உறுப்புக்களை மாத்திரம் கையாலுங் காலாலும் முடுக்கி வண்டியை ஓட்டுதற்கு மட்டும் தெரிந்தவனாயிருத்தல் நன்றோ? வண்டியின் வாழ்வையும் உங்கள் பணச் செலவையுங் கருதி அனைத்தும் உணர்ந்த பாகனே வேண்டுமென்று ஒத்த மனத்துடன் உரைப்பீர்களன்றோ? இவ்வாறாய பாகனைத் தேர்ந்தெடுத்த பின்னும் அவனைக் கொண்டு அவ்வண்டியை அடிக்கடி துடைத்தும் எண்ணெயிட்டும் எவ்வளவு அக்கரையாய்ப் பாதுகாப்பீர்கள்?

உடலை ஓம்புவதேன்:—இவ்வாறு 4000, 5000 வெள்ளிக்காசு (Rupees) பெறக்கூடிய ஒரு வண்டியின் பொருட்டு இவ்வளவு கவலையெடுத்துக்கொள்வீர்களாயின் விலைமதிக்க வியலாத மிக்க வியப்பு வாய்ந்த உங்கள் சொந்த வண்டியாகிய உடலைக் குறித்து எவ்வளவு கவலை கொள்ளல்வேண்டும்? அவ்வண்டிக் காரனும் உங்கள் உள்ளத்திற்கு அவ்வண்டியைப் பற்றி எவ்வளவு அறிவுறுத்திக் காப்பாற்ற வேண்டும்? எவ்வளவு கருத்துடன் அதற்கு நன்மை செய்ய வேண்டும். இவ்வாறு அறிவுறுததினாலுங் காப்பாற்றுததினாலும் எத்துணைபேர் குறைந்த ஆண்டுடையவர்களாயும், பிணியாளர்களாயும், வலிமையற்றவர்களாயும் இருக்கின்றார்கள்? எத்துணைபேர் உடலைச் சிறிதும் பொருட்படுத்தாததினால் உயிரையும் எளிதில் இழந்து தங்களுக்கன்றித் தங்களுற்றோர்களுக்கும் எவ்வளவு துயரை விளைக்கின்றனர்? ஐயோ! இக்கொடுமையை உணர்ந்தாவது நீங்கள் விழித்துக் கொள்ளுவீர்களா? உங்கள் உடலைப்பற்றி உணர முன் வருவீர்களா? வருவீர்களாயின் இந்நூலைக் கசடறக்கற்றுப் பின் அதற்குத்தக நில்லுங்கள்.

உடலைப்பற்றிய செய்திகள்:—மிக அருமையான இவ்வுடலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் நான்காம்.

அவையாவன (க) உடலின் பலப்பல உறுப்புக்களை விரித்துக்கூறும் உடற்கூறு (Anatomy), (உ) அவ்வுறுப்புக்களின் வேலைகளைக் குறிக்கும் உடலியல் (Physiology), (ங) இவ்வுறுப்புக்களாலாய உடலை நோயுறுமற் காப்பாற்றும் வழிகளைக் கூறும் உடல் நலவழி (Hygiene), (ச) உடற்குத் திடீரென ஓர் ஊறு நேரினும் அல்லது உயிர் உடலைவிட்டு நீங்கும்படிக்கான கேடு நேரினும் மருத்துவ ரில்லாத போழ்து செய்துகொள்ளும் முதல் உதவி (First Aid) என்பனவாம். இவற்றுள் உடல் நலவழியே நமக்கு எப்பொழுதும் நேரே பயன்படுவதாளுலும் அதை நன்குணர முதலிரண்டு செய்திகளும் இன்றியமையாதனவாம். நான்காவது செய்தியாகிய முதலுதவியும் நமக்கும் பிறருக்கும் பலபொழுது பயன்படுமாதலின், இவையாவற்றையும் வேண்டிய அளவு விரித்துக் கூறுவாம்.

## முதற் படலம்.

## உடலின் கூறுகளும் அவற்றின் வேலைகளும்.

உடலின் பெரும் பகுதிகள் :—நமது உடல் மூன்று பெரும் பகுதிகளாலாக்கப் பெற்றிருக்கிறது. அவை தலை, முண்டம் (Trunk), புறவுறுப்புகள் (Limbs) ஆகும். இவற்றுள் தலையே உடலிற் சிறந்த உறுப்பாய் உச்சியிலிருக்கிறது. இதில் கண், காது, மூக்கு, நாக்காகிய அறிவு வாயில்களும் மூளையுமிருக்கின்றன. முண்டமென்பது நெஞ்சு (Chest), வயிறு (Abdomen) என்னும் இருபெரும் பிரிவினது. நெஞ்சையும் வயிற்றையும் பிரிப்பது ஈரல் தாங்கி (Diaphragm) † என்னும் ஓர் தட்டைத் தசை. நெஞ்சினுள் நுரையீரலும் (Lungs), குருதியேற்றமும் (Heart) இருக்கின்றன. வயிற்றில் தீனிப்பை (Stomach), குடர்கள் (Intestines), கல்லீரல் (Liver) முதலிய உறுப்புக்களுள. புறவுறுப்புக்களே கைகளுங் கால்களுமாம்.

---

† இது நுரையீரலைத்தாங்கிக் கொண்டே யிருப்பதால் இப்பெயர் பெற்றது.

உடலின் நுண் பகுதிகள் :—நமது உடலில் எங்கேனும் ஒரு சிறு துண்டை யெடுத்து அதனைப் பெருக்கிக் காட்டுங் கண்ணாடி (Microscope) யால் பார்ப்போமாயின் நூற்றுக் கணக்கான அணுக்கூடுகளைக் (Cells) * காணலாம். இவையாவுந் தனித் தனி உயிருடையனவே. இவை இருக்குமிடத்திற்குத்தக பல்லுருவும் பல தொழிலுமுடையன. இவற்றின் உருவை ஒருவாறுணர முதலாம் படத்தைப்‡ பாருங்கள். இதனுள் பலவிடங்களிலுள்ள கூடுகளைக் காணலாம். இவற்றுட்சில உருண்டையாயிருக்கின்றன; சில தட்டையாயும் வட்டமாயுமிருக்கின்றன; சில பல கை கால்களையுடையன; சில தாறுமாறாய் மாறிக்கொண்டிருக்கும் உருவமுடையன. இவைகளின் பருமனைப்பற்றிக் கருதுவோமாயின், பொதுப் (Average) பருமனுள்ள ஒரு கூட்டின் குறுக்கு (Diameter) $\frac{1}{20,000}$ அங்குலம் ஆகும். குச்சிபோன்ற கூடுகளில் (Bacillus) 5,000,000த்தை நீளமாக வைத்து அடுக்கினால் ஒரு முழமாகும். இவைகளையே ஒரு பரும அங்குல (Cubic Inch) இடத்தில் நிறைபும்படி அடுக்க 640,000,000,000,000 வேண்டுமெனின் இவற்றின் நுண்மை நன்கு விளங்கும். இவைகளின் தொழிலை நோக்குமிடத்து, மூளையிலுள்ள அணுக்கூடுகள் வேந்தர்களைப் போல் யாவற்றையும் அடக்கியாளும் ஆண்மையுடையன; சில அமைச்சர்களைப்போல் அமைந்து அறிவுறுத்துகின்றன. கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள கூடுகள் அடிமைகள் போல் உழைக்கின்றன. குருதியிலுள்ள சில கூடுகள் கூலியாட்களைப் போல் உயிர்க்காற்றைச் (Oxygen) சுமந்து செல்கின்றன; சில வீரர்களைப்போல் எதிரியுடன் சண்டையிடுகின்றன. தீனிக்குழாயிலுள்ள சில கூடுகள் உணவிலிருந்து ஊன்பொருளை விளைவிக்கின்றன; சில மருத்துவர் போல் தக்க மருந்துகளைத் தயாரிக்

* கூடாயிருப்பது கூடெனினும் ஈண்டு இச்சொல் கூடாயிருக்கும் பொருளைக் குறிக்கவில்லை. நமது உடலுங் கூடு என்று அழைக்கப்படல் போல் ஈண்டும் இச்சொல் உயிரிருப்பதற்கிடந்தரும் பொருளாகிறது. இவை யாவுங் கெட்டி (Solid)யானவையே.

‡ இக்கட்டுரை முடிவில் இப்படங்கள் அமைக்கப்பெறும். தனி நூலாக அச்சிடுங்கால் அவை ஆங்காங்கு இணைக்கப்பெறும்.

கின்றன. நரம்புகளிலுள்ள கூடுகள் அஞ்சற்காரர்களைப் (Post Men) போற் கட்டளைகளையுஞ் செய்திகளையும் அனுப்புகின்றன. சில கூடுகள் கொத்தன், தச்சனைப்போற் கெடுமிடங்களைச் செப்பனிடு கின்றன. சில தோட்டிகளைப் போற் றூய்மை செய்கின்றன. இவ்வாறு பல வகைப்பட்ட கூடுகள் யாவும் ஒன்று சேர்ந்து உடற்கு உறுதிபயப்பதே கண்ணுங் கருத்துமாக ஒத்துழைக்கின் றன வாதலின் இவைகளை ஓர் நன்னாட்டு மாந்தர்க்கு ஒப்பிடலாம்.

இந்நுண்பகுதிகளாலாய பெருங்கூட்டங்கள்:—இக்கூடுகள் பலசேர்ந்தே ஒரு சிற்றுறுப்பு ஆகிறது. இவ்வுறுப்புக்கள் பல சேர்ந்து ஒரு தொழிலைச் செய்யும் ஓர் கூட்டமாகிறது. நம் முடலில் இவ்வாறாய பெருங்கூட்டங்கள் எழிருக்கின்றன. நமது உடலிற்கு உரந்தருகின்ற எலும்புக் கூட்டத்தை (Bony System) முதலாவதாகக் கொள்வோம். இவற்றைத் தனித்தெடுத்தடுக்கிய எற்புக்கூட்டை (Skeleton) நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது நம்முடலாகிய இல்லத்திற்கு அடிப்படையாகும். இக்கூட்டை மூடி அழகுபடுத்தும் தசைக் கூட்டத்தை (Muscular System) இரண்டாவதாகக் கொள்வோம். இதனையே 'சோற்றாலடித்த சுவர்' என்கின்றனர். இதனாற்றான் நாம் வேலை செய்கிறோம். இத்தசைகளுக்கும், எலும்புகளுக்கும், ஏனைய உறுப்புகளுக்கும் உணவை ஊட்டுங்குருதியும், அது செல்லுங் குழாய்களும், அதைச் செலுத்துங் குருதியேற்றமுஞ் சேர்ந்ததே மூன்றாவது கூட்டம். இவற்றிற்குக் குருதியோட்ட உறுப்புக்கள் (Circulatory System) என்று பெயர். இக்குருதி உடலெங்குஞ் சுற்றிச் சென்று ஆங்காங்குள்ள கழிபொருள்களைக் கவர்வதால் அழுக் கடைகிறது. இவ்வழுக்கை நீக்குவன நான்காம் கூட்டமாய மூச்சுறுப்புகள் (Respiratory System). இவையே மூக்குமுதல் நுரையீரல் வரையிலுமுள்ள ஒரு பெரும் பிரிவாம். இவ்வாறு குருதியானது உணவை ஊட்டுவதாலும் அழுக்கை நீக்குவதாலுங் குறைந்து கொண்டே வருகிறது. இக்குறைவை நிறைவிக்கவே நாம் உண்கிறோம். நம் உண்டியைக் குருதியாக்கற்கே சமிக்கும் உறுப்புக்கள் (Digestive System) இருக்கின்றன. இவ்வுறுப்புக்

களே வாய்முதல் எருவாய் (Anus) ஈருயுள்ள ஒரு பெருங்குழாயும் அதன் பக்கங்களிலிருந்துகொண்டிருக்குஞ் சிற்றுறுப்புக்களுஞ் சேர்ந்த ஐந்தாங்கூட்டம். நம்முணவிலுள்ள வீண் பொருள்களை யும், உறுப்புகள் வேலை செய்வதாலுண்டாகுங் கழிபொருள் களையுங் கழிக்குங் கழிவாய்களே (Excretory System) ஆறுங் கூட்டமாம். இவை பவ்வீயைக் கழிக்கும் பெருங்குடலும், சிறு நீரைக்கழிக்கும் உறுப்புக்களும், வேர்வையைக் கழிக்கும் சிறு பைகளுமாம். ஏழாங் கூட்டமே இவ்வுலகிலுள்ள பொருள்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கென்றும் தெரிந்து கொண்டதற் கேற்ப நடப்பதற்கென்றும் ஏற்பட்டிருக்கிறது. இக்கூட்ட உறுப் புக்களே மெய், வாய், கண், மூக்குச்செவி யென்னும் ஐம்பொறி களும், இவற்றிற் படுபவைகளைப் புலப்படுத்துவதற்காக மூளைக்கு அறிவிக்கும் கருவிகளாய நரம்புகளும், இந்நரம்புகள் சுமந்து செல்லுஞ் செய்திகளை யறியும் மூளையும், அறிந்ததற்கிணங்க மூளை யிடுங்கட்டளைகளைச் செலுத்தும் நரம்புகளும் ஆகும். இவை யாவற்றிற்கும் அடிப்படை நரம்புகளேயாதலின் இவ்வுறுப்புக்களை நரம்புக்கூட்டம் (Nervous System) என்றழைக்கின்றனர். இக்கூட்டத்தில் நமது பாகனாகிய உள்ளங் குடிகொண்டுளன். அவனை அறிவுறுத்தி அடக்கியாளுவதே நமது கடமை.

---

## இரண்டாம் படலம்.

---

### எற்புக் கூட்டம்.

எலும்பு எதனாலாயது?—எலும்புகளை உயிரற்ற பொருள் களாக நீங்கள் கருதுவீர்கள். ஆனால் அவை உயிருள்ள பல கூடுகளாலாக்கப் பெற்றன. இக்கூடுகள் மண் பொருள் (metal) ஆகிய சுண்ணாம்பினிடையே இருக்கின்றன. ஓர் எலும்பை உப்புப்புளிப்பு (Hydro-chloric acid) போன்ற ஓர் புளிப்பிலிட்டு வைத்திருந்தால் சுண்ணாம்பு கரைந்து போவதால் அதை எளிதில் வளைத்து விடலாம். ஆதலின் சுண்ணாம்பே எலும்பைக் கடின

மாக்குகிறது என்பது தெளிவாம். எலும்பின் கூடுகளுக்கு உணவளிக்கக் குருதிக்குழாய்கள் எலும்பினுட் செல்லுகின்றன. எலும்பினுள் நல்லி (Yellow marrow) இருக்கிறது. இளைஞரின் எலும்புகள் வளரக்கூடிய சத்துநிறைந்ததா யிருக்கின்றன. முதியோரின் எலும்புகளில் இச்சத்துமின்றி மூளையுங் குறைந்திருப்பதால் நிறை குறைந்திருக்கிறது. எலும்பு முரிந்தால் முரிந்த துண்டுகளினிடையே அவைகளை ஒட்டவைக்கக்கூடிய எற்புப் பசையை (Callus) அத்துண்டுகளே தயாரித்துக் கொள்வது எவ்வளவு வியக்கத்தகுந்தது பாருங்கள்!

எலும்பின் வேலைகள்:—நமது உடலில் எலும்புகளில்லாவிட்டால் நாம் புழுப்போல நெளிய வேண்டும். நேராக நிற்கவும், நடக்கவும், பலப்பல வேலைகளைச் செய்யவும் முடியாது. ஆனால் இவ்வெற்புக்கூடுமட்டும் தானாகவே நின்று, நடந்து, வேலை செய்யும் என்று நினைக்கக்கூடாது. இவ்வெற்புக்கூட்டை இயக்குவன இதன் மேற்கட்டப்பட்டுள்ள தசைகள். இத்தசைகள் கட்டப்பட இது அடிப்படை (Foundation) ஆகிறதால் எலும்புகளின்றி நாம் மிகச் சில வேலைகளையே செய்யமுடியும். இன்னும் இவை மூளை, கண், குருதியேற்றம், நுரையீரல், முள்ளந்தண்டு (Spinal chord) முதலிய மென்மையான உறுப்புக்களை எளிதில் ஊறுடையாவண்ணம் மூடிக் காப்பாற்றுகின்றன. இவ்வாறு காக்கப்பெறுவிடின் இவ்வுறுப்புக்கள் சிறிது காலமும் நிலைத்து நிற்கும் வன்மை யுடையனவல்ல. இவ்வேலைகள் போதாதென்று போலும் இன்னொரு அரிய செயலையும் செய்து கொண்டேயிருக்கின்றன. அதுதான் குருதியிலுள்ள கோடிக்கணக்கான செங்கூடுகளை (Red corpuscles)ப் பிறப்பித்தல். இச்செங்கூடுகளின் பெருமையைப் பின்னர் விளக்குவாம். ஈண்டு இக்கூடுகள் ஒருகணமேனும் வேலை செய்யாதிருந்தால் உயிர் உடனே போய்விடும் என்பதை உணருவீர்களாயின் இக்கூடுகளைப் பிறப்பிக்கும் எலும்புகளின் இன்றியமையாமை தெளியப்படும்.

எலும்புகளின் தொகை வகை:—இரண்டாம் படத்தைப் பாருங்கள். இதுதான் எற்புக்கூடு. இதில் 206 துண்டு எலும்புகள்

விதம் விதமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தலை, முண்டம், புறவுறப்பு என்ற எலும்புகளாகப்பிரித்து நோக்குவாம். தலையிலுள்ள பெரு எலும்புகளாவன மண்டையோடு (Cranium), மூக்கு எலும்புகள், கன்ன எலும்புகள், மேல் தாடை எலும்புகள், கீழ்த் தாடை எலும்பு (Lower jaw bone) முதலியனவாம். முண்ட எலும்புகளின் பகுதிகளாவன :—முள்ளந்தண்டுக்கூடு (Spinal Column), பழுவெலும்புகள் (Ribs) 12 இரட்டை (Pairs), நெஞ்செலும்பு (Sternum) 1, கழுத்துப்பட்டை எலும்புகள் (Collar bones) 2, தோள்பட்டை எலும்புகள் (Shoulder blades) 2, இடுப்புவளையம் (Pelvic Girdle), முதலியனவாம். இவற்றுள் முள்ளந்தண்டுக் கூட்டில் 24 வளையங்களும் (Vertebrae), ஓர் மும்முடக்கி எலும்பும் (Sacrum), வால் எலும்புகளும் (Coccyx) இருக்கின்றன. இத்தண்டுக்கூடு ஒரே எலும்பினாலாக்கப்பட்டிருப்பின் நம்மாற் குனியவும், வளையவும், நெளியவும் முடியாது. பழுவெலும்புகள் 12 இரட்டைகளில் மேல் 7 இரட்டைகள் நெஞ்செலும்பினுடனும், முள்ளந்தண்டுக் கூட்டுடனும் முன்னும் பின்னும் இணைக்கப்பட்டிருப்பதால் வலிவுடையன (Real). அதன் கீழுள்ள 3 இரட்டைகள் இருமுனையிலும் மேற்கண்ட 7-வது இரட்டையுடன் மட்டும் இணைக்கப்பட்டிருப்பதால் வலிவற்றன (Unreal); அதன்கீழுள்ள இரண்டு இரட்டைகள் முள்ளந்தண்டில் மட்டும் இணைக்கப்பெற்று மற்றொரு முனையில் இணைக்கப்படாமையின் தொங்குவன (Floating). கடைப்பிரிவாகிய புறவுறுப்பு எலும்புகள் கையெலும்புகள், காலெலும்புகள் என இருவகை. கை ஒன்றிற்குப் பின்கை (Upper Arm) எலும்பு 1, முன்கை (Fore Arm) எலும்புகள் 2, மணிக்கட்டு (Wrist) எலும்புகள் 8, உள்ளங்கை (Palm) எலும்புகள் 5, கைவிரல் எலும்புகள் 14 ஆக முப்பது எலும்புகளுள. கால் ஒன்றிற்குத் தொடை எலும்பு 1, கீழ்க்கால் (Leg) எலும்புகள் 2, முழங்காற்சில் 1, குதி (Ankle) எலும்புகள் 7, மிதி (Instep) எலும்புகள் 5, கால்விரல் (Toe) எலும்புகள் 14 ஆக ஈண்டும் முப்பது எலும்புகளே இருக்கின்றன.

கை எலும்புகளுக்கும் கால் எலும்புகளுக்குமுள்ள வேற்றுமைகள் :-முழங்காற்சில்லைப் போல் முழங்கையில் ஒன்றுமில்லை.

மணிக்கட்டிலுள்ள 8 எலும்புகளுக்குப்பதிலாகக் குதியில் 7 எலும்புகள் தாமிருக்கின்றன. ஆதலின் கை கால்களின் எலும்புத்தொகை ஒன்றே. உடற் பளுவைத்தாங்குகிறதால் காலெலும்புகள் கையெலும்புகளினும் பெரியன; உறுதியுடையன. காலிலுள்ள தொடையெலும்பே உடலின் எல்லா எலும்புகளினும் பெரிது, நீண்டது, வலிவுடையது. தொடை மூட்டைவிட (மூட்டுகளைப் பற்றி பின்னால் பார்க்க) கைப்பட்டை மூட்டு நாலாப்பக்கமுந் திரும்பும். கைவிரல்கள் கால்விரல்களினும் நீளமுடையனவன்றி இயக்கமுடையனவுமாகும்; இதற்கேற்பவே காற்பெருவிரலினுங் கைப் பெருவிரல் நன்குயியங்கும். இவ்வாறியங்குவதோடு கைக்கட்டைவிரல் மற்றைய விரல்களுக்கு எதிரில் வரவுங்கூடுமாதலின் நாம் விரல்களால் பல நுண்டொழிலாகிய எழுதல், தைத்தல், இசைக்கருவிகளைப் பயிலுதல் முதலியவற்றைச் செய்து மேம்பாடடைந்திருக்கிறோம். மனிதனன்றிப் பிறவுயிர்கள் இவ்வாறு கட்டைவிரலை இயக்க முடியாதது அவைகளின் தாழ்ந்த நிலைக்கொரு முதலா(காரணமா)கும். உள்ளங்கையெலும்புகள் தட்டையாயிருக்க உள்ளங்காலெலும்புகள் வில் (Arch) வளைவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. உடலின் அமைப்பில் ஒவ்வொரு வேற்றுமையையும் உற்றுநோக்கில் ஒவ்வொரு உண்மை பற்றியேயிருத்தலைக் காணலாம். அதற்கேற்ப உள்ளங்காலில் உடற்பளுவு உறைக்கும்போது அது சிறிது அகன்று தட்டையாயும் பளு விலகியவுடன் முன்போல் வளைந்தும் விடுவதால் அப்பளுவினால் உள்ளங்காலுக்கு உண்டாகும் நோக்காடு குறைகிறது. உடலின் வியப்புடை அமைப்புள் இஃதுமொன்றே!

மூட்டுகள் (Joints):—நமது உடலிலுள்ள எலும்புகள் யாவற்றையும் சேர்த்து ஒரே எலும்பாக இவ்வுருவுடன் அமைத்திருந்தால் எளிதில் முரிந்துவிடும்; வேண்டியபடி இயங்காது கட்டைபோல் விரைத்திருக்கும். இவ்வாறிலாதபடியே, நமது நன்மைக்காகவே பல துண்டுகளா லாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒரே கூடாக இணைப்பனவும், பலவழியிற் றிருப்ப இடங் கொடுப்பனவும், பலவித மூட்டுக்களே. இம்மூட்டுகளின் வேலையை நோக்கிப் பெரும்பகுதியாக இருவகையாகப் பிரிக்க

லாம். ஒன்று அசையாமூட்டு (Immovable Joints); மற்றை யது அசையும் மூட்டு. அசையா மூட்டால் இணைக்கப்பெற்ற எலும்புகள் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு ஒரே எலும்புபோ லிருக்கும். மண்டையோடு எட்டுத் துண்டுகளை இணைத்ததா லாகும் ஓரோடாகும். இவ்வாறு இணைத்திருக்குமிடத்தில் கோணல் மிகவுமுள்ள கோடுகள் தெரியும். இவற்றைத் தான் தலையெழுத்து என்கிறார்கள்.

அசையும் மூட்டை அமைந்திருக்கும் விதத்தைக் குறித்து நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கீல் மூட்டு (Hinge Joint). இவ்வாறிணைக்கப்பட்ட எலும்புகள் கதவுபோல் ஒரு புறமே இயங்கும். முழங்கை, முழங்கால், கைகால்களின் விரல் கள் இவ்வாறே இணைக்கப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது குடைகல் குழவி (Ball-Socket Joint) மூட்டு ஆகும். இவ்வாறு இணைக்கப்பட்ட எலும்புகள் குடைகல்லில் குழவி நகருவது போல் நாற்றிசையும் நகரும். கைகளுங் கால்களும் இவ்வாறே முண் டத்துடன் இணைக்கப் பெற்றிருக்கின்றன. சருக்குமூட்டே (Gliding Joints) மூன்றாவதாகும். எலும்புகள் ஒன்றின்மே லொன்று சருக்கும்படி இணைக்கப் பெற்றதனால் இப்பெயர் பெற்றது இம்மூட்டு. உள்ளங்கை, உள்ளங்கால் எலும்புகளின் மூட்டுகள் இத்தகையன. நான்காவதே முளைமூட்டு (Pivot Joint) ஆகும். இவ்வித மூட்டு உடலில் பிடரியினுள் ஓரிடத்தே யிருக் கிறது. ஆங்கு தண்டுக்கூட்டின் உச்சிக்கூர் (Axis) தலையெலும்பு களின் அடிவளைவுள் (Atlas) செலுத்தப்பெற்று இணைத்திருப்ப தால் தலையை நான்குதிக்கிலுஞ் சுழற்ற வியலுகிறது.

அசையும் மூட்டு, அசையா மூட்டு ஆகிய இருவித மூட்டு களின் தன்மையைக் கலந்த கலப்பு மூட்டு (mixed joints)ம் ஒரு வகை மூட்டே. இம்மூட்டால் இணைக்கப்பெற்ற எலும்புகள் சிறிதே இயங்கும். நமது முள்ளந்தண்டுக் கூட்டின் வளையங்கள் 24-ம் இவ்வாறே இணைக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளை வளைத்துவிட்டு விட்டால் தாமாகவே மீளுந்தன்மை யுடையன வாகலின் இவைகளுக்கு மீளும் மூட்டு (Elastic Joints) என்றும் பெயர்.

அசையும் மூட்டுகளுக்குவேண்டியவை ;—அசையும் மூட்டுகள் எளிதாக வேலைசெய்யும் பொருட்டு நான்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கின்றன. எலும்புகள் மூட்டுகளைவிட்டு நகராதபடி எலும்புக்கயிறு (Ligaments) களால் கட்டப்பட்டிருக்கின்றன. எலும்புகள் நகரும் பொழுது ஒன்றோடொன்று உராய்ந்து வலிக்காதபடி எலும்புகள் இணைக்கப் பெறும் நுனியில் மீளுந்தன்மை (Elastic) யுடைய மெத்தென்ற எலும்புக் குருத்துகள் (cartilage) இருக்கின்றன. இக்குருத்துக்களை வழுவழுப்பாக்க ஓர் நெய்ப்பொருள் (Lubricant) உண்டாகிறது. இந் நெய்ப்பொருள் சுற்றியுள்ள தசைகளிற் பரவாதபடி தங்குவதற்காக மூட்டைச் சுற்றி உரைகள் (capsule) இருக்கின்றன.

எற்பு நல வழி :—(1) தூய குருதியே எலும்பை வலிமையும் நலமு முறச்செய்கிறது. கள், சாராயம், புகையிலை, கஞ்சா, அபின் முதலிய மயக்கப் பொருள்கள் குருதியைக் கெடுத்து எலும்புகளை வலியிழக்கச் செய்கின்றன. இன்னும் இளைஞர்கள் இப்பொருள்களை உட்கொள்ளுவார்களாயின் அவர்களின் எலும்புகள் வளருந்தன்மை குன்றி, குள்ளையாய் விடுவார்கள். அன்றியும் மீளாவலுவிழத்தலையும் அடைகிறார்கள். குடியர்களின் எலும்பு முரிந்தால் எளிதில் ஒட்டிக்கொள்ளாது. (2) இளமை மணத்தாலும் தேற்றமுடியா இளைப்புக்கும், வலியிழத்தலுக்கும் பலர் ஆளாகின்றனர். (3) நமது உடலில் ஏதேனும் ஓருறுப்பு நிலை மாறியிருந்தால் (Deformed) அவ்வுறுப்பினுடையதன்றி முழு உடலின் நலமும் வேலையும் பழுதுபடும். மேல்நாட்டு முறையைக் கைப்பற்றும் போவாவினால் பலர் காற் கட்டைவிரல்களை மற்றை விரல்களின் பக்கம் வளைக்கக்கூடிய இறுகிய செருப்பணிந்து கொண்டு கட்டை விரல்களையன்றி உடல்நலனையும் பழுதடையச் செய்கின்றனர். இதனால் ஊளைச்சதைநோய் (Gout) உடையவர்கள் மற்றையோரினும் படும்பாடு பெரிதே. (4) இதனினுங் கேடான உறுப்பு நிலைமாறல் கூனலே யாகும். வண்ணார் போன்ற பெருங்கூனுடையோரன்றி உலகில் முக்காலே மூன்று வீசம் பேர் சிறு கூனுடையோரேயாவர். இன்னார் குரங்கைப் போற் கூனிக்கொண்டு உட்காந்திருப்பதை எங்குப் பார்த்தாலுங்

காணலாம். இதனுல் உடலினழகு குறைகிறது. அன்றி மார்பு கட்டையாய் ஆழ்ந்த மூச்சுவிட முடியாதாகலின் உடல் நலனும் நாளா வட்டத்திற் குறைகிறது. இன்னும் வேலையின்திறனும் சுறு சுறுப்புங் குன்றுகிறது. இஃதுண்டாவதற்கான கெட்ட பழக்கங்கள் பல. அவையாவன :—(அ) படித்தல், எழுதல், தைத்தல், நடக்தல் முதலிய வேலைகளைச் செய்யும்போது தலையைக் குனிந்துகொண்டு முதுகை வளைத்துக்கொண்டு செய்தல் (ஆ) சாய்மான நாற்காலி (Easy Chair)யில் எப்பொழுதும் அல்லது மிக்கநேரம் சாய்ந்திருத்தல் (இ) வேண்டிய அளவிற்குக் குறைந்த உயரமுடைய எழுதுபலகை (Table) யின்மேல் தாளை வைத்துக் கொண்டு எழுதல், அல்லது படித்தல், அல்லது வேலை செய்தல்(ஈ) ஆடை தோய்த்தல், மண்வெட்டல் முதலிய குனிந்து கொண்டு செய்யவேண்டிய வேலைகளைக் கூனிக்கொண்டு செய்தல். இவ் வேலைகளைச் செய்கையில் முள்ளந்தண்டுக் கூட்டை நிமிர்த்திக் கையினுல் மட்டுமன்றி விலா முதுகு நெஞ்சுத் தசைகளின் உதவியினுலும் செய்வதே வலிவைக் கொடுப்பதன்றி எளிதிற் களைப்படையவுஞ் செய்யாது. (உ) உயர்ந்த குதியுடைய செருப் பணிதல். இக்கொடிய பழக்கம் மேனுட்டு மகளிரிடத்து மிகுதி. (ஊ) இடுப்பை நெருக்கும்படி ஆடையணிதல். இப்பழக்கமும் அன்னுரிடத்தே குடிகொண்டுளது. (எ) முதுகுத்தசைகள் தக்க பயிற்சியின்றி வலிவற்றிருத்தல். இத்தசைகள் தண்டுக்கூட்டை யும் நெஞ்சையும் நிமிர்த்தி வைத்திருக்கும் வேலையுங்கூட அடை யாதபடி நாம் கூனிக்கொள்ளுகிறோம். (5) இம்முன் கூனலன்றி முள்ளந்தண்டுக்கூட்டில் பக்கவளைவும் சில கொடிய பழக்கங்களால் சிலருக்கு உண்டாகிறது. இஃதுண்டாம் விதம் :—(அ) வேண்டிய அளவிற்குமேல் உயர்ந்த எழுதுபலகையின் மேல் தாளைவைத்துக் கொண்டு எழுதல் (ஆ) வழக்கமாக ஒரு கையாலேயே பளுவான பொருள்களைத் தூக்கிச் செல்லல். (இ) தலையை ஒருபக்கமாகவே சாய்த்துக்கொண்டிருத்தல் முதலியனவாம்.

ஒழுங்காக உட்கார, நிற்க, வேலை செய்யத் தெரியாதோர்:— நமது கோயில்களிலுள்ள சிலைகள் ஒழுங்காய் நின்று கொண்டும்

உட்கார்ந்து கொண்டுமிருத்தலைப் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு முதியோராயினும் இதைக் கற்போர் ஒவ்வொருவரும் (சொல்லுவது புதுமையாயிருப்பினும்) அச்சிலைகளைப்போல் முறைப்படி உட்கார, நிற்க, வேலை செய்யப் பழகுதல் வேண்டும். மேற் கண்ட தீய பழக்கங்களில் எது தமக்கிருக்கிறதென ஆராய்ந்து அதை மாறு எதிர்ப்பழக்கத்தால் நீக்கவேண்டும். இவ்வெதிர்ப் பழக்கம் மறதியால் விடப்படுமாகையால் அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டு இருந்தவேண்டும். எப்பொழுதும் தலையை நிமிர்த்தி, மார்பை முன்னுக்கி, தோள்களை உயர்த்தி விரியச்செய்து, வயிற்றை உள்ளடக்கி, தண்டுக்கூட்டை கோணுது இருக்கப் பழகவேண்டும். வலிவற்ற முது நத்தசைகள் வலிவடையும்படி தக்க பயிற்சிகள் (Exercises) செய்ய வேண்டும். முன் கூனலுடையோர் தலைக் கணையின்றி மல்லாந்து தூங்கப் பழகுவரேல் கூனல் நிமிரும். இளமையிலேயே தீய பழக்கங்களை நீக்கி நற்பழக்கங்களைக் கையாளுவதே எளிது.

எலும்பு முறிவிற்கு முதலுதவி:—எலும்பு முறிவின் வகை யிரண்டு. ஒன்று வெற்றெலும்பு முறிவு (Simple Fracture); மற்றையது எக்கச்சக்கமான எலும்பு முறிவு (Compound Fracture). முதல் வகையில் எலும்பு முறிந்து தசைக்குள்ளேயே யிருக்கும். இரண்டாவது வகையில் முறிந்த எலும்பு தசையைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிடும். இப்பிந்தியதால் குருதி ஒழுக்கு ஏற்படுவதுடன் காயத்தில் காற்றுப் படுவதால் சீழ்கோத் துக் கொள்ளுங் கெடுதியடையக் கூடியது. எலும்பு முறிவின் அடையாளங்களாவன:—அவ்விடத்துவலி, வீக்கம் உண்டாதல்; முறிந்து தொங்கும் பங்கு செயலற்றுப்போதல், அவ்விடம் ஒழுங் கினமாயும், குறுகியுமிருத்தல்; ஆடக்கூடாத விடத்தில் ஆட்ட முண்டாதல்; அசைவுண்டாம்பொழுது கொர கொரப்புண்டாதல் முதலியனவாம். எலும்பு முறிந்தவனை இருந்த விடத்திலிருந்து அப்புறப் படுத்தவே கூடாது. ஏனெனில் முறிந்து தொங்கும் பங்கு ஆடுவதால் கெடுதிமிகும். இருந்த விடத்திலேயே இருக்கும் பொழுதும், தொங்கும் பங்கு அசையாதபடி தாங்கவேண்டும்.

எக்கச் சக்கமான எலும்பு முரிவாயின் உடனே குருதி ஒழுக்கை நிறுத்தவேண்டும். (நிறுத்தும் விதத்தைப் பின்னுற் பார்க்க) பின்னர் எலும்புத்துண்டுகள் ஒன்றின்மேலொன்று ஏறி ஒழுங்கின்றியிருந்தால் சிறிது இழுத்து நேராக்க வேண்டும். பின்னர் சப்பைவைத்துக் கட்டவேண்டும். சப்பைக்காகும் பொருள்களோ எண்ணில. கைப்பிரம்பு, குடை, செருப்பு, காற்றடிக்கும் ஏற்றம் (Cycle Pump), மொத்த அட்டை, மொத்தமாய் மடித்த புதினத்தாள் (News paper) முதலிய கைக்கு அகப்படும் பொருள் எவற்றையேனும் பயன் படுத்தலாம். இவ்வாறே கட்டுவதற்குக் கயிறு சடுதியில் அகப்படாவிடின் கைக்குட்டை, சிறு துண்டு, கச்சை, கழுத்துப்பட்டி முதலியவைகளும் பயன் படும். கட்டும் பொழுது சப்பைகள் மெதுவாயிருக்கும்படி அவைகளுக்குத்துணி சுற்றல் வேண்டும். நிலையுள்ள பங்கைக்கட்டிவிட்டுத்தான் தொங்கும் பங்கைக் கட்டவேண்டும். குருதியோட்டம் நின்று போகும்படி அவ்வளவு இறுக்கிக் கட்டலாகாது. இடத்திற்குத்தக்கவாறு ஒன்று அல்லது இரண்டு சப்பைபட்டுக் கட்ட வேண்டும். இவ்வாறு கட்டப்பட்டது கையாயின், கழுத்தில் தொட்டில் கட்டி அதிற்கையை மடித்துத் தொங்கவிட வேண்டும். அப்பொழுது தான் கைப்பாரம் முரிவில் உறைக்காது.

மூட்டு நழுவு (Dislocation) தாடை, தோள், முழங்கை இவ்விடத்து ஏற்படும். இதன் அடையாளங்கள் வெற்றெலும்பு முரிவை ஒத்தேயிருக்கும். ஆனால் ஆடக்கூடாவிடத்தில் ஆட்டமும், ஆடும் பொழுது கொர கொரப்பும் உண்டாகாது. இதை மருத்துவரால்தான் சரிப்படுத்த முடியும். நாம் ஒருக்காலும் சரிப்படுத்த முயலலாகாது. எனினும் மிகக் குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் ஒத்தலாம்.

குருதிக்கட்டு (Sprains) யாதேனும் ஒரு மூட்டின் எலும்புக் கயிறுகள் அறுவதால் உண்டாகிறது. இதனால் அவ்விடத்து வலி, வீக்கம், நிறம் மாறல் (கறுப்பாதல் அல்லது சிவத்தல்) உண்டாகின்றன. இதற்கு அவ்விடத்தை அசைக்காதிருத்தலும் குளிர்நீர் ஒத்துக்கொடுத்தலுமே நலம். குருதி கட்டிய விடத்தை உயர்த்தி வைத்திருக்க வேண்டும்.

தொடரும்.

316

உ

திருச்சிற்றம்பலம்.

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

## முகவுரை.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி என்னும் இவ்வரிய நூலை இயற்றியருளிய பெரியார், பெயர், காலம், குடி முதலிய வற்றில் ஒன்றேனும் நன்கு புலப்படவில்லை. என்றாலும் இந் நூலிற் கூறியுள்ள பொருளையும், செய்யுள் நடை, பொரு ளமைதி, அலங்காரம் முதலியவற்றையும் நோக்குழி, இவர் சைவத்தில் மிகப்பற்றுடையார் என்பதும், தேவாரம் திரு வாசகம் முதலிய திருமுறைகளையும், சைவபுராணங்களையும் நன்கு கற்றறிந்தவர் என்பதும், தமிழில் மிகுந்த பாண்டித்தியம் உடை யவர் என்பதும் போதரும்.

திருவிருத்தம், சடகோபரந்தாதி, அழகர் கலம்பகம் முதலிய வைணவ நூல்களிற் சில அருமையான கருத்துக்களையும் செய்யுள் அடிகளையும் இந்நூலில் ஆங்காங்கு அமைத்திருப்பதால், இவர் வைணவ நூல்களிலும் நன்கு பழக்கமுடையவர் என்பதும் வெளியாகின்றது.

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளுஞ் செறிந்து திட்பநுட்பம் வாய்ந்த செய்யுட்கள் பல இந்நூலில் திகழ்வது அறிஞரால் பாராட்டற்பாலதாம்.

சில்லாண்டுகட்கு முன்பு, எனது தந்தை பண்டிதர் "பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியரா"ல் ஒரு விரிவுரையுடன் வெளி யான இந்நூலை, மறுமுறை "தமிழ்ப் பொழில்" வாயிலாக ஒரு குறிப்புரையுடன் வெளியிடலானேன்.

இவ்வரிய முயற்சியில், எனக்குக் கடைபோகு மட்டும் தோன்றாத் துணையாய் இன்னருள் சுரந்து நின்ற, பன்னருஞ் சீர்த் திருமேனி நாதனது அடித்தாமரைகளை, மனமொழி மெய் களாற் பணிகின்றேன்.

இங்ஙனம்,

கி. அரங்கராசன்.

317

உ

திருச்சிற்றம்பலம்.

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

## காப்பு.

நிறமுற்ற மாச்சுழியல் நின்மலற்கோர் மாலை
திறமுற்ற வெண்பாவாற் செய்ய—அறமுற்ற
ஆலமர்ந்தான் போலிங் கரசமர்ந்த அத்தியுமென்
றாலமர்ந்தான் செஞ்சொற் றரும்.

நிறமுற்ற மாச்சுழியல்—ஒளிபொருந்திய திருச்சுழியல். திருமாலினது மார்பிலே உறைகின்ற ஸ்ரீதேவி வாசம் செய்யும் திருச்சுழியல் எனினுமாம். நிறம்—மார்பு. அறம்முற்ற—சனகாதி நால்வர்க்குத் தருமங்களை உபதேசிப்பதற்காக. றாலமர்ந்தான்—முற்றெச்சம்.

## நூல்.

க. பொன்னார் சுழியற் புனிதா! சரணென்று
மின்னார் சடையுடைய மெய்ப்பொருளைச்—சொன்னார்
புலையரே யானாலும் புண்டரிகக் கண்ணன்
தலையரே யாவரவர் தாம்.

பொன்னார் சுழியற் புனிதா—ஸ்ரீதேவி உறைகின்ற திருச்சுழியலில் எழுந்தருளியிரா நின்ற பரிசுத்தனே. இனி, பொன்னார் புனிதா என இயைத்து, பொன் போன்ற என்றும் பரிசுத்தனாயிருப்பவனே, எனப் பொருள் கொள்ளலுமாம். மின்னார் சடை—மின்னற் கொடிபோன்ற சடை; மின்னற் கொடிபோன்ற கங்காதேவியார் உறைகின்ற சடை எனலுமாம். புண்டரிகக்கண்ணன் என்பதற்கு இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் புண்டரீகம் போன்ற கண்களையுடைய திருமால் என்றும், புண்டரீகத்தின்கண்

வீற்றிருக்கும் பிரமன் என்றும் இருபொருள் கொள்க. இச் செய்யுளை "சங்கநிதி பதுமநிதி" என்னும் அப்பர் தேவாரத் தோடு ஒப்புக் காண்க.

உ. தாம்பினாற் கட்டுண்ட தாமோ தான்வாழ்வும்
போம்பினல் நெஞ்சே! புகழ்ந்திறைஞ்சி—ஓம்பினல்
கற்கின்ற சீர்ச்சுழியற் காளையார் தந்தருள்வர்
நிற்கின்ற செல்வம் நினக்கு.

தாமோதரன்—வயிற்றில் கயிறுடையான், எனவே கண்ணன்.

"தாம்பினாற் கட்டுண்ட தாமோதரன்" என்பது "ஆழாழி" "அடியளந்தான் தாஅயதெல்லாம்" என்பனபோல வந்தது. "மதகரிகாமும்" என்ற கம்பராமாயணமும் காண்க.

திருமாலைத் தாம்பினாற் கட்டுண்டான் என்றதனால், சிவபெருமான் பக்தி வலையானன்றி மற்றொன்றால் கட்டுப்படான் என்பது பெறப்படும். ஓம்பினல்—துதித்தால். நிற்கின்ற செல்வம்—முக்தி. பின்னல் என்பது பினல் எனத் தொக்கது.

ங. நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும்
உன்னை யடியேன் உளம்வைத்தாய்—என்னில்
எனக்கினியான் ஆனாய்; எழிற்சுழியல் நாதா!
உனக்கினியான் செய்வ துரை.

என்னில்—என்னைக்காட்டிலும். அவனருளாலே யவன்றாள் வணங்கல் வேண்டுமேயன்றிச் சீவகோடிகள் தம்மறிவின் செறிவினால் அவனைக்கண்டு வணங்கியுய்தல் கூடாமையை விளக்குவார் நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும் என்றார் என்க. முதலடி முற்றுமோனை.

ச. உரையார் தெரிந்திரார்? ஒண்சுழியல் நாதா!
திரையார் சடைவனத்தைச் செந்தாள்—மரையை
அயன்கோலங் கொண்டானேல் ஆழிமால் அன்ன
வியன்கோலங் கொண்டானேல் வேறு.

ஒண்சுழியல் நாதா! வேறு அயன்கோலங் கொண்டானேல் ஆழிமால் அன்னம் வியன் கோலங் கொண்டானேல் இரையார் சடைவனத்தைச் செந்தாள் மரையை யார் தெரிந்திரார்? உரை. என இச்செய்யுட்கு உரைநடை காண்க.

வனத்தை வராகமும், தாமரையை அன்னமும் அறியும். இது அறியாமல், பிரமனாகிய அன்னம் சடை வனத்தையும் மாலாகிய பன்றி தாட்டாமரையையும் தேடப்புக்கதனாலன்றோ காணமாட்டாமல் மயங்கின; பிரமதேவன் பன்றியாகமேலே சென்றிருந்தால், திருமால் அன்னமாகக் கீழே சென்றிருந்தால் நினது சடை வனத்தையும், திருவடித்தாமரையையும் முறையே கண்டிருப்பார் என்பது இச்செய்யுளிற் கூறிய பொருள்.

ரு. வேறு படுமுடலை வேண்டீர் வெறுப்பிரேற்
சேறு படுகொன்றைச் செஞ்சடையான்—பேறு
தருஞ்சுழிய னாதன் சரணடைமி னில்லைப்
பெருஞ்சுழிய லாழிப் பிறப்பு.

வேறுபடும் உடலை—பல்வேறு வகைப்படுகின்ற சரீரத்தை. இனி வேறுபடும் முடலை என எடுத்து—சீவாத்மாவைப் பரமாத்மாவுக்கு அடிமை செய்ய வொட்டாது வேறு தீய வழியிலே படுக்கும் சரீரத்தை எனினுமாம். முடலை-முறுக்கு; இங்கே முறுக்குண்ட சரீரத்துக்கு ஆகுபெயர். சேறு-தேன். இது இப்பொருளாதலை "சேறு நாற்றமும் பலவின் சுளையும்" என்ற மதுரைக்காஞ்சியானும் "சேறுபடுமலர்" என்ற சிந்தாமணியானும் அறிக.

சு. பிறனில்லைக் காதலிக்கும் பேதையேன் செய்த
தறனில்லைச் செய்யாத தந்தோ!—மறனில்லை
என்னையுங் கொண்டான் றிருமேனி யெம்பெருமான்
அன்னையும் தானா யணைத்து.

செய்தது அறனில்லை—செய்ததாகிய சிவதருமம் (ஒன்றேனும்) இல்லை. என்னையும்-நல்லன நீத்தும் (அல்லன கொண்டும் பாவியான) அடியேனையும். சிவபிரான் அர்த்த நாரீச்சுரராகலான், "அன்னையும் தானும்" என்றார் என்க.

## அன்னமோடழிதல்.

௭. துணைமாலை பாகனுக்கென் சோர்வெல்லாஞ் சொல்லீர்
இணைமாலைப் பேடைதழீஇச் செல்வீர்—கணைமாலை
போழ்வதோ பாரீர் பொலஞ்சிறைய அன்னங்காள்!
தாழ்வதோ பெண்டுதூ தான்.

இணைமாலை—நற்குடிப்பிறப்பால் வந்த இயல்பினையுடைய. கணை-மன்மத பாணங்கள். மாலை-மாலைக்காலத்தில்.

துணைமாலை பாகன் என்றது, ஒரு பாகத்தில் தேவியிருக்கின்றானாதலின் அவள் அறியாமற் கூறவேண்டும் என்று குறிப்பதற்காக வென்க. ஆற்றலின்மை கூறி மறுத்தற்கிடனில்லை என்பாள் "பொலஞ்சிறைய அன்னங்காள்" என்று விளித்தாள். நுங்காரியமாகச் செல்லும் போது என் காரியத்தையும் சிறிது செய்யவாமே, என்று குறிப்பாள் "பேடைதழீஇச் செல்வீர் என்றாள். தூதற்கு உயர் குடிப்பிறப்பும் இலக்கணமாதல் பற்றித் திணைமாலைப் பேடை தழீஇ என்றாள்.

இச்செய்யுளை

"இன்னென்ன தெம்மை யாளற்றப் பட்டிரந் தாளிவளேன்
றன்னன்ன சொல்லாப் பெடையொடும் போய்வரு நீலமுண்ட
மின்னன்ன மேனிப் பெருமா னுலகிற்பெண் டூதுசெல்லா
வன்னன்ன நீர்மைகொ லோகுடிச் சீர்மையி லன்னங்களே"

என்ற நம்மாழ்வார் பாசுரத்தோடு ஒப்புக்காண்க. பொன்+சிறை = பொலஞ்சிறை. இப்புணர்ச்சி "பொன்னென் கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ், செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதியால் முடிந்தது. நன்னூல் விதியின்படி பொலம்+சிறை எனப்பிரித்துப் புணர்க்க.

தொடரும்.